# வழிபாட்டு மரபியல் சமய ஒருமைப்பாடு



முனைவர் சி.சுந்தரேசன்

UG7267

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

# வழிபாட்டு மரபில் சமய ஒருமைப்பாடு

முனைவர் **சி.சுந்தரேசன்**
துறைத்தலைவர்
உதவிப்பேராசிரியர்

நாட்டுப்புறவியல் துறை
**தமிழ்ப் பல்கலைக்கழகம்**
தஞ்சாவூர்- 613 010

ஏப்ரல் - 2016

ISBN : 978-81-7090-462-5

**தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 419**

திருவள்ளுவர் ஆண்டு 2047 ஆவணி, செப்டம்பர் 2016

| | | |
|---|---|---|
| நூல் | : | வழிபாட்டு மரபில் சமய ஒருமைப்பாடு |
| ஆசிரியர் | : | முனைவர் சி. சுந்தரேசன் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு 2016 |
| பக்கம் | : | 124 |
| தாள் | : | TNPL மேப்லித்தோ 16 கிலோ |
| அளவு | : | கிரௌன் 1 x 4 |
| நூற்கட்டு | : | சாதாகட்டு |
| விலை | : | ரூ. 180.00 |
| படிகள் | : | 500 |
| வெளியீடு | : | தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் |
| அச்சு | : | மாணிக்கம் பிரிண்டர்ஸ், தஞ்சாவூர் |

முனைவர் **க. பாஸ்கரன்**
துணைவேந்தர்

மின் அஞ்சல் : rg.bhaskaran@gmail.com
இணையதளம் : www.tamiluniversity.ac.in

**தமிழ்ப் பல்கலைக்கழகம்**
தஞ்சாவூர்–613010 – தமிழ்நாடு, இந்தியா
அலுவலகம் : 04362-227040
இல்லம் : 04362-226741
நிகரி : 04362-226159

## அணிந்துரை

உலகம் முழுவதும் அமைதி நிலவ வழிபாட்டு மரபில் சமய ஒருமைப்பாடு அவசியத் தேவையாகும். இக்காலத் தேவையை நிறைவு செய்யும் உயர்ந்த நோக்கில் நாட்டுப்புறவியல் துறைத்தலைவர் முனைவர் சி.சுந்தரேசன் இந்த ஆய்வை நிறைவு செய்துள்ளார்.

அனைத்து மதங்களும் அதன்பின் மீதே கட்டமைக்கப்பட்டுள்ளன என்ற உண்மையை உணர்ந்து கொள்ளத் தவறியவர்களால் தான் சமயப் பூசல் உண்டாகிறது. ஆனாலும் அனைத்து மதங்களிலும் பெரும்பான்மையோர் அமைதியை விரும்புவர்களாகவும் கருணை நிறைந்தவர்களாகவும் இருப்பதால் சமய ஒருமைப்பாடு இந்த மண்ணில் சாத்தியமாகிறது.

எந்த மதத்தை மனிதன் பின்பற்றினாலும் அதன்மூலம் அவன் முன்னேற்றம் அடைய வேண்டும். இந்தப் பிரபஞ்ச வாழ்க்கை மனிதனுக்கு நித்திலமானதன்று. இதைக் கடந்து அவன் அப்பால் போக வேண்டும் எனும் கோட்பாட்டை இவ்வாய்வு அழுத்தமாக முன்வைக்கிறது.

சமயங்களிலும் பண்பாடுகளிலும் ஏற்படும் கலப்பு சமய ஒருமைப்பாட்டுக்குத் துணைநிற்பதை இவ்வாய்வு முறையாக முன் வைக்கிறது.

நாட்டுப்புறவியல் தமக்குள்ள நீண்ட அனுபவங்களைப் பயன்படுத்தி இந்தச் சிறந்த ஆய்வுநூலைப் படைத்தளித்த முனைவர் சி. சுந்தரேசன் அவர்களைப் பாராட்டி மகிழ்கிறேன்.

(க. பாஸ்கரன்)

# நன்றியுரை

தமிழக அரசின் நல்கைத் திட்டத்தின் வழி மேற்கொள்ளப்பட்ட வழிபாட்டு மரபில் சமய ஒருமைப்பாடு என்னும் பொருண்மையில் அமைந்துள்ள ஆய்வினை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் நூலாக கொண்டு வந்து தமிழ்கூறும் நல்லுலகிற்கு மேலும் அணிசேர்த்துள்ள எம் பல்கலைக்கழக ஆற்றல்சார் மாண்பமை துணைவேந்தர் முனைவர் க.பாஸ்கரன் அவர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகள் பலகோடி.

வழிபாட்டு மரபில் சமய ஒருமைப்பாடு எனும் சமுதாய நலம் சார்ந்த இந்த ஆய்வுத் திட்டத்தை எமக்களித்து நெறிப்படுத்திய முன்னைத் துணைவேந்தர் வணக்கத்திற்குரிய முனைவர் ம.திருமலை ஐயா அவர்களை நன்றியோடு வணங்கி மகிழ்கிறேன்.

இந்த ஆய்வு முழுமையாக நிறைவு பெற உதவிய எம் துணைவியார் திருமதி விசயராணி சுந்தரேசன் அவர்களின் செயல் நாளும் நினைத்தற்குரியது.

நாட்டுப்புறவியல் துறை ஆய்வாளர்கள் முனைவர் பூ. லலிதாபாலா, முனைவர் க. முத்தழகி, சா. பிரபா, மு. இராதிகா, பா. மாதவவேலன், பு. புவனேஸ்வரி, செ. செல்லம்மாள் மேலும் இவ்வாய்விற்கு தேவையான தரவுகளை வழங்கிய தகவலாளர்கள் மற்றும் கணினியாளர் திருமதி சுமதி முதலானவர்களின் உதவி களப்பணிக்குப் பெரிதும் துணைபுரிந்தன.

நல்ல முறையில் நூலாக்கம் செய்தளித்த தஞ்சாவூர் மாணிக்கம் அச்சகத்தாருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றியினைப் பதிவு செய்து மகிழ்கிறேன்.

**( சி. சுந்தரேசன் )**

# பொருளடக்கம்


| இயல் | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை. | vii |
| 1 | இந்துக்கள் வழிபாட்டு மரபில் சமய ஒருமைப்பாடு | 1 |
| 2 | கிறித்தவர்கள் வழிபாட்டு மரபில் சமய ஒருமைப்பாடு | 29 |
| 3. | இசுலாமியர்கள் வழிபாட்டு மரபில் சமய ஒருமைப்பாடு | 61 |
| | துணைநூற்பட்டியல் | 109 |
| | வினாநிரல் | 85 |
| | நிழற்படங்கள் | 91 |

# முன்னுரை

# முன்னுரை

இந்தியாவில் இனம், மதம், மொழி எனப் பல நிலைகளில் மக்கள் பல்வேறு பிரிவுகளைக் கொண்டவராய் இருப்பினும் வேற்றுமையில் ஒற்றுமையாய் வாழப் பல்வேறு காரணிகள் துணைபுரிகின்றன. அவற்றுள் ஒன்று வழிபாடு. ஒரு மதத்தாரின் வழிபாட்டு மரபில் மற்றொரு மதத்தினர் ஈடுபட்டு ஒற்றுமையை நிலைநாட்டுகின்றனர். இதனால் சமயங்களுக்கு இடையே ஒருமைப்பாடு உருவாகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு ஆய்வதாக இந்த ஆய்வானது அமைகிறது. மேலும் ஆய்வானது மூன்று இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. இந்துக்கள் வழிபாட்டு மரபில் சமய ஒருமைப்பாடு

2. கிறித்தவர்கள் வழிபாட்டு மரபில் சமய ஒருமைப்பாடு

3. இசுலாமியர்கள் வழிபாட்டு மரபில் சமய ஒருமைப்பாடு

'இந்துக்கள் வழிபாட்டு மரபில் சமய ஒருமைப்பாடு' என்னும் இயலில் இந்துக்களின் கோயில்களில் கிறித்தவ, இசுலாமிய மக்கள் சென்று வழிபடும் விதம் குறித்து விளக்கப்பட்டுள்ளது. மேலும் இதற்கான ஆய்வுக் களமாகத் தஞ்சாவூர் புன்னைநல்லூர் மாரியம்மன் கோவில், திருவோணம் மாரியம்மன் கோவில் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.


இரண்டாவது இயலான 'கிறித்தவர்களின் வழிபாட்டு மரபில் சமய ஒருமைப்பாடு' பிற சமயத்தாரின் ஒருமைப்பாட்டு நிலையைக் கிறித்தவர்களின் ஆலயங்களின்வழி விளக்குவதாய் அமைந்துள்ளது. இதற்காகப் பூண்டி புதுமை மாதா பேராலயமும் மன்னார்குடி வட்ட தென்னிந்திய திருச்சபையும் ஆய்வுக்களமாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

மூன்றாவது இயலான 'இசுலாமியர்கள் வழிபாட்டு மரபில் சமய ஒருமைப்பாடு' என்னும் இயல் இசுலாமியர்களின் தர்கா என்னும் வழிபாட்டுத் தலத்திற்குப் பிற மதத்தாரின் வருகையும் வழிபாடும் குறித்து ஆராயப்பட்டுள்ளது. களப்பணிக்காகத் தஞ்சாவூர் இரட்டை மஸ்தான்

தைக்கால், அலிஷா சித்தி தைக்கால், நாஞ்சிக்கோட்டை பட்டாணி இராவுத்தர் வழிபாடு, நடுக்காவேரி ஓதுகான் அவுலியா, தஞ்சாவூர் துலுக்கம்பட்டி, குண்டுதைக்கால்-புதுப்பட்டினம், குயவன்தர்கா-கீழவாசல் போன்ற தைக்கால்கள் (தர்கா) தேர்ந்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

வழிபாட்டு மரபில் சமய ஒருமைப்பாடு ஏற்படுவதனால் உண்டாகும் நன்மைகள் ஆராயப்பட்டுள்ளன. சமயக் கலப்பு, பண்பாட்டுக் கலப்பு, இதனால் சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்கள் குறித்தும் முடிவுரையும் தெரிவிக்கப்பட்டுள்ளன

இயல் -1



இந்துக்கள் வழிபாட்டு மரபில் சமய ஒருமைப்பாடு

இயல் - 1

# இந்துக்கள் வழிபாட்டு மரபில் சமய ஒருமைப்பாடு

## முன்னுரை

இந்தியத்திருநாட்டில் பல்வேறு மதம், இனம், மொழி தோன்றியுள்ளன. மக்கள் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று தங்களது குடிகளை நிலை நாட்டியுள்ளனர். பல்வேறு இனம், மொழி, சாதி அடிப்படையில் மக்கள் வாழ்ந்தாலும் இந்தியத்திருநாட்டில் இந்தியா, இந்தியர், இந்தியன் என்ற ஒருமைப்பாட்டுடன் வாழ்ந்து வருகின்றனர். இந்தியத்திருநாட்டில் புகழ்வாய்ந்த இந்துக் கோவில்களும் கிறித்தவ புனித மடாலயங்களும், இசுலாமிய மசூதிகளும் பரவலாக நிறைந்து காணப்படுகின்றன. இந்த அடையாளங்கள் பலவிதமான இந்தியப் பாரம்பரியத்தை வெளியுலகிற்கு எடுத்துக்காட்டிப் புகழ் சேர்க்கின்றன.

மக்கள் மதத்திற்கான அடையாளங்களைத் தாங்கள் குடியிருக்கும் பகுதிகளில் அமைத்து வழிபடுகின்றனர். அவர்களது வழிபாட்டில் தங்களது இனம் மொழி, மதம் என்று பாராமல் மக்கள் அனைவரும் ஒன்றுபடுகின்றனர். தற்போது தமிழகத்தில் நடைபெறும் பல்வேறு திருவிழாக்களில் இந்து மக்கள், கிறித்தவ தேவாலயத்திற்கும் கிறித்தவ மக்கள் இந்துக் கோவிலுக்கும் சென்று வருகின்றனர். இன்றைய காலக்கட்டத்தில் ஒற்றுமையில் வேற்றுமைப் பாராமல் வேற்றுமையில் ஒற்றுமை காண்கின்றனர்.

## புன்னைநல்லூர் மாரியம்மன் கோவில்

தஞ்சை திருவாரூர் சாலையில் தஞ்சாவூரிலிருந்து 5 கி.மீ. தொலைவில் புன்னைநல்லூர் என்ற ஊர் உள்ளது. அருள்மிகு முத்துமாரியம்மன் பெயரால் இவ்வூர் மாரியம்மன் கோவில் என்றும் அழைக்கப்படும் சிறப்பிற்குரியது. துளஜா, இரண்டாம் சரபோசி மன்னர்கள் காலங்களில் இவ்வூர் மாரியம்மாள்புரம் என்று வழங்கி வந்துள்ளது. சோழேந்திர விஜயம் என்ற வடமொழி நூலில் இவ்வூர் குறித்த குறிப்பு இடம்பெற்றிருக்கிறது.

## தல அமைப்பு

அருள்மிகு புன்னைநல்லூர் முத்துமாரியம்மன் கோயில் கிழக்கு நோக்கிய சன்னதியைக் கொண்ட ஐந்து கோபுரங்களோடும், நான்கு திருச்சுற்றுகளோடும், இரண்டு தீர்த்தங்களோடும் அமைந்துள்ளது. சன்னதியின் தெற்கு முகப்பு, நிலையில்

தீர்த்தமும், தீர்த்தத்திற்குத் தெற்கே அருள்மிகு கல்யாணசுந்தரி உடனுறை கைலாசநாதர் கோயிலும், கோயிலின் வடமேற்கு நிலையில் மிகப் பிரசித்திப்பெற்ற சாளக்கிராமத்திலான அருள்மிகு கோதண்டராமர் கோயிலும் அமைந்துள்ளனன. புன்னைநல்லூரைச் சுற்றிலும் எட்டுச் சக்திகள் காவல் தெய்வங்களாக உள்ளன. கோயிலின் கிழக்கு நோக்கிய சன்னதியில் முகப்பு நுழைவாயிலும் முகப்புக் கோபுரமும் உள்ளன. இதனைத் திரைப்பட நடிகை திருமதி வைஜெயந்திமாலா கட்டித் தந்துள்ளார். இக்கோபுர நுழைவாயில் வழியாக உள்ளே சென்றதும் இரண்டாம் சிவாஜி மன்னர் காலத்தில் கல்காரம் மட்டும் கட்டப்பட்டிருந்த நிலையில் இன்று ஏழுநிலை கொண்ட இராஜகோபுரம் எழுப்பப்பட்டுள்ளது. இக்கோபுரத்தைச் சிங்கவளநாட்டு மக்கள் சிறப்புறக் கட்டித் தந்துள்ளனர். அடுத்து இரண்டு இராஜகோபுரங்களும் கர்ப்பக்கிரகமும் அமைந்துள்ளன. நுழைவாயிலின் தெற்குப் புறத்தில் விநாயகரும், விநாயகரை ஒட்டி பூர்ணபுஷ்கலா சமேதரான அய்யனார் திருவுருவம், சியாமளாதேவி, நாகத் திருவுருவங்களும் உள்ளன. வடக்குப் புறத்தில் சுப்பிரமணியர், விநாயகர் திருவுருவங்கள் உள்ளன. இந்த இறை மூர்த்தங்களை வழிபட்டு உள்ளே சென்றதும் கம்பீரமான கொடிமரம் உள்ளது.

கொடிமரத்தின் கிழக்குப் பகுதியில் அன்னபட்சியுடன் கூடிய அம்பிகை திருவுருவமும், தெற்கில் விநாயகர் திருவுருவமும், மேற்கில் சிம்மவாசினி திருவுருவமும், வடக்கில் வள்ளி தெய்வானை உடனுறை முருகப்பெருமான் திருவுருவமும் எழிலுறக் காட்சியளிக்கின்றன. இக்கொடிமரம் தற்பொழுது புதுப்பிக்கப்பட்டு எழில்பெறக் காட்சியளிக்கிறது. கொடிமரத்தின் இரு புறங்களிலும் அம்பிகையை நோக்கியவாறு தவஞானி சதாசிவபிரமேந்திரரின் திருவுருவமும், இக்கோயிலின் திருச்சுற்று மாளிகையை அமைத்துத் தந்த துளஜா மன்னரின் திருவுருவமும் உள்ளன. கொடிமரத்திற்கு அருகில் பலி பீடமும் ஆகாசலிங்கமும் உள்ளன.

இவற்றைத் தாண்டி நான்காம் கோபுர முகப்பின் மேலே அம்பிகையின் அருள்காட்சித் திருவுருவம் அழகுறக் காட்சியளிக்கிறது. இச்சுற்றைத் தாண்டி அமைந்துள்ள மண்டபத்தில் பக்தர்களின் அடியார்களது பெருந்திரளான வழிபாட்டின் பொருட்டு அழகுற அம்பிகையின் படிமம் உள்ளது. மிக நேர்த்தியுடன் அலங்கரிக்கப்பட்டுள்ள இச்சன்னதியில் தேங்காய், பழ அர்ச்சனைகள் செய்யப்பட்ட பின் பக்தர்கள் மூலத் திருவுருவை வணங்கிட உள்ளே செல்கின்றனர். மூலவர் மகான் சதாசிவ பிரம்மேந்திரரால் புற்றுமண்ணால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மூலவர் முத்துமாரியம்மனின் திருவடிக்கீழ் அற்புதமான இயந்திரம் உள்ளது. மூலவர் கருவறையின் இடதுபுறத்தில் அலங்கரிக்கப்பட்ட சிறிய சிம்மாசன

மேடையில் (உற்சவர்) சிம்மாசனமூர்த்தியாக விளங்குகிறார். கருவறையின் வாயிலில் தென்புறத்தில் வடக்குத் திசையை நோக்கிய நிலையில் மூலவருக்காக அபிசேகம் ஏற்றுக்கொள்ளும் விஷ்ணுதுர்க்கையும், அபிடேக மூர்த்தமும் இயந்திரமும் உள்ளன. இவ்வழிபாடு முடித்து வலம் வரும்பொழுது கருவறையைக் குளிர்விக்கும் பொருட்டுத் தண்ணீர் தொட்டியும் உள்ளது.

கருவறையின் திருச்சுற்று மேற்குச் சுவரில் அருள்மிகு பாடகச்சேரி சுவாமிகளின் திருவுருவம் கண்ணாடிப் பேழைக்குள் எழுந்தருளச் செய்யப் பெற்றுள்ளது. அருகில் கோயம்புத்தூரில் பிறந்து பாடகச்சேரியை இருப்பிடமாகக் கொண்டு அங்கே ஸ்ரீபாலதண்டாயுதபாணி ஆலயத்தை நிறுவின பைரவ உபாசகராய் இருந்த சுவாமிகளின் வரலாறு எழுதப் பெற்றுள்ளது. இவர் தமது தவசித்தியினால் திருநீறு அளித்து மக்களின் தீராத நோய்களை நீக்கிக் குறைவிலா அன்புதானம் செய்தார். புன்னைநல்லூர் ஸ்ரீமாரியம்மன் ஆலயத் திருப்பணியையும் செய்தார். இத்திருப்பணி நிறைவுற்று 03.07.1950 அன்று குடமுழுக்கு நடைபெற்றது என்ற குறிப்பு காணப்படுகிறது.

இத்திருக்கோயிலின் இரண்டாம் திருச்சுற்றின் தென்கிழக்குப் பகுதியில் அருள்மிகு பேச்சியம்மன் சன்னதி உள்ளது. பேச்சியம்மன் கல்வி, கலைகளின் தெய்வமாக, சரசுவதி அம்மனின் மறு அவதாரமாக விளங்குகிறார். பேச்சியம்மனோடு மதுரைவீரன், மாடசாமி, கருப்புவீரன் ஆகிய இக்கோயிலின் காவல் தெய்வங்கள் இந்த சன்னதியிலேயே உள்ளன. கோவிலில் உள்ள மண்டபத்தில் விழா நாட்களில் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெறும். திருமண நாட்களில் திருமணம் முதலிய நற்காரியங்கள் மிகச் சிறப்புடன் நடைபெறும். இம்மண்டபத்தைத் தாண்டி வெளியே வரும் பொழுது அன்னதான மண்டபமும், வெள்ளக்குளமும், திருக்கோயிலை மிகச் சிறப்பாக நடத்திவரும் அலுவலகக் கட்டடமும் உள்ளன.

**தங்கக் கவசம்**

மகாமாரியம்மனின் திருவுருவச்சிலை கிரீடம், மார்பு, கத்தி, வரதஹஸ்தம், கபாலஹஸ்தம், டமரு ஹஸ்தம், பாசஹஸ்தம், சூலம் என எட்டுப் பாகங்களாக உள்ளது. கிரீடம் ஜுவாலையுடன் கூடியதாகவும் காது தோட்டின் இரு பக்கங்களிலும் நாகம் இருப்பது போலவும் அமைக்கப் பட்டுள்ளன. மார்பில் கண்டமாலை, முத்துமாலை சரம், காசுமாலை, இடுப்பில் ஒட்டியானம், மத்தியில் கமலம் அதன் இரு பக்கங்களிலும் கிளிகள் அமைக்கப்பட்டுத் தொடர்ச்சியாகக் கொடிகருக்கு? வேலைகளுடன் உள்ளன. இவ்வமைப்பின் அடிப்படையில்

புன்னைநல்லூர் மாரியம்மனுக்கு 18 கிலோ 673 கிராம் எடையுடன் 24 கேஜ் கனமுடன் 22 காரட் தங்கத்தால் தங்கப் பாவாடை அணிவிக்கப்பட்டுள்ளது. இப்பணியைச் சுவாமிமலை எஸ்.கணபதி ஸ்தபதி மற்றும் அவரது குமாரர்கள் ஸ்தபதி க.குபேரன், க.மோகன்ராஜ் ஆகியோர் மேற்கொண்டு சிறப்பாகச் செய்து முடித்துள்ளனர்.

பாம்புச்சட்டை

இந்த ஆலயத்தின் பின்புறத் தோட்டப்பகுதி மிகச் சிறப்புடன் செப்பனிடப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவ் ஆலயத் தோட்டத்தின் தென்மேற்குப் பகுதியில் ஒரு பாம்புப் புற்று உள்ளது. கோயிலின் மூன்றாவது பிரகாரத்தில் நாகப்பாம்பு உரித்துவிட்டுச் சென்ற சட்டை கண்டெடுக்கப்பட்டு அது பாதுகாக்கப்பட்டு வருகிறது. பழைய புற்று மாரியம்மனை நினைவுபடுத்தும் வகையில் இங்குப் புற்றுக்கு வழிபாடு செய்யப்பட்டு வருகிறது. கோயிலின் முகப்பில் மிகச் சிறப்புடன் அமைந்துள்ள தேர் உள்ளது. இத்திருத்தேர் ஆவணி மாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமையன்று அம்பிகையை மங்கல இசை முழங்க எழுந்தருள வைத்து வடம் பிடித்து அழைத்து வரும் தேரோட்டம் நிகழ்வுறுகிறது.

பக்தகோடிகளின் வருகை நாளுக்கு நாள் அதிகரித்து ஆலயம் சிறப்புற்று விளங்குகிறது. அம்மைநோய் போக்கி அருளும் இவ்வமைப்பின் சன்னதியில் வந்து பலர் தங்கிச் செல்வர். இவர்கள் தங்கியிருக்கத் தனி அம்மை மண்டபத்தை மன்னார்குடி செங்கமலத்தாயார் கல்வி அறக்கட்டளை அறங்காவலர் டாக்டர் வி.திவாகர் அவர்கள் கட்டித் தந்துள்ளார். ஆண்டுதோறும் பெருந்திரளான பக்தர்களின் கூட்டம் இங்குப் பெருகி வருகின்றது. கோடை நாட்களில் பக்தர்கள் கூட்டமும், பாற்குட விழா எடுக்கும் அன்பர்களும் வெயிலின் கொடுமையால் துன்புறுவதைக் கண்டு இத்துயர் நீக்க தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களின் கள்ளர் சமூகப் பேரவையினர் மிகப் பெரிய அளவில் சிறப்பு வாய்ந்த நிழற்குடையை அமைத்துத் தந்துள்ளனர்.

இத்திருக்கோயிலில் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் சார்பில் பக்தர்களுக்கு மதிய உணவு அளிக்கும் அன்னதானத் திட்டம் மிகச் சிறப்புடன் நடத்தப்பட்டு வருகிறது. இப்பணியில் மாரியம்மன் திருக்கோயில் பங்கேற்புடன் அருளாளர்கள் வழங்கும் நன்கொடையோடு இத்திட்டம் செம்மையுற நடத்தப்பட்டு வருகிறது. இந்த அன்னதான திட்டத்தில் சாதிமத பேதமின்றி அனைவரும் கலந்து கொள்வது சிறப்பானதொன்றாகும்.

### வழிபாடுகள்

அருள்மிகு புன்னைநல்லூர் முத்துமாரியம்மனுக்கு நாள்தோறும் காலை சந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தசாமம் என்னும் நான்கு கால வழிபாடுகள் மங்கல இசையுடன் மிகச் சிறப்பாக நடந்து வருகின்றன. இப்பூசைகளில் மக்கள் அனைவரும் பெருந்திரளாகக் கலந்து கொள்கின்றனர். இவை தவிர வார விழாக்களும் மாத விழாக்களும் அமாவாசை, பௌர்ணமி, மாதப் பிறப்பு விழா போன்றவைகளும் நடைபெறுகின்றன. மேலும் சித்திரை முதல் நாள் விழா, தைமாத விழா, நவராத்திரி விழா, ஆங்கிலப் புத்தாண்டு விழா போன்றவையும் சிறப்பு வழிபாடுகளுடன் நடைபெறுகின்றன.

கோடைக்காலத்தில் அம்மனைக் குளிர்விக்கும் பொருட்டு அம்மனுக்கு பல்வேறு அமைப்பினரால் பாற்குட விழா நடைபெற்று வருகிறது. இவ்விழாவில் தஞ்சை நகரிலுள்ள மக்கள் நேர்த்திக்கடனாக விரதமிருந்து பாற்குடம் எடுக்கின்றனர். தெப்ப மகோற்சவ விழாவும், பெருந்திருவிழாவும் 1008 திருவிளக்குப்பூசை மற்றும் வரலட்சுமி பூசை விழாவும் மிகச் சிறப்போடு நடத்தப்பட்டு வருகின்றன.

### தைலாபிஷேகம்

மூலவர் புற்றுமண்ணால் வடிவமைக்கப்பட்டுள்ளதால் மூலவருக்கு அபிசேகங்கள் செய்யப்படுவதில்லை. ஆதலால் புற்று வடிவில் உள்ள அம்மனுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தைலாபிஷேக வழிபாடு நடைபெறுகிறது.

### மக்களின் பொதுவான நம்பிக்கைகளும் சகுனங்களும்

நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் சமுதாயத் தேவைகளின் அடிப்படையில் தோன்றியவையாகும். நம்பிக்கைகள் பண்பாட்டு வளர்ச்சியின் படிகற்கள் எனலாம். நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு சமுதாயத்தால் பாதுகாக்கப்படுகின்றன. அறிவுநிலைக்கு அப்பாற்பட்ட எண்ணங்களை நம்பிக்கை என்பர். மனிதனின் தன்னல உணர்வும், ஒட்டுமொத்த சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. நம்பிக்கைகள் பெரும்பாலும் அச்சவுணர்வின் அடிப்படையாகத் தோன்றியதாக காட்சியளித்தாலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை உணராத பொழுதும் மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாதபொழுதும் மனித மனமானது சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவைகளே நம்பிக்கைகளாக உருவாகின்றன.

நம்பிக்கைகள் காலங்காலமாக ஒரு தலைமுறையினரிடமிருந்து மற்றொரு தலைமுறையினருக்கு மீட்சி பெறுகிறது. மனித இனம் பிறப்பு முதல் இறப்பு வரை

பலவித நம்பிக்கைகளைக் கொண்டிருக்கக் காண்கிறோம். நம்பிக்கைகளே மனித வாழ்வினை இயக்குகின்றன என்ற அடிப்படையில் நம்பிக்கைகள் அவன் வாழ்வில் பெரும்பங்கு வகிக்கின்றது. நடைமுறை வாழ்வில் நம்பிக்கைகள் தொடர்ந்து காணப்படுவதை நோக்கின் இதனைச் சமுதாயப் பண்பாட்டின் உணர்ச்சிக் கூறுகளின் தொகுதி எனலாம். புன்னைநல்லூரில் வாழும் மக்கள் மட்டுமல்லாது அவ்வாலயத்தில் வழிபடுவோரும் சகுனங்களின் மீதும் இன மக்களிடம் நம்பிக்கைகளும், சகுனங்களும் இன்றும் நிலவி வருகின்றன. அவர்கள் நம்பிக்கைகள் மீதும் நம்பிக்கைக் கொண்டுள்ளனர்.

### நேர்த்திக்கடன்

மனிதர்கள் தனக்கென தனிப்பட்ட மதத்தினையும் அதன் கொள்கைகளையும் பின்பற்றினாலும் தனக்கு ஒரு தீமை நேரிடும்போதும், நோய்வாய்ப்படும்போதும் தன் உயிருக்கு ஆபத்து நேரிடும்போதும் தன் மதம் தாண்டி பிற மதத்தாரின் கடவுளை வேண்டிக் கொள்வதுண்டு. அவர்களின் வேண்டுதல் நிறைவேறியபின் அதற்கான நேர்த்திக்கடனை அவர்கள் செலுத்துவர். அவ்வகையில் புன்னைநல்லூர் மாரியம்மன் அம்மை நோய் சக்தி உடைய தெய்வமாகக் கருதப்படுகிறது. எனவே அம்மை நோயால் பாதிக்கப்பட்ட இந்துக்கள் மட்டுமன்றி மற்ற மதத்தினரும் அம்மனுக்கு வேண்டிக் கொள்கின்றனர். சிலர் பால் அபிசேகம் செய்வர். சிலர் கற்பகிரகத்தை ஒட்டியுள்ள தொட்டியில் நீர் நிரப்புகின்றனர். அம்மை இறங்கியவுடன் அம்மனுக்கு மாவிளக்கு போடுகிறார்கள்.

கண் நோயால் பாதிக்கப்பட்டு குணமானவர்கள் கண்ணில் மாவிளக்கு போடுகின்றனர். வயிற்று வலியால் பாதிப்படைந்து குணமடைந்தவர்கள் வயிற்றில் மாவிளக்கு போடுகின்றனர். உடம்பில் கட்டிகள் இருந்து குணமானவர்கள் வெல்லக்குளத்தில் வெல்லம் வாங்கிப் போடுகிறார்கள். சொரி சிரங்கு இருந்தவர்கள் உப்பு வாங்கிப் போடுகின்றனர். பெண்கள் திருமாங்கல்யம் சாத்துதலை நேர்த்திக்கடனாக செலுத்துகின்றனர். ஆடு, மாடு, கோழி காணிக்கை தருகின்றனர். முடிக் காணிக்கை செலுத்துதல், அங்கபிரதட்சணம் செய்தல், பால்குடம் எடுத்தல், பால் காவடி, அக்னி சட்டி எடுத்தல் போன்றவை இத்தலத்து அம்மனுக்கும் செலுத்தும் நேர்த்திக்கடன்களாகும்.

### திருவோணம் மாரியம்மன்

ஆய்வுக்களமாகத் தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு வட்டத்தைச் சேர்ந்த திருவோணம் என்ற கிராமத்தில் அமைந்திருக்கும் மாரியம்மன் கோவில் வரலாற்று நிகழ்ச்சியையும், வழிபாட்டு முறையையும் மையமாகக் கொண்டு அமைக்கப்பெற்றது.

## ஊர் அமைப்பு

ஆய்வுக்களமாக அமைந்திருக்கக்கூடிய திருவோணம் மாரியம்மன் கோயில் வடக்கே தோப்புவிடுதி, கிழக்கே உஞ்சைவிடுதி, தெற்கே மணிக்கிராம் விடுதி, மேற்கே பில்வெட்டி விடுதி ஆகிய நான்கு கிராமங்களை உள்ளடக்கிய பத்து கிராமத்தாருக்குச் சொந்தமாக அமைந்துள்ளது. இயற்கை வளத்தோடு விளங்கக்கூடிய நில அமைப்பைக் கொண்ட வளமான பகுதிகளை உடையது. புரட்டாசி மாதம் முதல் நீர்ப்பாய்ந்து பயிர் சாகுபடி செய்து பசுமையான நீர்வளத்தோடு சேர்ந்து இயற்கை அழகையும் பெற்றுத் திகழும் பகுதிகளாகும். ஆண்டிற்கு மும்முறை சாகுபடி நடைபெறும். எப்போதும் பசுமை நிறைந்ததாகக் காணப்படுகிறது. பருவக்காலங்களில் ஊரைச்சுற்றி நான்கு புறமும் நீரால் சூழப்பட்டு நடுவில் திட்டு போன்ற பகுதியாக இயற்கை எழிலோடு காணப்படும்.

ஒரத்தநாட்டிலிருந்து 18 கி.மீ. தொலைவிலும், பட்டுக்கோட்டையில் இருந்து 20 கி.மீ. தொலைவிலும் திருவோணம் என்னும் கிராமத்தின் எல்லையில் மாரியம்மன் கோயில் அமைந்துள்ளது. தற்பொழுது திருவோணம் என்று சொல்லக்கூடிய கிராமம் ஆதிகாலத்தில் துருவோணம் என்று கூறப்பட்டது. அவை காலப்போக்கில் திருவாணம் என்று கூறப்பட்டு, இன்று திருவோணம் என்று அழைக்கப்படுகிறது. இதற்குக் காரணம் கோயிலின் விழாக் காலங்களில் பத்து கிராம மக்களும் ஒன்றுகூடி வானக்காட்சியை நிகழ்த்துகின்றபோது ஒவ்வொரு ஊர் மக்களிடம் போட்டி ஏற்பட்டு வானத்தை எந்த ஊரைச் சேர்ந்தவர்கள் நேராக விடுகிறார்களோ அவர்களுக்குச் சிறந்த மரியாதையும் கூடுதலான ஊக்கத்தொகையும் கொடுப்பார்கள். வாணக் காட்சியன்று பத்து கிராம மக்களும் துருவாணத்தையும் திருவாணத்தையும் கண்டு மகிழ வருவார்கள். இந்நிகழ்வே இவ்வூரின் பெயரான திருவோணமாக மாறியது. ஆய்வுக்களமாகக் கூறப்பட்ட திருவோணம் ஊராட்சியாக அமைந்துள்ளது.

## தொழில் அமைப்பு

இங்குள்ள மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். முதன்மைத் தொழில் விவசாயமாக அமைந்துள்ளது. கோடைக்காலங்களில் விவசாய வேலை குறைந்து காணப்படுகிறது. கோடைக் காலங்களில் ஒருசிலர் மட்டும் நகரத்தை நாடி வேலைக்குச் செல்கின்றனர். விவசாயத் தொழிலில் ஆண், பெண் என்ற பாகுபாடு பாராமல் அனைவரும் இத்தொழிலில் ஈடுபடுகின்றனர். உழவுத் தொழில் மேம்படுகின்ற வகையில் இங்கு நெல், பயறு, உளுந்து, கரும்பு, சூரியகாந்தி, சோளம் போன்ற பயிர் வகைகள் பயிரிடப்பட்டு பெரும் விளைச்சலைத் தருகின்றன.

## இந்து இசுலாமியர் உறவுநிலை

திருவோணம் கிராமத்தில் இந்துக்கள் நானூற்றுஐம்பது குடும்பங்களுக்கு மேல் வசித்து வருகின்றனர். இங்கு ஐந்து தெருக்கள் உள்ளன. இம்மதத்தினரில் ஒருசில குடும்பங்கள் மட்டும் வசதி வாய்ப்போடு இருக்கின்றனர். இவர்கள் வீட்டு வேலைகள் செய்வதோடு சரி, வெளியில் தினக்கூலி வேலைகளுக்கு இவர்கள் செல்வதில்லை. ஒருசில குடும்பங்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளனர். இவர்கள் விவசாய கூலியாகவும் தொழிலாளிகளாகவும் இருக்கின்றனர். இருப்பினும் உடல் உழைப்பால் நிம்மதியாகவும் அமைதியாகவும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுடைய வாழ்வு விவசாயத் தொழில் முழுமையாக முடுக்கி விடப்பட்டு அதன் மூலம் பலனை அடைகின்றனர்.

திருவோணம் கிராமத்தில் இசுலாமியர் ஐம்பது குடும்பங்களுக்கு மேல் வசித்து வருகின்றனர். ஒருசிலர் மட்டும் மிகுந்த செல்வந்தினராக வசித்து வருகின்றனர். இவர்கள் தங்களது வருமானங்களை மேலும் மேலும் பெருக்குவதற்கு நகரத்திற்குச் சென்று கடைகள் நடத்திவருகின்றனர். இவர்களில் சிலர் நடுத்தர வர்க்கத்தினராக இருந்து வருகின்றனர். இவர்கள் விவசாயம் செய்து விவசாய கூலியாகவும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் ஒருசிலர் மட்டும் வெளிநாடு சென்றிருக்கின்றனர்.

இரு மதத்தினரும் ஒரே இடத்தில் வேலை செய்வதன் மூலம் இருவரின் உறவுநிலையும் பழக்கவழக்கங்களும் நாளுக்குநாள் மேம்படுகின்றன. இவர்கள் விவசாயம் செய்வதன் மூலமும் தொழில் மூலமும் ஒன்றுபட்டுள்ளனர். பிறப்பு, இறப்பு போன்ற நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு பொருளாதார பரிமாற்றங்களையும் செய்து கொள்கின்றனர்.

இசுலாமியர் நிக்காஹ் என்ற திருமண அழைப்பிதழ் கொடுத்து அவர்களின் சொந்த ஊரான கோட்டைப்பட்டினம், மல்லிப்பட்டினம் போன்ற இடங்களில் திருமணம் செய்வார்கள். அங்குத் திருவோண மக்களை அழைத்துச் சென்று அவர்கள் உறவினர்களிடம் இவர்கள் மாப்பிள்ளை வீட்டார்கள், பெண் வீட்டார்கள் என்று உரிமையோடு அறிமுகம் செய்வார்கள். இவர்கள் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற திருமூலரின் திருமந்திர கூற்றின்படி முறைப்படி இம்மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

## ஆய்வுக்களம் தேர்ந்தமைக்கான காரணம்

நாட்டுப்புறச் சிறுதெய்வங்களில் மாரியம்மன் வரலாறு தொன்மையானதாக விளங்குவதாலும் வழிபாட்டு முறைகள் சிறப்பாக நடைபெறுவதாலும் சமூக இன

ஒற்றுமையை இவ்விழாவில் காணமுடிகிறது என்பதை அறிந்ததின் அடிப்படையில் இவ்வாலயம் ஆய்வுக்களமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

### தகவலாளர் தேர்வு

இவ்வாய்வுத் தொடர்பான தரவுகள் சேகரிக்க 37 தகவலாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தகவலாளர்களை வயது அடிப்படையிலும் தகவல்கள் தெரிவிப்பதன் அடிப்படையிலும் வேறுபடுத்தி தரவுகள் சேகரிக்கப்பட்டன.

மாரியம்மன் கோவில் வரலாறு வாய்மொழியாகக் கூறப்படுவதாலும் தோற்ற வரலாறு முழுமையாகத் தெரிந்த வயதில் மூத்தவர்களிடமும் கேட்டறியப்பட்டது. அதிலும் அனுபவம் அதிகமுள்ளவர்களுக்கு அதிகமான தகவல்கள் தெரியும் என்ற வகையில் 35 வயதிற்கு மேற்பட்டவர்களிடம் அதிகத் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 22 ஆண்களிடமும் 13 பெண்களிடமும் தெளிவான முறையில் தரவுகள் சேகரிக்கப்படுள்ளன.

### சேகரிப்பு முறைகள்

ஆய்வுக்களத்தில் ஆய்வுத் தொடர்பான தரவுகள் பேட்டிமுறை மற்றும் கவனிப்பு முறை என்ற இரண்டு முறைகளின் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. ஆய்வுக்குத் தேவையான தரவுகள் சேகரிக்க ஏதுவாக வினாநிரல் உருவாக்கி தகவலாளர்களை நேரில் சந்தித்து அவர்களிடம் வினாக்களைத் தொடுத்து அதன் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக திருவிழாவின் போது நடைபெறக்கூடிய சடங்கு முறைகளைத் தொகுக்கும்போதும் வழிபாட்டின்போதும் நடைபெறக்கூடிய வழிபாட்டு முறைகளைப் பற்றியும், படையல் பொருள்களைப் பற்றிய தரவுகளைச் சேகரிக்கும்போது பங்குபெற்று உற்றுநோக்கலின் மூலமாகத் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

### மாரியம்மன் தோற்றக் கதைகள்

தஞ்சாவூர் மாவட்டம் திருவோணத்தில் எழுந்தருளியிருக்கும் மாரியம்மன் கோயிலானது புன்னைநல்லூர் அருள்மிகு மாரியம்மன் ஆலயத்தில் இருந்து பிரிந்து வந்துள்ளது. தொலைவில் இருக்கும் கோயிலுக்குச் சென்றுவரமுடியாத காரணத்தினாலும் ஏழ்மையானவர்கள் பொருளாதார நெருக்கடி காரணமாகவும் கோயிலுக்கு வர இயலாத காரணத்தினால் பொதுமக்களின் நலன்கருதியும் திருவோணம் கிராமத்தில் பத்து கிராம மக்களும் ஒன்றுகூடி மாரியம்மன் கோயில் அமைக்க வேண்டுமென்று முடிவுசெய்தனர். இம்முடிவை சாதி மத வேறுபாடின்றி அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

பத்துக் கிராமத்தில் உள்ள மரபுவழியாக உரிமையுடன் இடம் பெறுகின்றவர்கள் ஒன்றுசேர்ந்து ஒரு குடும்பத்திற்கு மாதம் 2 ரூபாய் வீதம் வரி வசூல் செய்தனர். நாளடைவில் குடும்பங்கள் அதிகரித்ததால் கோயிலின் மாத வருமானம் அதிகரிக்கத் தொடங்கியது. இதேபோன்று பொறுப்பாளர்களும் கோயில் நிதியாகப் பணம் கொடுத்து வந்தனர். இப்பணத்தை 1 ரூபாய்க்கு மாதம் 10 பைசா வீதம் வட்டிக்குக் கொடுத்து வந்தனர் (தகவலாளர் சின்னையன், வயது 56).

### கோயில் அமைப்பு

ஆரம்ப காலத்தில் மாரியம்மன் இருந்த கோயில் கீற்றுக் கொட்டகையாகவே இருந்தது. அதன்பிறகு மாரியம்மனின் அருள்பெற்ற மக்கள் படிப்படியாகக் கோயிலின் வளர்ச்சியிலும், அக்கறை செலுத்தினார்கள். நாளடைவில் வளர்ச்சிப்பெற்று அம்மனின் அருள்பெற்ற மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து வரி வசூல் செய்து கோயிலை இன்னும் விரிவாக்க வேண்டும் என்று ஓட்டுக் கொட்டகையாக மாற்றி வழிபட்டு வந்தனர். இதேபோன்று இக்கோயிலை ஆலயமாக அமைக்க வேண்டுமென்று திட்டம் வகுத்தனர். அவ்வாறே ஊர்ப் பஞ்சாயத்தைக் கூட்டிக் கிராமத் தலைவர்கள் முன்னிலையில் கூட்டம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்து அதன்படியே பத்து கிராமத்திலும் பறைகொட்டி செய்தியை அறிவிக்கச் செய்தனர். மாரியம்மனுக்குப் புதிதாக ஆலயம் எழுப்பவேண்டும். அதற்கு உங்கள் அனைவரின் ஒத்துழைப்பும் வேண்டும். அதற்காக ஒரு குறிப்பிட்ட தொகையைக் குடும்ப வரியாகச் செலுத்த வேண்டும் என்று அக்கூட்டத்தில் அனைவரும் ஒரு முடிவுக்கு வந்தனர். வரியைப் பணமாகக் கொடுக்க இயலாதவர்கள் தானியங்களும், கட்டுமானப் பொருட்களையும் கொடுக்கலாம் என்று அக்கூட்டத்தில் கூறினார்கள். கூட்டத்தில் முடிவெடுத்த செய்தியைப் பறையடித்து தெரிவித்தனர்.

அறிவிப்பு முடிந்த சில நாட்களில் அதற்கான செயல் வடிவங்களிலும் இறங்கினார்கள். ஆலயம் நிறைவுபெற பத்து கிராமத்து மக்களிடமும் நன்கொடை ரசீதைக் கொடுத்து அவர்கள் மூலமாக உறவினர்களிடம், நண்பர்களிடமும் வசூல் செய்தனர். இதுபோன்று ஒவ்வொரு ஊர் மக்களும் வசூல் பணியில் தீவிரமாக செயல்பட்டனர். பெருஞ்செல்வந்தர்கள் வரிப் பணத்துடன் நெல், உளுந்து போன்ற தானிய வகைகளைச் சேர்த்து நன்கொடை கொடுத்தனர். இவ்வாறு நிதி வசூலித்தும் நன்கொடைப் பெற்றும் ஆலயம் அமைக்கப்பெற்றது.

**துணைத் தெய்வங்கள்**

மாரியம்மன் கோயிலின் காவல் தெய்வமாக அய்யனார், பேச்சியாயி, காமாட்சி, பெரிய கருப்பு, சின்ன கருப்பு, சனீசுவரன் போன்ற தெய்வங்கள் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

**இசுலாமியர் வழிபாடு**

வழிபாடு என்பது முற்காலத்தில் இயற்கையைச் சார்ந்ததாக இருந்தது. எனவே இயற்கையைத் தெய்வமாக வழிபடத் தொடங்கிய மனிதன் படிப்படியான வளர்ச்சியின் மூலம் உருவங்களை வைத்து வழிபடத் தொடங்கினான். இயற்கையின் சக்தியாக விளங்கிய சந்திரன், சூரியன், காற்று ஆகியவற்றைத் தொடக்க காலங்களில் வணங்கினான்.

மனிதன் தன்னை இயக்கத் தன்னைவிட மேம்பட்ட ஆற்றல் ஒன்று இருக்கிறது என்ற உண்மையை உணர்ந்ததன் அடிப்படையில் அதுதான் தன்னைப் படைத்த கடவுள் என்று கருதினான். மேலும் தன் வாழ்வில் நடைபெறக்கூடிய நன்மைகளுக்குக் காரணம் இறைவனின் அருள் என்று கருதினான். நன்மை ஏற்படும்போது இறைவனுக்கு நன்றிசெலுத்தும் முகமாக வழிபாடு தோற்றத்தைக் கொண்டு அவரவர் மதத்திற்கு ஏற்ப வழிபடத் தொடங்கினர். இந்துக்கள் கடவுளே (ஓம் நமசிவாய இயற்கை) என்றும், இசுலாமியர் அல்லா என்றும், கிறித்தவர் கர்த்தரே என்றும் வழிபட்டு வருகின்றனர். காலப்போக்கில் அன்பு மற்றும் கல்விஅறிவு காரணமாக மதத்தால் ஒன்றுபட்டு எல்லா மக்களும் ஒன்றே எனக் கருதி அனைத்துத் தெய்வங்களையும் வழிபடத் தொடங்கினார்கள்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இசுலாமியர் அல்லாவை மட்டும் வணங்கி வந்தனர். பிறகு சமய படிநிலைகளிலும் பழக்க வழக்கங்களிலும் ஒன்றுபட்டு மாரியம்மன் போன்ற தெய்வங்களை வணங்கி வந்தனர். இந்து சமயத்தின் பெரிய ஆலயங்களில் சுற்றுலாத் தலமாகச் சென்று வழிபட்டு வந்தனர். காலப்போக்கில் விழாக்களை நடத்துகிற போது அவர்களும் இந்துக்களைப் போன்று வீடு, மனை போன்றவற்றைச் சுத்தம் செய்து வழிபடத் தொடங்கினார்கள். இந்துக்கள் முதலில் அல்லாவை வணங்கியபோது ஆலயத்தின் வெளியே நின்று வணங்கினார்கள். காலவோட்டத்தில் அன்பு பற்று இவற்றின் காரணமாக மனமாற்றம் ஏற்பட்டு அனைவரும் சமமாக வழிபடும் நிலை தோன்றியுள்ளது.

அனைத்து வர்க்கத்தினரும் எடுக்கும் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டு ஊரோடு ஒட்டி வாழ்கின்றனர். எல்லா இனத்தவரையும் சமூகத்தில் சரிசமமாக

நடத்துகின்றனர். முன்பு இருந்த படிநிலைகளில் மாற்றம் ஏற்பட்டு அனைவரும் ஒற்றுமையாகக் கிராமக் கட்டுக்கோப்போடு அமைதியான முறையில் வாழ்ந்து வருகின்றனர். தற்போது சமூகநிலை மாற்றம் ஏற்பட்டு அனைவரும் சகோதரத்துவத்தோடு பழகி வருகின்றனர். இன்று இளைய தலைமுறையினிரிடம் மிகுந்த மாற்றம் ஏற்பட்டு அனைவரும் சமமாகக் கருதப்பட்டு அன்பு பாலமாகவும் பலமாக இருக்க அமைதியான வாழ்வை வாழ்கின்றனர்.

### வழிபடும் முறை

இசுலாமியர் அல்லாவை வழிபடும்போது வழிபடும் பொருட்களாகப் பத்தி, சர்க்கரை, பொட்டுக்கடலை, கல்கண்டு போன்ற பொருள்களை வைத்து வழிபட்டு வருகின்றனர். பக்தர்கள் தரையில் அமர்ந்து கைகளைத் தலைக்கு மேல் தூக்கி 'அல்லாஹு அக்பர்' என வணங்கி வருகின்றனர். அவர்கள் வணங்கிச் செல்லும் பொருள்களை மசூதியில் வைத்து மோதினர் பாத்தியா ஓதுவார். வழிபடச் செல்லும் பக்தர்கள் அமைதியாக அமர்ந்து வழிபடுவர். அதன்பின்பு மோதின்ர் வரிசையாக எல்லா பக்தர்களையும் அழைத்து வாங்கிக் கொடுத்த பொருட்களைக் கொடுத்துவிடுகின்றார்.

இதேபோன்று இந்துக்களும் நாகூர் தர்கா, மல்லிப்பட்டினம் தர்கா போன்ற மசூதிகளுக்குச் சென்று வழிபட்டு வருகின்றனர். இசுலாமியர் போன்று பத்தி, சர்க்கரை, கல்கண்டு போன்ற பொருள்களை வாங்கி வருகின்றனர். எல்லா பக்தர்களும் வாங்கிச் செல்லும் பொருள்களை மசூதிமேல் வைத்துப் பின்னர் மோதினர் ஒவ்வொருவரையும் அழைத்து அவர்கள் குறைகளைக் கேட்டு பொருள்களை வணங்கி பாத்தியா ஓதி வாங்கிச் சென்ற பொருள்களைக் கொடுக்கின்றார். ஒருவர் வயிற்றுவலியால் பல காலம் அவதிப்பட்டு வந்தார். பல மருத்துவமனைகளுக்குச் சென்று மருத்துவம் பார்த்து வந்தார். ஒருசில வாரங்கள் மட்டும் வயிற்றுவலி நிற்கும். பிறகு திடீரென்று வயிற்றுவலி வந்துவிடும். இவரின் சூழ்நிலையைக் கருதி 72 வயதான பாட்டி இவரை முத்துப்பேட்டை தர்காவிற்கு அழைத்துச்சென்று வியாழக்கிழமை இரவு தங்கவைத்தார். அடுத்த நாள் விடியற்காலையில் மோதினர் அவரை அழைத்து மசூதியில் படுக்க வைத்து பாத்தியா ஓதினர்.

அல்லாவை நினைத்து இருந்தால் எல்லாமே ஓடிவிடும் என்ற வாக்கியத்திற்கு இணங்கச் சிறிது நேரம் சென்று அவருக்கு வயிற்றுவலி குறைந்திருந்தது. "அல்லாவின் மசூதியில் 35 நிமிடம் படுத்திருந்தேன். அதிலிருந்து எனக்கு வயிற்றுவலி குறைந்திருக்கிறது. அதிலிருந்து இரண்டு ஆண்டு காலமாக முத்துப்பேட்டை

தர்காவிற்கு வெள்ளிக்கிழமை மாதம் இரு முறை சென்று வருகிறேன்" என்று கூறினார் (தகவலாளர் பழனிவேல், வயது 48).

இதுபோன்று இசுலாமியரும் மாரியம்மன் போன்ற ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டு வருகின்றனர். அவர்கள் இந்துக்களைப் போன்று அர்ச்சனைப் பொருள்களை வாங்கி பூசாரியிடம் கொடுத்து வழிபடுகின்றனர். வழிபாட்டிற்குப் பிறகு அர்ச்சனைப் பொருள்களை மட்டும் வாங்கிச் செல்வதில்லை. ஒரு சிலர் விபூதியைப் பெற்றுக்கொண்டு கழுத்தில் பூசிக்கொள்கின்றனர். ஒருசிலர் விபூதியைக் கையில் வைத்து ஊதி விடுகின்றனர். எனவே வழிபடும் முறையும் வழிபடும் பொருளும் ஒரே இடத்தில் வழிபட்டு ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனர். கல்வியும் அன்பும் நம்பிக்கையும் மதவேறுபாடின்றி மனிதர்களை ஒன்றாக்கியுள்ளது.

### நம்பிக்கைகள்

தெய்வத்தின்மேல் உள்ள நம்பிக்கைக் காரணமாக காணிக்கை செலுத்துகின்றனர். கிடா வெட்டுவதன் நோக்கம் ஆடு, மாடு, கோழி போன்ற உயிர்களுக்கு எந்தத் தீங்கும் வரக்கூடாது என்று முதல் கிடாவைக் கோயிலுக்காக நேர்ந்துகொள்வார்கள். விழாக் காலங்களில் அல்லது மற்ற நாட்களில் வெளியூரிலிருந்து வருபவர்கள் கிடாவை வெட்டி கோயிலிலேயே சமைத்துப் போட்டு விடுவார்கள். நான்கு பேருக்குச் சாப்பாடு போட்ட மாதிரி இருக்கும் என்று கூறுகின்றனர். இம்முறையால் உறவைத்தாண்டி பல மனிதர்கள் பசியாற்றிக் கொள்வதற்கு வழி செய்கிறது. திருமணத்தின்போது முதல் பத்திரிகையைக் கோயிலில் வைப்பார்கள். குழந்தைகளுக்கு மாரியம்மனின் நினைவாக மாரிமுத்து, மயிலன், மாரியம்மாள், மாரிக்கண்ணு என்று சாமியின் பெயரில் பெயர்கள் சூட்டப்படுகின்றன. அந்த ஆலயத்தில் முதல் முடியெடுப்பது வழக்கமாக இருந்து வருகிறது. பல பொருள்களைக் காணிக்கையாக கோயிலில் வாங்கி வைக்கின்றனர். இவ்வாறு பல்வகைப்பட்ட காணிக்கைகள் கோயிலில் பாதுகாக்கப்படுகின்றன. இவை மக்களுக்கு மாரியம்மன் மீதுள்ள நம்பிக்கையைக் காட்டுவனவாக விளங்குகின்றன. இசுலாமியரும் இவை போன்று நம்பிக்கைகளையும் காணிக்கைகளையும் செலுத்தி வழிபட்டு வருகின்றனர்.

### கோயிலுக்கு உபயம் செய்தல்

கிராமக்கோயில் என்பதால் அதிக வருமானம் இருக்காது. எல்லாப் பொருள்களையும் கோயில் நிர்வாகத்தினர் வாங்கி வைப்பார்கள் என்பது இயலாதது ஆகும். மேலும் தேவையானவற்றையும் அத்தியாவசியமான பொருள்களையும் உபயதாரர்கள் கொடுக்கும்போது அம்மனுக்கு உபயப் பொருள்களாகவும்,

அதிகமான பொருள்களை வாங்கி வைத்துள்ளார்கள். ஜாஸ்மின் பானு என்ற இசுலாமியப் பெண் பட்டுப்புடவை ஒன்றை அம்மனுக்கு உபயமாகக் கொடுத்துள்ளார்.

திருவோணம் கிராமத்தில் இசுலாமியப் பெண்களும் சுயஉதவிக் குழுக்களில் சேர்ந்து ஒவ்வொரு ஆண்டுத் திருவிழாவின்போதும் அம்மனுக்குத் தேவையான பொருள்களை வாங்கி வைத்துள்ளனர். இப்பொருள்களைக் கோயில் நிர்வாகத்திடம் ஒப்படைக்கும்போது அப்பொருள்களை அம்மன் சன்னதியின் முன் வைத்து அர்ச்சனை செய்து தீபஆராதனை செய்து உபயப் பொருளில் அவர்கள் பெயரைப் பதித்து அதன்பின் நிர்வாகத்தினரிடம் கொடுக்கின்றனர்.

**திருவிழாக் கடைகள்**

திருவிழாவில் போடப்படுகின்ற கடைகளுக்கு ஒரு சிறு தொகையைக் கோவிலுக்கென்று தனியாக வசூல் செய்கின்றனர். அதிக அளவில் திருவிழா கடைகள் இசுலாமியர்கள் கடைகளாக இருக்கின்றன. எல்லா சமயத்தினரும் வழிபடும் முறையிலும் ஒன்றுபட்டு திருவிழாவைச் சிறப்பாக நடத்துகின்றனர். இவ்வாறு திருவிழாவின் போது கடைகள் போடப்பட்டு திருவிழாவைச் சிறப்பித்து வருகின்றனர்.

**நேர்த்திக்கடன்**

திருவிழா தொடங்கிய பதினைந்தாம் நாள் திங்கள்கிழமை அன்று கிடாவெட்டுதல், எல்லா கிராமத்தில் இருந்து அனைத்துச் சாதியினரும் பல இனத்தினரும் ஒன்று சேர்ந்து வருவார்கள். கிடா வெட்டும் முன்பு கிடா வெட்டும் ரசீது பெற்று அதன் பின்பு கிடா வெட்டுதல் நடைபெறும். இந்துக்கள் கிடாவை வெட்டி அவரவர் வீட்டிற்குக் கொண்டு வந்து சமைத்து உற்றார் உறவினர்களுக்கு விருந்து உபசரிப்பு நடைபெறும். இன்னும் சிலர் கிடா வெட்டும் இடத்திலேயே சமைத்து அம்மன் கோயிலுக்கு வந்திருக்கும் பக்தர்களுக்கு அன்னதானம் போடுவார்கள். இசுலாமியர்களும் அம்மனுக்குக் கிடா வெட்டுவதாக அம்மனிடம் வேண்டிக்கொண்டு திருவிழா அன்று கிடா வெட்டி அங்கேயே சமைத்துப் போடுவார்கள். இதில் மதவேறுபாடின்றி அனைவரும் சாப்பிடுவார்கள். இசுலாமியரில் ஒருசிலர் மட்டும் கிடாவெட்டி நிருவாகத்திடம் கொடுத்துவிட்டு அர்ச்சனைச் செய்து அம்மனை வழிபட்டு வருகின்றனர். 2005 ஆம் ஆண்டு திருவிழாவின்போது கிடாவெட்டி கோயிலில் அன்னதான செய்தனர். (தகவலாளர் முகமது சகாப்தீன்).

மாரியம்மன் கோயிலின் ஆண்டுத் திருவிழாவின்போது பல சாதியினரும் பல சமயத்தினரும் அம்மனிடம் நேர்த்திக்கடன்களைச் செலுத்தி வருகின்றனர். பத்துக் கிராமத்திற்கும் ஊர் எல்லையில் இருப்பதால் அனைவரும் மாரியம்மனை காவல் தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். இசுலாமியர் அம்மனின் ஆலயத்தில் ஐந்துமுக விளக்குகள், மின்விசிறி, கடிகாரம் போன்ற பொருள்களை வாங்கி உபயம் செய்துள்ளனர். அப்பொருள்களை அம்மனின் திருப்பணி குழுக்கள் கோயிலின் ஆண்டு வரவுசெலவு கணக்குநோட்டில் பதிவுசெய்ததுடன் அர்ச்சனை செய்யும் பொழுதெல்லாம் அவர்களுக்கு உரிய மரியாதையுடன் விபூதி கொடுத்து மரியாதை செலுத்துகின்றனர்.

ஆண்டுத் திருவிழாவின்போது இசுலாமியர்கள் மட்டும் பணம் வசூல் செய்து ஒருநாள் நாடகம் அல்லது ஆடல்-பாடல் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். இசுலாமியரின் நிக்காஹ் முடிந்து வரும்போது அம்மன் ஆலயத்தில் வந்து வழிபட்டுச் செல்கின்றனர். எனவே இங்கு எல்லா இன மக்களும் ஒற்றுமையுடன் இருந்து அம்மனை வழிபட்டு ஒவ்வொரு ஆண்டும் இத்திருவிழாவைச் சிறப்பித்து வருகின்றனர்.

நாட்டுப்புறத் தெய்வங்களின் வழிபாட்டு முறைகள் பற்றிய செய்திகளைத் திரட்டும்போது இசுலாமியரின் வழிபாடு அவற்றின் வழிபாட்டு முறைகள் ஒவ்வொரு இடங்களிலும் வேறுபட்டு அமைந்திருப்பதைத் தெளிவாக அறியமுடிகின்றது. கிராமப்புறத் தெய்வங்களில் ஒவ்வொரு தெய்வத்திற்கும் சிறிய அளவில் நிலங்கள் இருக்கின்றன. அவற்றில் பல ஊர் மக்களிடம் குத்தகைக்கு விடப்பட்டு அவற்றில் இருந்து வருகின்ற வருமானங்களைக் கோயிலின் திருப்பணிக்காகச் செலவுகள் செய்கின்றனர். மேலும் கிராமக் கோயிலுக்கு குறிப்பாக ஊர்ப் பொதுக் கோயில்களில் ஆண்டு திருவிழாக்களின்போது பிரச்சனைகள் பல இடங்களில் நிகழ்கின்றன. இங்கு மாரியம்மன் கோயில் திருவிழாவின்போது எவ்வித அசம்பாவிதங்களும் நடைபெறாமல் கட்டுக்கோப்பாக அனைத்து இன மக்களும் நின்று திருவிழாவைச் சிறப்பாகச் செய்கின்றனர். எல்லா மக்களும் மாரியம்னுக்கு வாரப் பூசைகளும் வழிபாடுகளும் சிறப்பான முறையில் செய்கின்றனர்.

திருவோணம் கிராம மக்களின் வழிபாட்டு முறையில் எந்தவித பேதமும் இல்லாமல் திருவிழாவைச் சிறப்பாக மிகவும் விமரிசையாகச் செய்து வருகின்றனர். மாரியம்மனுக்கு மட்டுமல்லாது துணைத் தெய்வங்களுக்கும் தீப ஆராதனை செய்து வழிபட்டு வருகின்றனர். திருவிழா முடித்து மறுநாள் இசுலாமியர்கள் ஒன்றுசேர்ந்து அம்மனுக்குப் பலவண்ண நிறங்களைக் கொண்ட வானவேடிக்கைகளையும், கலைநிகழ்ச்சிகளையும் நடத்தி வருகின்றனர். உயிர்ப்பலி கொடுக்கும் முறை

இருப்பினும் படையலில் பூ, வாழைப்பழம், தேங்காய் போன்ற பொருள்களையும் வாங்கிக் கொடுத்து இசுலாமியர் அம்மனை வழிபட்டு வருகின்றனர்.

பல்வேறு பிரிவினர் இருந்தாலும் திருவிழாவில் எல்லோரும் ஒற்றுமையாக இருக்கின்றனர். இந்து, இசுலாமியர் என்ற பாகுபாடு இல்லாமல் அனைவரும் ஒற்றுமையாக திருவிழாவின் ஆரம்பம் முதல் கடைசி வரை 15 தினங்களுக்கு விரதம் இருந்து திருவிழாவைச் சிறப்பாக நடத்தி வருகின்றனர். எனவே மரபைப் போற்றும் வகையில் பண்பாட்டு நீதிகளைக் காக்கும் நாடகமும் நடைபெற்று வருகின்றது. பழைய மரபையும் கட்டிக் காத்து வழிபட்டு வருகின்றனர். மாரியம்மன் திருவிழாவின் மூலம் இசுலாமியர் வழிபாடு, அவர்கள் வழிபடும் முறை, நேர்த்திக்கடன் ஆகியவற்றைச் சிறப்பாகத் தெரிந்துகொள்ள முடிகிறது.

## இந்து இசுலாமியர் ஒருமைப்பாட்டு முறை

இந்து இசுலாமியர் பற்றி களப்பணி செய்யும்போது அவர்களின் ஒற்றுமைகள் தெளிவாகக் காணப்படுகின்றன. பல ஆண்டுகளுக்கு முன்பு மத ரீதியான சண்டைகள் ஏற்பட்டு இரு மதத்தினரும் பல காலமாகத் தொடர்பு இல்லாமல் இருந்து வந்தனர். சுமார் 35 ஆண்டுகளுக்குப் பிறகு இதுபோன்ற தகராறுகள் எதுவும் நிகழவில்லை. அன்றாட நிகழ்ச்சிகளில் அனைத்துச் சாதியினரும் மதத்தினரும் தினந்தோறும் சந்தித்துப் பேசி, பழகி வருகின்றனர். தொழில் மூலமாகவும் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனர்.

திருவோணம் மாரியம்மன் கோயிலின் எதிரில் சற்றுத் தள்ளி பெரிய அரச மரம் ஒன்று உள்ளது. அந்த இடத்தில் பத்து கிராமத்தார்களும் ஒன்று சேர்ந்து திருவிழாக் கூட்டம் போடுவார்கள். அதைப்போல அவரவர் சுப காரியங்களின் போது அந்த இடத்தில் அமர்ந்து கலந்து பேசி முடிவெடுப்பார்கள். கார் காலங்களில் இவை போன்ற நிகழ்ச்சிகளைப் பேச மழையின் காரணமாகத் தடங்கல் ஏற்பட்டு நிகழ்ச்சிகள் நின்றுவிடுகின்றன. ஆகையால் பத்துக் கிராமத்தில் இருக்கும் முக்கிய பிரமுகர்கள் சாதி மத வேறுபாடின்றி அரச மரத்தின் வடபுறம் ஆசாரம் அமைக்க திட்டம் வகுத்தனர்.

ஒருசில நபர்கள் மட்டும் ஆசாரம் கட்டுவதற்கு தற்பொழுது இயலாது என்று கூறினார்கள். எடுத்த முயற்சியை முடிக்க வேண்டும் என்ற தொடர் முயற்சியில் கட்டடம் கட்டுவதற்குத் தூண் அமைக்க குழிவெட்டினார்கள். ஆசாரம் கட்டுவதற்கான வேலைகள் வேகமாக நடைபெறத் தொடங்கியது. உறவினர்களிடம் வரிவசூல் செய்யாமல் அவர்களாகவே கட்ட முயற்சித்தனர். அதன் பின்னர் ஆசாரம் அமைக்க செல்வந்தர்களின் உதவியால் கட்டுமானப் பணியைத் தொடங்கினார்கள்.

பிறகு தற்பொழுது பணம் இல்லையென்று சொன்னவர்களும் நிதியைக் கொடுத்து கட்டுமானப் பணியில் தீவிரமாக இறங்கி வேலைசெய்து வந்தனர்.

இதைத் தெரிந்த மற்ற உறவினர்களும் நண்பர்களும் கோயில் நன்கொடையாக நிதியைக் கொடுத்து மேலும் சிறப்பித்து வந்தனர். ஆசாரம் கட்டி முற்றுப்பெற அதிக நிதியை இசுலாமியர் கொடுத்து உதவினர். இது போன்று வெளிநாடுகளில் உள்ள இசுலாமியர் ஆசாரம் அமைக்க நேரடியாக கோயில் நிர்வாகக் குழுவிடம் நிதியைக் கொடுத்து வந்தனர். அதன் பின்பு கட்டட வேலைகள் முழுவதும் முற்றுப்பெற்று திறப்புவிழா நாளன்று அனைத்து உறவினர்களிடமும் சொல்லி அன்னதானம் செய்தனர் (தகவலாளர் இப்ராகிம் ராவுத்தர்).

### இளைஞர் மன்றம்

இதற்கிடையில் திருவோணம் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் ஒன்றுசேர்ந்து பணம் வசூல்செய்து வந்தனர். எல்லா சாதியினரும் எல்லா சமயத்தினரும் ஒன்றுசேர்ந்து மன்றத்தினைச் செம்மையாகச் செயல்படுத்தி வந்தனர். பல ஆண்டுகள் கழித்து மன்றத்தின் பணத்தைக் கொண்டு ஆசாரம் கட்டுவதற்கு 30 மூட்டை சிமெண்ட் எடுத்துக் கொடுத்தனர். இதுவே ஆசாரம் கட்டுவதற்குப் பெரும் உறுதுணையாக அமைந்தது.

இளைஞர் மன்றத்தில் எல்லா சமயத்தினரும் சேர்க்கப்பட்டு வந்தனர். அவரவர்களுக்குத் தனி பொறுப்பு கொடுத்து மன்றத்தினைச் செம்மையாக வளர்த்து வந்தனர். அங்குச் சமயப் பாகுபாடு இன்றி அனைத்து சமயத்திலும் அமையக்கூடிய பொது நிகழ்ச்சிகளுக்கு இளைஞர்கள் முன்னின்று வெற்றிபெற உறுதுணையாக இருந்து வருகின்றனர்.

இளைஞர்கள் மாதம் ஒருமுறை பணம் வசூல் செய்து புதிய திட்டங்களை வகுத்து வசூல் செய்த பணத்தைக் கொண்டு செயலாற்றி வருகின்றனர். இதுபோன்று மாரியம்மன் கோயில் ஆண்டு திருவிழாவின்போது ஒருநாள் இரவு இளைஞர்கள் ஒன்றுசேர்ந்து ஆடல்-பாடல் அல்லது நாடகம் போன்ற நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

### விவசாய ஒற்றுமைகள்

திருவோணம் கிராமத்தில் வாழ்கின்ற மக்கள் பெரும்பாலும் விவசாய குடும்பங்களைச் சார்ந்தவராக இருக்கின்றனர். இங்கு இவைபோன்று எல்லா சமூகத்தினரும் விவசாயத்தை மையமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். எல்லா இனத்தவருக்கும் பல சாதியினருக்கும் ஒரே இடத்தில் நிலங்கள் இருப்பதனால்

அனைவரும் விவசாயம் செய்வதால் விவசாயத் தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்படுகின்றது. ஆகையால் நடவு பயிர் செய்வதற்கு ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொள்கின்றனர். இங்கு இசுலாமியர், இந்துக்கள், கிறித்தவர் என்னும் பாகுபாடு இல்லாமல் அனைவரும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர்.

### கல்வியில் ஒற்றுமை நிலை

இப்பகுதியில் அமைந்துள்ள கல்வி நிலையங்களில் அனைத்து இன சமூக மக்களும் பயின்று வருகின்றனர். கல்வி நிலையங்களில் தாழ்வுகள் இல்லாமல் அனைத்து மாணவர்களும் கற்றல் கேட்டல் நிகழ்வு பேதமின்றி இனிமையாகப் பழகுகின்றனர். இட ஒதுக்கீடு அரசு தராதபோது குறிப்பிட்ட மக்கள் பின் பற்றுவதில்லை.

### தொழில் ஒற்றுமைகள்

பல சமூக மக்களை உள்ளடக்கிய திருவோணம் கிராமத் தொழில் அமைப்பில் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்கின்றனர். இளவேனில் காலங்களில் விவசாய வேலைகள் குறைவாக இருப்பதனால் ஒருசில மக்கள் நகர்ப்புறங்களுக்கு வேலைகளுக்குச் செல்கின்றனர். சிலர் இசுலாமியர்கள் இளவேனில் காலங்களில் திருவிழாக்கள் தொடங்கிவிடும் என்று அரசிடம் உரிமம் பெற்று வெடிகட்டும் தொழிலைச் செய்து வருகின்றனர். இன்னும் ஒருசிலர் இரு மதத்தினரும் கூட்டாகச் சேர்ந்து வெடிகட்டும் தொழிலைச் செய்து வருகின்றனர். பல இசுலாமியர்கள் இனிப்புக் கடைகளைத் திருவிழாவில் அமைத்து வருகின்றனர். இது தொடர்பான பொருள்களை உற்பத்தி செய்வதற்குப் பல இந்துக்கள் வேலைக்குச் செல்கின்றனர்.

திருவிழா நடைபெறும் கோயில்களுக்குச் சென்று கடைகளை வைத்து வியாபாரம் செய்து வருகின்றனர். அங்கு அர்ச்சனைப் பொருள்களையும் வைத்து வியாபாரம் செய்கின்றனர். இக்கடைகளின் மூலம் வருகின்ற வருமானத்தைக் கொண்டு மேன்மேலும் கடைகளை சிறப்பாக அமைத்து வருகின்றனர். இக்கடைகள் மூலம் பலருக்கு வேலை கொடுக்கின்றனர். இதன்மூலம் சிறந்த பழக்க வழக்கங்கள் வாழ்வோடு ஒட்டிக் கொள்கிறது. எனவே தொழிலில் வேறுபாடின்றி அனைத்துச் சமூக மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர்.

### மரபுகளும் மாற்றங்களும்

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்த சமூகப் படிநிலைகளில் காலத்தின் மாற்றங்களுக்கேற்ப மாற்றம் பெற்று மக்கள் அனைவரும் ஒற்றுமையாகத் திகழ்கின்றனர். மேல் சமூகத்தினர் என்ற நிலை மாறி இன்று ஒற்றுமையுடன் வாழ்கின்றனர். அனைவருக்கும் சம உரிமை வழங்கப்படுகிறது.

பழைய கோயில் அமைப்பின்போது கோயில் பக்கம் இசுலாமியர்கள் வருவதில்லை. ஆனால் தற்பொழுது மிகுந்த மாற்றம் ஏற்பட்டு பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்பட அனைவரும் மாரியம்மன் கோயிலுக்குச் சென்று அர்ச்சனை செய்துவருகின்றனர். திருவிழாக் காலங்களில் அம்மன் புறப்படும்போது இசுலாமியர்களும் கலந்து கொள்கின்றனர். எனவே அனைத்துத் தெருக்களிலும் நின்று அனைவரும் அம்மனை வழிபடுவதற்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. முற்காலத்தைவிட சிறப்பாகவும் விமரிசையாகவும் வழிபாடுகளையும் திருவிழாக்களையும் தற்பொழுது கொண்டாடி வருகின்றனர்.

திருவிழா நிறைவு நாளன்று பழம் மரபுகளைப் போற்றும் வகையில் நாடகங்கள் நடத்தப்படுகின்றன. அதோடு மட்டுமின்றி கலை நிகழ்ச்சிகளும் திரைப்படமும் நடைபெற்று வருகின்றன. திருவிழாவின்போது இசுலாமியர்களும் தனிப்பட்ட முறையில் நிகழ்ச்சிகள் நடத்தி வருகின்றனர்.

நாட்டுப்புறத் தெய்வங்களின் வழிபாட்டு முறைகள் பற்றிய செய்திகளைத் திரட்டும்போது அவற்றின் வழிபாட்டு முறைகள் ஒவ்வொரு இடங்களிலும் வேறுபட்டு அமைந்திருப்பது பற்றிய செய்திகளைத் தெளிவாக அறியமுடிகின்றன. மேலும் கிராமக் கோயில்களில் குறிப்பாக ஊர்ப் பொதுக் கோயில்களில் ஆண்டுத் திருவிழாக்களின்போது பிரச்சனைகள் பல இடங்களில் நிகழ்கின்றன. இங்கு மாரியம்மன் கோயில் திருவிழாவின்போது எவ்வித அசம்பாவிதங்களும் நடைபெறாமல் கட்டுக்கோப்பாக நின்று திருவிழாவைச் சிறப்பாகச் செய்கின்றனர்.

திருவோணம் கிராமத்தில் மூன்று சமூகத்தினர் மாரியம்மனை வழிபட்டு வருகின்றனர். வழிபாட்டு முறையில் எவ்விதப் பேதமும் இல்லாமல் திருவிழாவைச் சிறப்பாகச் செய்வதிலும் பிரச்சனைகள் எதுவும் நடைபெறாமலும் மிகவும் சிறப்பாகத் திருவிழாவை நடத்தி வருகின்றனர். மாரியம்மனுக்கு மட்டுமல்லாமல் மற்ற துணைத் தெய்வங்களுக்கும் தீபஆராதனை செய்து வழிபட்டு வருகின்றனர் என்பதனையும் அறியமுடிகிறது. திருவிழாவின்போது இசுலாமியர்களுக்கு தனிநாளை ஒதுக்கி அவர்கள் அந்நாளில் கலை நிகழ்ச்சிகள் வைத்துத் திருவிழாவைச் சிறப்பித்து வருகின்றனர். மற்ற துணைத் தெய்வங்களுக்கு உயிர்ப்பலி கொடுக்கும் முறை இருப்பினும் படையலில் பூ, வாழைப்பழம், தேங்காய், எலுமிச்சைப் பழம், பொங்கல் ஆகியவற்றைப் படையலாகப் படைக்கின்றனர்.

பல்வேறு பிரிவினராக இருந்தாலும் திருவிழாவில் அனைவரும் ஒற்றுமையாகக் கலந்துகொண்டு சிறப்பான முறையில் விழாவை நடத்துகின்றனர். அம்மன் தேரோட்டத்தன்றும் அனைத்து இனத்தவரும் கலந்து கொள்கின்றனர்.

திருவிழா தொடக்கம் முதல் 15 நாள்கள் வரை பத்து கிராமத்து மக்களும் ஒற்றுமையாக இருந்து அம்மனை வழிபட்டு வருகின்றனர். மரபைப் போற்றும் வகையில் பண்பாட்டு நீதிகளைக் காக்கும் நாடகமும் நடைபெற்று வருகின்றது.

கோடைக் காலத்தில்தான் அனைத்துக் கோயில்களிலும் திருவிழா நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். இக்காலங்களில்தான் மக்கள் வேலையின்றி இருப்பார்கள். அப்போது பிரச்சனைகள் எதுவும் வந்துவிடக்கூடாது என்பதற்காகவே கோடைக்காலத்தில் திருவிழாவை நடத்தி சிறப்பித்து வருகின்றனர். அதே நேரத்தில் பழைய மரபையும் கட்டிக் காத்து வழிபட்டு வருகின்றனர் என்பதனை மாரியம்மன் வழிபாட்டு முறைகளின் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது.

## மாரியம்மனின் வழிபாடும் திருவிழாக்களும்

மனிதன் தன்னைவிட ஒரு சக்தி இருப்பதாக அறிந்ததும் வழிபாட்டு நிலை ஆரம்பமாயிற்று எனக் கூறலாம். பழங்கால மனிதர்கள் இடி, மழை, மின்னல், வெள்ளம் முதலான இயற்கைச் சக்திகளைக் கண்டு அஞ்சி அதிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள தெய்வங்களை வழிபடத் தொடங்கினர். வழிபாடு என்பது மனிதனை நெறிமுறைப்படுத்தி அதன்வழி அவனது வாழ்வைச் செம்மைப்படுத்துவதாகும்.

பண்டைக்காலம் முதல் மக்கள் துன்பங்கள் நீங்கி உலகியல் இன்பங்களைப் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கே வழிபாடு செய்து வந்துள்ளனர் என்று ஆறு.இராமநாதன் (1991:307) கூறுகிறார்.

நாட்டுப்புறத் தெய்வம் என்பது கிராமப்புற மக்களால் கிராம முன்னேற்றத்தின் தன்மை கருதி உருவாக்கப்பட்டு வழிபாடு செய்யப் படுவதாகும். இத்தெய்வங்கள் இவர்களுக்கு மட்டுமே சொந்தமானது என்பதைவிட இவர்களுக்காகவே உருவானது என்ற அடிப்படையில்தான் நாட்டுப்புறத் தெய்வங்களின் கதைகள் அமைந்திருக்கும். அத்துடன் நாட்டுப்புறத் தெய்வங்கள்தான் தங்களுடைய துன்பங்களைப் போக்கமுடியும் என்று இம்மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். இந்நம்பிக்கையே அத்தெய்வங்களுக்கு வழிபாடு நடத்தவும், விழா எடுத்து மகிழவும் தூண்டுகோலாய் அமைகின்றன.

## வழிபாட்டு முறைகளும் திருவிழாக்களும்

மாரியம்மனுக்குத் தினந்தோறும் பூசாரியால் பூசை செய்யப்படுகின்றது. ஞாயிறு, செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களிலும், கார்த்திகை, ஆண்டு பிறப்பு, சிவன் இராத்திரி, ஆடிப்பெருக்கு, ஆயுதப்பூசை ஆகிய நாட்களிலும் கரைகள்

வாரியாக சிறப்புப் பூசைகள் செய்கின்றனர். மற்ற நாட்களில் அய்யர் வீட்டிலிருந்து பொங்கல் செய்து பூசை செய்கின்றனர். இதற்குக் கிராமத்தில் தனியாக நிலம் ஒதுக்கிப் பூசாரிக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. கோயிலைச் சுத்தம் செய்து சிலையை அலங்கரித்து தேங்காய் உடைத்து, தீபம் ஏற்றி, மணி ஒலிக்க வழிபடுகின்றனர்.

### படையல் முறை

திருவிழாவிற்கு முதல் நாள் வீட்டைச் சுத்தம் செய்து எச்சில் படாமல் சமைப்பார்கள். பெட்டைக்கோழி குழம்பு, கருவாடு, முட்டைக் குழம்பு வைத்து கொழுக்கட்டை, முருங்கைக்கீரை செய்து ஒரு செம்பு நீரில் வேப்பிலையைச் செருகி வைத்து (இதனை மதலை என்பார்கள்) சாமி அறை சுவரில் பச்சரிசி மாவு அல்லது சுண்ணாம்பு நீரால் தேர் வரைவார்கள். மாலையில் தேரின் எதிரில் நுனிவாழை இலை போட்டு, சோற்றில் மீன், கருவாடு, முட்டை, கோழிக் குழம்பு, கொழுக்கட்டை, முருங்கைக்கீரை வைத்து வாழைப்பழம், வெற்றிலை, சீவல் வைத்து படைக்கின்றனர். இதனைப் பல்லயம் போடுதல் என்கின்றனர். பல்லயம் போட்ட சோற்றை முதியவர்கள் உண்பதைப் பழக்கமாகக் கொண்டுள்ளனர்.

### திருவிழா

இறந்தவர்களின் ஆவிகளை அமைதிப்படுத்தி நன்மை பெறுவதற்கும், தீயசக்திகள் கிராமத்திற்குள் புகுந்துவிடக்கூடாது என்பதற்கும், கொடிய நோய்களிலிருந்து தங்களை மீட்பதற்கும் மக்கள் சிறு தெய்வங்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறை இரண்டாண்டு மூன்றாண்டுக்கு ஒருமுறை அல்லது பத்தாண்டுகளுக்கு ஒரு முறையாவது விழாவெடுத்து மகிழ்கின்றனர். இவ்விழாக்கள் கிராமத்திற்குக் கிராமம், சாதிக்குச் சாதி மாறுபட்டு காணப்படுகின்றன.

நாட்டுப்புறத் தெய்வத்திற்கு எடுக்கும் விழாவே நாட்டுப்புறத் திருவிழா எனலாம். இத்திருவிழா நாட்டுப்புற மக்களை மிகுந்த உற்சாகத்துடன் இருக்க உதவுகிறது. இத்திருவிழாவினால் நாட்டுப்புற மக்களின் ஒற்றுமை உணர்வும், சமத்துவமும், சமூகத் தொடர்பும் வளர நாட்டுப்புறத் திருவிழாக்கள் உதவிவருகின்றன. உழைக்கும் மக்கள் ஓய்வாக இருக்க உதவுகிறது. பகைமை உணர்வைப் போக்கிக் குறுகிய மனப்பான்மை வேற்றுமையை நீக்கி ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கு நாட்டுப்புறத் திருவிழாக்கள் துணைபுரிகின்றன.

நல்ல மகசூல் கிடைப்பதற்கும், ஊர் செழிப்பாக இருக்கவும், கடும் வறட்சியைப் போக்கவும், ஊரின் நன்மைக்காகவும், முதன்மையாகத் திருவிழா

கொண்டாடப்படுகிறது. திருவிழாவில் பண்பாட்டு பரிமாற்றங்கள் நிகழ்கின்றன. மேலும் பெண் மாப்பிள்ளை ஆகியோரைத் தேர்ந்தெடுப்பதும் உண்டு.

வேண்டுதல்கள், நேர்த்திக்கடன் இவற்றை அடிப்படையாகக் கொண்டே நாட்டுப்புறத் திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. இதனடிப்படையில் இக்கிராமங்களில் உள்ள தெய்வங்களுக்கு அனைவரும் ஒன்றுகூடி திருவிழா நடத்துகின்றனர்.

### காப்புக் கட்டுதல்

திருவிழாவிற்கு முன்பு பதினோறாவது நாள் பூசாரிக்குக் காப்புக் கட்டப்படும். காப்புக் கட்டியதிலிருந்து காப்பு அறுக்கும் வரை யாரும் வெளியூருக்குச் செல்லக் கூடாது. துக்க நிகழ்ச்சிகளுக்குச் செல்லுதல் கூடாது. இக்கிராமங்களில் துக்கம் நேர்ந்தால் தப்பு கொட்டக்கூடாது. இந்த நாட்களில் திருமணம் முதலான மங்கல நிகழ்ச்சிகளைச் செய்தல் கூடாது. இக்காலத்தைக் 'காப்புத்தடை' என்று கூறுகின்றனர்.

### மண்டகப்படி

காப்புக் கட்டிய மறுநாள் முதல் ஒன்பது நாள் வரை மண்டகப்படி நடைபெறும். அய்யர் மண்டகப்படி என்றும் ஒவ்வொரு நாளும் கரைகள் வாரியாக முறைப்படி மண்டகப்படி நடைபெறும்.

### சப்பரத் தேரோட்டத் திருவிழா

பத்தாவது நாள் ஞாயிற்றுக்கிழமை சப்பரத் தேரோட்டத் திருவிழா நடைபெறும். அன்று மாலை மாரியம்மனுக்கு ஒவ்வொரு வீட்டிலும் படையல் போட்டு சாமி கும்பிட்ட பிறகு ஆண்கள் அனைவரும் கோயிலுக்குச் சென்று சப்பர வடிவில் தேர் அமைத்து தேரைச் சுற்றி மூங்கில் தட்டி அடித்து, வண்ணக் காகிதங்கள் ஒட்டி, மின்சார விளக்குகளால் அலங்கரிப்பர். அத்தேரை விடியற்காலைப் பொழுதில் கரைக்காரர்கள் ஒன்றுகூடி தேரை ஒவ்வொரு கரைக்காரர்களும் ஒவ்வொரு சங்கிலியைப் பிடித்து கோயிலைச் சுற்றியவுடன் தெய்வத்திற்குத் தேங்காய் உடைத்து, தீபம் ஏற்றி வழிபடுகின்றனர்.

### காவடித் திருவிழா

திங்கள்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் நேர்ந்து கொண்டவர்கள் விரதம் மேற்கொண்டு காவடி, செடல் காவடி, அலகு காவடி, பால்குடம், தேர் காவடி முதலானவற்றை அலங்காரம் செய்து தப்பு மேள முழக்கத்துடன்

கோயிலுக்கு எடுத்துச் சென்று தெய்வத்திற்கு அபிசேகம் முடித்து சாமி கும்பிட்டு காணிக்கை செலுத்தி வீட்டிற்குச் சென்று விரதம் முடிப்பர். அன்று இரவு கலைநிகழ்ச்சிகள் நடைபெறும்.

### தேரோட்டத் திருவிழா

செவ்வாய்க்கிழமை காலை தேரோட்டம் நடைபெறும். அன்றைய தினத்தில் குழந்தை இல்லாதவர்கள் வேண்டிக் கொண்டால் குழந்தை பிறக்கும். அம்மை நோய் மறுமுள் பாய்ந்தவர்கள் வேண்டிக் கொண்டால் அம்மை நோய் சரியாகிவிடும். இத்தெய்வத்தை நினைத்துக் கொண்டால் நினைத்த காரியம் நிறைவேறும் என்ற நம்பிக்கை மக்களிடம் நிலவி வருகின்றது. இத்தெய்வத்திற்குத் திருவிழா நடத்தினால் மழை பெய்யும் என்ற நம்பிக்கை மக்களிடம் உள்ளது.

### நேர்த்திக்கடன்

மக்கள் தங்கள் இன்ப துன்ப நிகழ்வுகளை வேண்டுதல்களின் காரணமாகப் பகிர்ந்து கொள்கின்றனர். இதன் அடிப்படையில் உருவானதே நேர்த்திக் கடன் என்று கூறலாம்.

மக்கள் தங்கள் வாழ்வின் இழப்புகளையும் குறைகளையும் காணும் போதும், கொடிய நோய்கள் பற்றிக்கொள்ளும்போதும் தெய்வங்களிடம் வேண்டி நிற்பர். தங்கள் எண்ணிய காரியம் நிறைவேறிவிட்டால் அல்லது தங்களைப் பற்றிய நோய் விலகிவிட்டால் அக்காரியம் தெய்வத்தால் நிவர்த்தி செய்யப்பட்டு விட்டது எனக் கருதித் தெய்வத்திற்கு நன்றிகூறும் பொருட்டுச் சில வழிபாட்டுச் செயல்களை மேற்கொள்வர். இதனையே நேர்த்திக்கடன் என்று கூறலாம். நேர்த்திக் கடன்களில் பலவகை நேர்த்திக் கடன் உண்டு. அவற்றுள் காவடி எடுத்தல், மாவிளக்குப் போடுதல், முடியெடுத்தல், உயிர் பலியிடுதல் போன்ற நான்கு வகை மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு விரிவான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

### காவடியெடுத்தல்

மக்கள் மரபில் வழக்கிலுள்ள வழிபாட்டுக் கூறுகளுள் ஒன்று காவடி எடுத்தலாகும். குறிப்பாக, தென்தமிழகத்து மக்களின் வழிபாட்டில் காவடிக்கு மிக முக்கிய இடம் பெறுகின்றது.

### முடியெடுக்கும் நாள்கள்

பெரும்பாலும் ஞாயிறு, செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் முடியெடுக்கின்றனர். இவை மட்டுமல்லாது கார்த்திகை, திருவிழாக்கள் எந்நாளில் நடைபெறுகின்றதோ அந்த நாளில் முடியெடுக்கின்றனர்.

## மாவிளக்குப் போடுதல்

மாவில் விளக்கு ஏற்றி தெய்வத்தை வழிபடுதல் மாவிளக்குப் போடுதல் ஆகும். மாவிளக்குப் போடுதல் பெரும்பாலும் பெண்கள் தொடர்பான வழிபாடாகும். சாதாரணமாக எல்லோராலும் எல்லா நேரத்திலும் எல்லாக் காலத்திலும் நிகழ்த்தப்படுவதாகும்.

மாவிளக்கு என்பது பச்சரியை இடித்தோ அரைத்தோ வெல்லம் அல்லது சீனி கலந்து தண்ணீர் ஊற்றி பிசைந்த மாவில் விளக்கு ஏற்றுவது மாவிளக்கு என்பதாகும்.

## விரத முறை

மாவிளக்குப் போடுவதற்கு முதல் நாளே வீட்டைக் கழுவிச் சுத்தம் செய்து அசைவ உணவு சமைப்பதைத் தவிர்த்துவிடுவார்கள். பெரும்பாலான மக்கள் கோயிலுக்கு முதல் நாளே சென்று, இரவு தங்கி, காலையில் கோயில் குளத்தில் தலை குளித்து, சாப்பிடாமல் விரதம் இருந்து மாவிளக்குப் போடுவார்கள். ஒருசிலர் காலையில் கோயிலுக்குச் சென்று விரதம் இருந்து மாவிளக்குப் போடுவர். இவை பெரும்பாலும் பெருந்தெய்வங்களுக்குப் பொருந்துவதாக அமைகின்றன. சிறு தெய்வங்களுக்குப் பெரும்பாலும் மாலை நேரங்களில் மாவிளக்குப் போடுகின்றனர். காரணம் சிறுதெய்வ வழிபாடு பெரும்பாலும் மாலை நேரங்களில் நடைபெறுகின்றன.

## மாவிளக்கு செய்யும் முறை

பச்சரிசியைக் கழுவி நிழல் காய்ச்சலாகக் காயவைத்து ஈரப்பதத்துடன் உரலில் இடித்தோ, திருவையில் அரைத்தோ மாவிளக்காகப் பயன்படுத்துகின்றனர். சமீப காலங்களில் பொருளாதார முன்னேற்றத்தாலும் தொழில்நுட்ப முன்னேற்றத்தாலும் இயந்திரத்தில் பச்சரிசியை அரைக்கின்றனர். இம்மாவில் வெல்லம் அல்லது சீனியை இடித்துப்போட்டு கோயில் கிணற்றில் அல்லது குளத்தில் உள்ள தண்ணீரை ஊற்றி எச்சில் படாமல் நன்கு பிசைந்து ஏலக்காய் பொடித்துப் போட்டு மூன்று அல்லது ஐந்து உருண்டைகளாகப் பிடித்தோ அல்லது பிசைந்த மாவை பாத்திரத்தில் அப்படியே வைத்துவிடுவார்கள்.

## மாவிளக்கு வகைகள்

1. பிடிமா விளக்கு (தண்ணீர் ஊற்றி பிசைந்த மாவு)
2. உதிர் மாவிளக்கு

3. தானிய மாவிளக்கு

4. துள்ளு மாவிளக்கு

இந்த நான்கு வகை மாவிளக்கும் ஆதிகாலத்திலிருந்து இன்று வரை வேண்டுதல்களின் காரணமாகப் போடப்படுகின்றன. இக்கால வளர்ச்சிக்கேற்ப தற்பொழுது நெய் மாவிளக்கு, பால் மாவிளக்கு என்று இருவகை மாவிளக்குகள் போடப்படுகின்றன.

மேலும் திணை மாவிளக்கு, கம்பு மாவிளக்கு, எள்ளு மாவிளக்கு ஆகிய மாவிளக்குகளும் போடப்படுகின்றன. அரிசி, கம்பு, சோளம், எள், கடலை, பச்சைப்பயறு, உளுந்து ஆகியவற்றை வறுத்து, அரைத்து வெல்லம் கலந்து மாவைத் தானிய மாவிளக்கு என்றும் போடுகின்றனர்.

### உடல் உறுப்பில் மாவிளக்குப் போடுதல்

மாவிளக்குப் போடுதல் பெண்களால் செய்யப்படும் வழிபாட்டுச் சடங்காகும். ஆனால் உடலின் நன்மை கருதியும், நீண்ட ஆயுளோடும் இருப்பதற்கும், உடல் உறுப்புகளில் ஏற்பட்ட நோய்களைப் போக்குவதற்கும் வேண்டிக்கொண்டு உடல் உறுப்பில் மாவிளக்குப் போடுகின்றனர்.

உடல் உறுப்பில் கீழ்க்காணும் ஐந்து நிலைகளில் மாவிளக்குப் போடுகின்றனர்.

1. வயிற்றில் மாவிளக்குப் போடுதல்

2. கண்ணில் மாவிளக்குப் போடுதல்

3. நெஞ்சில் மாவிளக்குப் போடுதல்

4. தலையில் மாவிளக்குப் போடுதல்

5. அலகு குத்தி மாவிளக்குப் போடுதல்

### மாவிளக்குப் போடும் முறை

நேர்த்திக்கடன் செலுத்துபவர்கள் கோயில் குளத்தில் ஒரு வெள்ளைத் துணியை மஞ்சள் தண்ணீரில் நனைத்துக் கட்டிக்கொண்டு வடக்குப் புறம் தலை வைத்துத் தெற்குப்புறமாகக் காலைநீட்டிப் படுக்க வைப்பர். இரண்டு அலகிலும் தெய்வத்தை வேண்டிப் பூசாரி வேல் குத்துவார். இரத்தத்தைத் தடுப்பதற்குத் திருநீற்றை இரண்டு அலகிலும் அள்ளி வைக்கின்றனர். வேண்டுதல்களின் காரணமாக வயிறு, கண், நெஞ்சு போன்ற ஏதாவதொரு உறுப்பில் மேற்கண்ட முறைப்படி தயார் செய்த மாவில் சிறிது குழிபறித்து எண்ணெய் ஊற்றி விளக்கு ஏற்றியவுடன் தேங்காய்

உடைத்து தீபாராதனைக் காட்டி தெய்வத்தை வணங்குகின்றனர். பின்னர் மாவிளக்கு மாவை அனைவருக்கும் பிரசாதமாகக் கொடுக்கின்றனர்.

**உயிர்ப் பலியிடுதல்**

பலியிடுகின்ற பழக்கம் தொடர்ந்து காலங்காலமாக நடந்து கொண்டுதான் வருகின்றது. தொடக்கத்தில் நாட்டின் மீதும், மன்னர்களின் மீதும் அக்கறை கொண்ட வீரர்கள் நாட்டு வெற்றிக்காகவும், தங்களது வெற்றிக்காகவும் தங்களைத் தாங்களே பலியிட்டிருக்கின்றனர். பின்னால் ஊரில் பஞ்சம், பட்டினி தலைவிரித்தாடியபோது ஊர் செழுமை பெறுவதற்கு ஊர் மக்களும் பூசாரிகளும் தங்களைப் பலியிட்டிருக்கின்றனர்.

உயிர்ப்பலி பல நிலைக்களன்களில் நிகழ்த்தப்பட்டாலும் அவைகளுக்குள் பொதுமைக்கூறு ஒன்று உண்டு என்றாலும் அது அச்சமாகும். ஆவியோ, கடவுளோ தமக்குத் தீங்கு செய்துவிடும் என்ற அச்சமே நாட்டுப்புற மக்கள் மனதில் நிலவிவருகின்றது. பலி கொடுக்கவேண்டும் என்று எண்ணுகின்றவர் மனதில் பலிகொடுக்காமல் விட்டுவிட்டால் கேடு விளையும் எனும் அச்சமும் அவர்களுள் உழன்றுகொண்டு இருக்கிறது. அந்த அச்சமே இறப்பு அச்சமாகும். பலிச்சடங்கின் தொடக்கம் பழங்காலமாகும் என்று மானிடவியல் கூறுகின்றது. அறிவு முதிர்ச்சி பெற்றிராத தொன் மக்கள் ஆவிக்கு அஞ்சித் தன் உயிரை அல்லது ஆவியைத் தக்கவைத்துக் கொள்ளவே உயிரைக் கொடையாகக் கொடுப்பதிலிருந்து தோன்றி இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. நாட்டுப்புறங்களில் வாழ்வியல் சடங்கிலும், சமயச் சடங்கிலும் உயிர்ப் பலியிடும் செயல் கட்டாயமாக நிகழ்வதாகும். அவர்களிடம் பலிச்சடங்கு முக்கிய கூறானதற்கு அச்ச உணர்வே காரணமாகும்

பலிகேட்கும் தெய்வங்கள் பெரும்பாலும் அச்சம் தரத்தக்க செயல்பாடுகளில் ஈடுபடுகின்றன. இத்தெய்வங்களைத் துஷ்ட தெய்வங்கள் என்று அழைக்கின்றனர். அத்தகைய தெய்வங்கள் சதைப்பிண்டத்தின் மீது விருப்பம் கொண்டிருப்பதனால் உயிர்களை அழித்துவிடும் என்ற நம்பிக்கை மக்களிடையே நிலவி வருவதால் அத்தெய்வங்களைத் திருப்திப்படுத்த வேண்டிப் பலி கொடுக்கின்றனர். பிடாரி, முனி, கருப்பு, பத்ரகாளி, பூடேறி, காட்டேறி, மின்னடியான், பேச்சியம்மன் முதலான தெய்வங்கள் பலிகேட்கும் தெய்வங்களாகின்றன. தீமை செய்யும் இத்தெய்வங்கள் உயிர்ப்பலி பெறுதல் என்பது இன்றியமையாததாய் இருக்கிறது. உயிர் பலியாகக் கொடுக்கப்படும் விலங்குகளின் நிறம்கூட அப்பலி பெறும் தெய்வத்தின் பண்புநலனை மேலும் விளக்குவதாக அமைகின்றது. சில தெய்வங்கள் மச்சம் இல்லாத ஆடு, சேவல் போன்றவற்றை பலிப்பொருளாகப் பெறுகின்றன. அதிக கோபமும் ஆவேசமும்

கொண்டதாகக் கருதப்படும் முனி, காட்டேறி போன்ற தெய்வங்களுக்கு கருப்புநிற விலங்குகளைப் பலியிடுவதைக் குறிப்பிடலாம்.

மனிதன் துன்பங்களைப் போக்கி இன்பமாக வாழ்வதற்குத் தெய்வத்தை வேண்டிக் கொண்டு பல்வேறு நேர்த்திக் கடன்களைச் செய்கிறான். அவற்றுள் பலியிடுதல் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஊரின் நன்மை கருதியும் குலத்தின் நன்மை கருதியும் பங்காளிகள், உறவுமுறைகள் நன்மை கருதியும் தனக்கு ஏற்பட்ட நோய்களைப் போக்கி நலமுடன் வாழ்வதற்கு குலதெய்வங்கள், ஊர் தெய்வங்கள், நாட்டுத் தெய்வங்களுக்கு ஆடு, கோழி, பன்றி போன்ற உயிரினங்களைப் பலியிடுகின்றனர்.

### ஆடு பலியிடுதல்

கிடா, ஆடு கருப்பு ஆடு, குட்டி ஆடு, மச்சம் இல்லாத ஆடு, சூலாடு, செங்கிடா என்று தெய்வத்தின் வழிபாட்டிற்கேற்ப வேண்டிக் கொண்டு பலியிடுகின்றனர். தெய்வத்தின் நிறம், குணம் அடிப்படையிலும் வேண்டிக் கொண்டு பலியிடுகின்றனர். சாமிக்காக வேண்டி விட்ட ஆட்டை செவு ஆடு, செவு கிடா, சாமி ஆடு என்று அழைப்பார்கள். ஒன்று இரண்டு என்று எண்ணிக்கையின் அடிப்படையில் பலியிடுகின்றனர்.

### கோழி அறுத்தல் (சேவல், பெட்டை)

நாக தெய்வத்தை வேண்டி வீட்டில் விஷப்பூச்சி, பாம்பு, தேள், பூரான், நட்டுவாகிளி போன்றவை அண்டாமலும், தீண்டாமலும் இருப்பதற்காக வீட்டில் சேவல், கோழி அறுத்து வழிபடுகின்றனர். செவ்வாய், வெள்ளி, ஞாயிற்றுக் கிழமைகளில் இந்நிகழ்வு நடைபெறுகின்றன. நாகத்திற்கு வேண்டிவிட்ட கோழியின் கழுத்தில் மஞ்சள் நீர் தெளித்து, தலையைச் சாம்பிராணி புகையில் காட்டி அரிவாளால் கழுத்தை அறுத்து வழியும் இரத்தத்தை வீட்டைச் சுற்றியும், தோட்டத்திலும் விடுகின்றனர். பின்னர் இக்கோழியைச் சமைத்து வீட்டிலுள்ளவர்கள் உண்கின்றனர். நாகத்தை வேண்டி சேவல் அறுத்தால் விஷப்பூச்சிகள் கண்ணில் தென்படாது என்ற நம்பிக்கை மக்களிடம் நிலவிவருவதால் இன்னும் இப்பலியிடும் நிகழ்வு நடைபெற்று வருகின்றது.

### உயிருக்கு உயிர்விடுதல் அல்லது உயிருக்கு மாற்று

நோயின் காரணமாகவோ, விபத்தின் காரணமாகவோ மரணப் படுக்கையில் இருப்பவர்கள், மருத்துவர்களால் கைவிடப்பட்டவர்களும் தெய்வத்திடம் என் உயிரை மீட்டுக் கொடுத்துவிடு, உனக்கு ஒரு உயிரைத் தருகிறேன் என வேண்டிக்

கொண்டு அதன்பேரில் நல்ல நிலைமை அடைந்தவர்கள் ஆடு, கோழி, மாடு போன்ற உயிரினங்களை உயிருடன் கோயிலில் கொண்டுபோய் விடுகின்றனர். இவற்றில் அதிகமாகக் கோழியை விடுகின்றனர். காரணம் எல்லோராலும் விலைகொடுத்து வாங்கமுடியும். உடனே நிவர்த்தியும் செய்துவிடமுடியும்.

ஆடு, மாடு போன்ற உயிரினங்களைக் குறைவான எண்ணிக்கையில் உயிருடன் விடுகின்றனர். காரணம் விலைவாசி உயர்வு, காலதாமதமாகச் செய்ய வேண்டிய சூழ்நிலையால் அவற்றை உயிர்ப்பலி இடுகின்றனர்.

## எலுமிச்சம்பழம் காவு கொடுத்தல்

உயிர்ப் பலி தவிர்க்கக்கூடிய இடங்களில் அல்லது உயிர் பலியிடுதல் இன்று பரவலாக எலுமிச்சம் பழத்தை வெட்டி வீசி நேர்த்திக் கடனை நிவர்த்தி செய்கின்றனர். வண்டி வாகனங்கள் வாங்கும்போது விபத்துக்கள் ஏற்படாமல் இருக்கவும் பழுதடையாமல் இருக்கவும், உயிர் சேதம் ஏற்படாமல் தடுப்பதற்கும் தெய்வத்தின் பூசைப் பொருளாகிய எலுமிச்சம் பழத்தில் குங்குமம் தடவி தெய்வத்தை வேண்டி அறுத்து வீசுகின்றனர். இதனைக் காவுக் கொடுத்தல் என்கின்றனர்.

தீய ஆவிகள் தீண்டினவர்களுக்குப் பூசாரி எலுமிச்சம் பழத்தில் திருநீறு தடவி அறுத்து வீசுகிறார். இதன்மூலம் ஆவிகள் விலகிவிடும் என்று நம்புகின்றனர். உயிரினங்களைப் பலியிடுவதற்குச் சமமாக இக்காவுக் கொடுத்தலைக் கருதுகின்றனர். இந்நிகழ்வு சமீப காலங்களில் அதாவது ஆரியர்களின் தாக்கத்தால் தோன்றியது என்றே கூறலாம்.

இதன் வாயிலாக ஒவ்வொரு தெய்வத்திற்கும் எவ்வாறு பலியிடுகின்றனர், எந்த உயிரினங்களைப் பலியிடுகின்றனர் என்பதை அறியமுடிகிறது. எத்தெய்வத்திற்கு உயிருடன் விடுகின்றனர், எத்தெய்வத்திற்குப் பலியிடுகின்றனர் என்பதை அறியமுடிகின்றது. மனிதர்களுக்காக மட்டும் வேண்டிக் கொண்டு பலியிடுவதில்லை. மாடுகளுக்கும் வேண்டிக் கொண்டு பலியிடுகின்றனர். இதன் மூலம் எந்த நோய்களுக்கு வேண்டிக் கொண்டு உயிரினங்களைப் பலியிடுகின்றனர் அல்லது உயிரோடு விடுகின்றனர் என்பதை அறியமுடிகின்றது.

கோயிலைச் சுற்றியுள்ள கடைகளில் விற்கப்படும் அர்ச்சனைப் பொருள்களைப் பிற மதத்தினரும் வாங்கிச் செல்வதாக அங்கிருக்கும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். இதன்மூலம் இக்கோயிலுக்குப் பிற மதத்தினர் வந்து வழிபாடு செய்வதும், நேர்த்திக்கடன் செலுத்துவதையும் அறிய முடிகின்றது.

## இயல் - 2



## கிறித்தவர்கள் வழிபாட்டு மரபில் சமய ஒருமைப்பாடு

இயல் - 2

# கிறித்தவர்கள் வழிபாட்டு மரபில் சமய ஒருமைப்பாடு

## முன்னுரை

பூலோகம் போற்றும் பூண்டி புதுமை மாதா கோவிலுக்குச் சாதி, மதப் பேதமின்றி அனைத்து இன மக்களும் வந்து மாதாவின் அருளைப் பெற்றுச் செல்கின்றனர். மாதாவின் அற்புதச் செயல்கள் பலவும் இங்கு வரும் மக்களின் மூலம் தெரிந்துகொள்ள முடிகின்றன. இக்கோயில் அமைவிடம் பற்றியும், பக்தர்களின் செயல்பாடுகள் பற்றியும், மாதாவின் மகிமையைப் பற்றியும் ஆராயப்படுகின்றன. மேலும் இங்கு நடைபெறும் வழிபாடுகள், விழாக்கள் மற்றும் திருப்பலிகளில் பங்குபெறும் மக்கள், சாதி, மத பேதமின்றி மாதாவின் அருளைப் பெற்று வருவதைப் பற்றியும் இந்த இயல் ஆராய முற்படுகின்றது.

## கோயிலின் அமைவிடம்

தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு வட்டத்தில் அலமேலுபுரம் பூண்டி என்னும் கிராமத்தில் உலகப் புகழ்பெற்று விளங்கும் பூண்டி புதுமை மாதாக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் கண்களுக்கு விருந்தளிக்கும், பச்சைப் பசேல் என விளங்கும் வயல்வெளிகளுக்கு நடுவில் அமைந்திருக்கும் வெள்ளை மாளிகை என்றே கூறப்படுகிறது.

இவ்வூர் ஒருமைப்பாடுடைய மக்கள் இருக்கக்கூடிய ஊராக அமைந்துள்ளது. இவ்வூர் காவிரித் தாயின் தவப் புதல்வன் என்று கூறும் சிறப்புடையது. பூண்டியின் வடக்கில் கொள்ளிடமும் தெற்கில் காவிரி நதியும் பாய்ந்தோடுகின்றன இத்தகைய நீர்வள மிகுதியால் செல்வச் செழிப்புடன் இவ்வூர் விளங்குகிறது. 'கொள்ளாததைக் கொள்ளிடத்தில் போடணும்' எனும் வரிகளுக்கு இணங்கக் காவிரித்தாய் பெருக்கெடுத்து வந்தபொழுது கொள்ளிடத்தில் இரு கரையும் ஒரு கரையாக வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இக்காலங்களில் கொள்ளிடக் கரையோரம் உடைப்பெடுத்து வெள்ளம் ஊர்களைச் சூழ்ந்து கொண்டது. ஆனால் பூண்டியினை மட்டும் ஒதுக்கிவிட்டது போல் வெள்ளநீர் ஒதுங்கிச் சென்றது. இந்நிகழ்வு மாதாவின் மகிமையால் நிகழ்ந்தது என்று ஊர் மக்கள் நம்புகின்றனர்.

போக்குவரத்து வசதிகள்

இவ்வூர் திருக்காட்டுப்பள்ளியில் இருந்து கல்லணை செல்லும் வழியில் அமைந்துள்ளது. தஞ்சாவூரில் இருந்தும், செங்கிப்பட்டியில் இருந்தும், கல்லணையில் இருந்தும், திருவையாற்றில் இருந்தும் இவ்வூருக்குப் பேருந்து வசதிகள் உண்டு.

தல வரலாறு

இத்தாலி நாட்டிலிருந்து கிறித்தவ மதத்தைப் பரப்புவதற்காக இந்தியாவிற்கு வந்த இறைதூதர் என அழைக்கப்படுபவர் பெஸ்கி எனும் வீரமாமுனிவர் ஆவார். இவர் இந்தியாவின் பல பகுதிகளில் தங்கி இயேசுவின் போதனைகளையும் மாதாவின் அருளையும் மக்களுக்கு எடுத்துக் கூறினார்.

1714 இல் பூண்டி கிராமத்திற்கு வருகைதந்து மக்களை நல்வழிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு, இப்பகுதியில் மாதாவிற்கு ஓர் ஆலயம் அமைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் சிறிய ஆலயம் ஒன்றை 1718 இல் கட்டி முடித்தார். இவரின் முயற்சியினால் அன்னை மாதாவின் ஆலயம் கட்டப்பட்டது. வீரமாமுனிவர் ஆரம்ப காலத்தில் இவ்வன்னைக்கு இட்ட பெயர் 'ஜென்மராக்கினி' என்பதாகும்.

வீரமாமுனிவரால் கட்டப்பட்ட பூண்டி ஆலயத்தின் சிறப்பினை

**அன்பே உருவாகி அமலமரித் தாயாகி**
**துன்பக் கடல்மீள துடுப்பெது தான் பூண்டியிலே**
**விண்ணரசியெனப் போற்றி வீரமா முனிவர்தாய்**
**கருணையும் கனிவும் நல்குணமாக-உன்னை**
**கண்டார் வியக்கும் மயமாக**
**புதுமைகள் என்றும் உனதாக உலகம்**
**போற்றுதே உன்னை ஒரு மனதாக!**

**(பூண்டி திருத்தலப் பங்குப் பொன்விழா மலர், ப. 88)**

என்ற பாடலின் வழி எம்.எஸ்.இமானுவேல், புதுமைத் தாயாக மாதா விளங்குவதைக் குறிப்பிடுகின்றார். ஜன்மராக்கினி மாதாவாகப் பெயர்பெற்று அருள்புரிந்தமையை,

ஜென்மராக்கினி சிரார் ஜெகம் புகழ் பூண்டியில்
பொன்விழா காண் உவந்து
ஜென்மராக்கி பொன்விழா சீர்த்திபெற செந்தமிழ்
சொன் மணியாப்ப செழிப்பு

(பூண்டி திருத்தலப் பங்குப் பொன்விழா மலர், ப. 62)

என்று ஜோசப் ராயர் குறிப்பிட்டுள்ளார்.

**புதுப்பித்தல்**

வீரமாமுனிவரால் கட்டப்பெற்ற ஆலயத்தை புதுப்பிக்கும் அம்சமாக 1899 இல் அருள்திரு ரியாக்கோ, 1955 இல் அருள்திரு ஜெரோ ஆகிய அடியார்கள் சீர்படுத்தி புனிதப்படுத்தினர்.

**அன்னையின் திருவுருவச் சிலை**

பார் போற்றும் அன்னை பாசத்தை மட்டுமே பரிசாக வழங்கும் இனிய தாய். கி.பி.1858 ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டு லூர்து நகரில் பெர்நதத் என்ற சிறுமிக்கு காட்சிதந்தார் என்று கூறப்படுகிறது. அன்று பெர்நதத்திற்கு அன்னை மரி காட்சிதந்த அதே தோற்றத்துடன் செய்யப்பட்ட பல மாதா சுரூபங்களில் பாரிசிலிருந்து இந்தியாவிற்கு மூன்று சுரூபங்கள் கொண்டுவரப்பட்டன. அவற்றுள் ஒன்றுதான் பூண்டியில் உள்ள பூலோகம் போற்றும் பூண்டி புதுமை மாதாவின் சுரூபம் ஆகும். இது 144 ஆண்டுகள் பழமை வாய்ந்த சுரூபமாகும். சந்திரவதனமோ? அன்றலர்ந்த செந்தாமரையோ? என காண்பவர் வியக்கும் பொலிவும், உயிரோடு தழுவும் உணர்ச்சி ததும்பும் முகபாவத்துடனும் பூண்டி மாதாவின் சுரூபம் காணப்படுகிறது. தொடர்ந்து இரவு நேரங்களில் ஆலயத்திற்குள் ஓர் அதிசய ஒளி பரவுவதை, அந்நாளில் மக்கள் கண்டனர். அச்சம் கொண்டனர். ஆனால் அஃது நெருப்பின் வெளிச்சமோ தீபத்தின் சுடரோ அல்ல. இறைவனின் பிரசன்னம் அன்னையின் வழியாக ஒளி வடிவில் பரவியதுதான் என்பதை பங்குத் தந்தை உணர்ந்தாராம். மக்களும் அதைக் கண்டுணர்ந்தார்களாம். இச்செய்தி காட்டுத்தீயெனப் பரவத் தொடங்கியது. பக்தர்களின் கூட்டம் அலைகடலென குவியத் தொடங்கியது. மலேசியா, சிங்கப்பூர், சிலோன், பர்மா, ஆஸ்திரேலியா எனப் பல நாடுகளில் இருந்தும் பக்தர்கள் வந்து நற்பலனைப் பெற்றுச் செல்கின்றனர்.

தனித்தியங்குதல்

ஆரம்பகாலத்தில் மிக்கேல்பட்டி பங்கின்கீழ் இருந்த பூண்டி 1945 இல் மிக்கேல்பட்டி பங்குத்தந்தையாக இருந்த எம்.சின்னப்பநாதர், அடிகளாரின் பெரும் முயற்சியால் கும்பகோணம் 'ஆயர்', 'பீட்டர் பிரான்சிஸ்' அவர்களால் 1945 ஆம் ஆண்டு சனவரி 4ஆம் தேதி தனிப்பங்காகச் செயல்படும் உரிமையைப் பெற்றது. அன்றுமுதல் தனித்துவத்துடன் செயல்படுகிறது.

அருட்தந்தை லூர்து சேவியரின் பணிகள்

இவர், 1955 ஆம் ஆண்டு பூண்டிப் பேராலயத்தின் பங்குத் தந்தையாகப் பொறுப்பேற்றார். பக்தர்களின் குறைகளைத் தீர்த்துவைப்பதில் ஈடு இணையற்றவர் ஆவார். 238 ஆண்டுகளுக்கு முன் வீரமாமுனிவரால் தோற்றுவித்த ஆலயம் பழுதடைந்து இருந்தது. இவ்வாலயத்தின் நடுப்பகுதி மக்கள் யாருக்கும் இடையூறு ஏற்படாவண்ணம் கீழே விழ வேண்டும் என இறைவனிடம் அனுதினமும் வேண்டிக் கொண்டிருந்தார். இறைவனின் அருளால் எவ்வித இடையூறும் ஏற்படா வண்ணம் கீழே விழுந்தது. பிறகு அவ்விடத்தில் பெரிய ஆலயத்தை எழுப்பினார். ஆலய வளர்ச்சிக்கு அரும்பணியாற்றினார். இவரது அரும்பணியைப் போற்றும் வகையில் இவரது கல்லறை கோவிலின் முன் மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது.

பங்குத் தந்தையின் பணிவும் ஆற்றலும் போற்றுதலுக்கும் புகழ்தலுக்கும் உரியது என்பதை,

**மனிதருள் மாணிக்கம் மாதாவின் திருத்தொண்டர் பணிவும் கனிவும்**
**கொண்ட பாசப்பெட்டகம் பிணியும் பசியும் பீறிக் கொண் டோடவைத்த**
**கணிதர் காலம் கணித்த ஞானி காசுபணம் குப்பையென கன்னிமரி**
**திருப்புகழே பேசுகின்ற பூண்டிசாமி புகழ் பொலிகவே**

**(பீட்டர் முடியப்பன், பூலோகம் போற்றும் பூண்டி மாதாத் திருத்தலம், ப 45)**

என்று பக்தர்கள் புகழ்வதாகப் பீட்டர் முடியப்பன் மேற்கோள் காட்டியுள்ளார்.

திருச்சிலுவை நிறுவுதல்

1973 இல் பங்குத் தந்தையாகப் பொறுப்பேற்ற இராயப்ப அடிகளார் ஆண்டவர் இயேசுநாதர் சுமந்த சிலுவையின் சிறுபகுதியினை எடுத்து வந்து தங்கத்தால் செய்யப்பெற்ற சிலுவையின் மையத்தில் பொருத்தி ஆலயத்தில் வைக்கும்

பணியினைச் செம்மையுற செய்துமுடித்தார். இந்தச் சிலுவை அன்னையின் திருவுருவச் சிலைக்குக் கீழ் அமைந்துள்ளது. இதனைத் 'திருச்சிலுவை அருளியக்கம்' என அழைத்து புனிதப் பொருளாக அதனை வழிபடுகின்றனர்.

**பேராலயமாக உயர்த்தப்படல் (பசிலிக்கா)**

1995 இல் பொன்விழாவைக் கொண்டாடிய இவ்வாலயம் அதன் நினைவாகக் குடந்தை ஆயர் பீட்டர் ரெமிஜியுஸ் அவர்களால் நிரந்தர திருத்தலமாக அறிவிக்கப்பட்டது.

பின்னர் உலகம் முழுவ்தும் ஏற்றுக்கொள்ளும் வகையில் உரோம் நகரில் உள்ள கிறித்தவ ஆலயங்களுக்கு நிகரான பேராலயத் தகுதியை 1999 ஆகஸ்டு 3ஆ தேதி 'பரிசுத்த தந்தை போப் இரண்டாம் ஜான்பால்', பசிலிக்கா (பேராலய) என்னும் அறிவிப்பை அன்போடு அளித்தார். அன்றிலிருந்து இந்தியாவிலுள்ள தலைசிறந்த பேராலயங்களுள் ஒன்றாகப் பூண்டி மாதா பேராலயம் போற்றப்பட்டு பெருமையோடு மக்களால் வணங்கப்பட்டு வருகிறது.

**ஆலயத்தின் தற்போதைய நிலை**

காலத்தின் மாற்றத்திற்கும் மக்களின் வருகைக்கும் ஏற்ப இவ்வாலயம் பல்வேறு வளர்ச்சி நிலைகளைக் கண்டுள்ளது. ஆரம்பக் காலத்தில் குறுகிய ஆலயமாக இருந்தது. இன்று விரிந்து பரந்து காணப்படுகிறது. மேலும் பல கோடி ரூபாய் செலவில் ஆலயத்தின் முன்மண்டபம், சுற்றிலும் மதில்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. ஆலயத்தின் வெளிப்புற சுற்றுமதில் மீது புனித சூசையப்பர், புனித இராயப்பர், புனித சின்னப்பர், புனித தோமையார், புனித அருளப்பர் வீரமாமுனிவர், புனித சவேரியார், புனித அருளானந்தர் ஆகியோரின் உருவச்சிலைகள் நிறுவப்பட்டுள்ளன.

ஆலயத்தினைச் சுற்றி அழகுற மரங்கள் நடப்பட்டு வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. இயற்கையின் எழில் மிகுந்த இவ்வாலயத்தில் பலவகையான பறவைகளும் விலங்குகளும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. மேலும் இக்கோயிலுக்கு அழகுசேர்க்கும் வண்ணம் ஆசீர்வாதக்கூடத்திற்கு அருகில் இரண்டு வண்ணமீன்கள் கொண்ட தொட்டி அமைக்கப்பட்டுள்ளன. பசுமை நிறைந்த சோலையின் இடையில் காணப்படும் வெள்ளை மாளிகையினைப் போல் அன்னையின் ஆலயம் காட்சித்தருகிறது.

### அமைதிக் கூட்டம்

மாதாவின் அருளைப் பெறுவதற்கு மக்கள் அமைதியுடன் தனது மனக் கவலைகளை அன்னையிடம் எடுத்துக்கூறும் வகையில் ஆலயத்தின் மேல் பகுதியில் அமைதிக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு மக்களின் மனக் குமுறலான வெப்பம் தணிந்து, அன்னையின் அருளால் குளிர்வடைவது போல் நமது உடலும் உள்ளமும் இவ் அமைதிக்கூடத்திற்குச் சென்றுவரும்பொழுது குளிர்கிறது.

'கெத்செமனே தோட்டத்தில்', தன் தந்தையிடம் சென்று தனியாக செபிக்கும் நிலையை நினைவுகூரும் வகையில் எழுப்பப்பட்டிருக்கிறது.

### அருங்காட்சியகம்

மாதாவின் அருளால் ஆசிபெற்று தாங்கள் வேண்டிக்கொண்ட வேண்டுதல் நிறைவேறியவுடன் பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்தியமையைப் பாதுகாக்கும் வண்ண அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு வேண்டுதல் நிறைவேறியமைக்கு, அன்னை மரியாளுக்கு நன்றிக்கடனை காணிக்கையாகச் செலுத்துகின்றனர். இதில் அவர்கள் பெயர், முகவரி இடம் பெற்றிருக்கிறது. இவை புனிதமானதாகப் பாதுகாக்கப்படுகிறது.

### நுழைவு வாயில்கள்

பூண்டி மாதா ஆலயத்தினைக் குறிப்பிடுகையில் திருக்காட்டுப்பள்ளி-கல்லணை சாலையிலும், செங்கிப்பட்டி-திருச்சி சாலையிலும் ஆலயத்தின் வடக்குப் புறத்திலும் நுழைவு வாயில்கள் உள்ளன.

### பூங்கா அமைப்பு

சுற்றுலாத் தலமாகவும் விளங்கும் இவ்வாலயத்தில் சிறுவர்களின் பொழுது போக்கு அம்சங்களாகிய ஊஞ்சல், சீசா, ஏத்த இறக்கம், சறுக்கல் போன்ற விளையாட்டுச் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

கிறித்தவர்களின் புனித பூமியாகக் கருதப்படும் எருசலேம் நகருக்குச் சென்று கல், மண், மணல், தைலம், மெழுகுவர்த்தி, பூ ஆகியவைகளை எடுத்து வந்து பூங்காவில் 1990 இல் நான்கு நினைவுத் தூண்களை எழுப்பியுள்ளனர். அவை இன்றும் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவை பூண்டி மாதா பூங்கா என்னும் பெயரால் அழைக்கப்படுகிறது.

## தங்கும் விடுதிகள்

குருக்கள் தங்குவதற்கும், கன்னியர்கள் தங்குவதற்கும் மடம் அமைக்கப் பட்டுள்ளது. மேலும் இங்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கேற்ப மூன்றடுக்கு மாடி கட்டப்பட்டுள்ளது. இங்கு வருபவர்களுக்குத் தங்கும் வசதி மிகவும் பாதுகாப்புடன் தரப்படுகிறது.

## அன்னை நிலையம்

அருங்காட்சியகத்தின் கீழ்தளம் அன்னை நிலையம் ஆகும். இங்கு அன்னையின் படம், செபமாலைகள், மோதிரம் என்ற அலங்காரப் பொருள்களும், மெழுகுவர்த்தி, தீர்த்தம், அப்பம் உள்ளிட்ட பொருள்களும், அன்னைக்குக் காணிக்கையாகச் செலுத்தப்படும் புடவைகளும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. இதனை விருப்பமுள்ள எம்மதத்தினரும் வாங்கிச் சென்று பயன் அடையலாம். மேலும் லூர்து சேவியரின் நினைவாகவும், அவரது ஆன்மீகப் பணியைப் போற்றும் வகையிலும் லூர்துசேவியர் உணவகம் என்ற பெயரில் உணவகம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

ஆலயத்தினுள் 'சின்னராணி' என்ற பெயரில் கல்வி அளிக்கும் உயர்நிலைப் பள்ளியும், மக்களின் மனநோயைத் தீர்ப்பதுடன், உடல் நோயையும் அகற்றும் வகையில் மருத்துவமனையும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

## பங்குத் தந்தையர்கள்

அருட்திரு. இருதயம் பவுல் அடிகளார் (1945-48)

அருட்திரு. வி.எஸ்.லூர்துசேவியர் அடிகளார் (1955-72)

அருட்திரு. ஏ.உபகாரசாமி அடிகளார் (1972)

அருட்திரு. ஏ.இராயப்பர் அடிகளார் (1972-91)

அருட்திரு. எஸ்.சூசை அடிகளார் (1991-97)

அருட்திரு. ப.தங்கசாமி அடிகளார் (1997-2003)

அருட்திரு. எல்.குழந்தைசாமி அடிகளார் (2003)

## பூண்டி மாதாப் பேராலய வழிபாட்டு முறைகள்

- நாள் வழிபாடு
- வார வழிபாடு
- சிறப்பு வழிபாடு

- அன்பிரவு வழிபாடு
- நவநாள் திருப்பலி
- விழாக்கால வழிபாடு

ஆகியவை இவ்வாலயத்தில் இறைவனை வழிபடும் முறைகளாகும். இங்கு மக்களின் நலன் காக்கும் நோக்கத்தில் இறைவழிபாடு நடைபெறுகின்றது. வழிபாட்டினை இங்குப் பூசை என்றும் திருப்பலி என்று பெயரிட்டு அழைக்கின்றனர். இவ்வாலய வழிபாட்டு முறைகள் பற்றி கள ஆய்வின் மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

தன்னை நாடிவரும் பக்தர்களின் குறைகளைக் களைந்து எண்ணிய காரியங்களை எண்ணியபடி அன்னையிடமிருந்து அருள்வளங்களைப் பெறப் பூண்டி பசிலிக்கா இருகரம் நீட்டி மக்களை வரவேற்று பரிபூரண பலனை அள்ளித் தருகிறது.

1. சனவரி 3 பேராலயம் புனிதப்படுத்தப்பட்ட பொன்னாள்
2. தவக்காலத்தில் ஆறாவது வெள்ளி
3. மே 15 திருத்தல பேராலய ஆண்டுவிழா
4. சூன் 29 புனித இராயப்பர், புனித சின்னப்பர் நாம விழா
5. ஆகஸ்ட் 3 பூண்டி மாதா ஆலயம் பேராலயமாக அறிவிக்கப்பட்ட நாள்
6. செப்டம்பர் 8 புனித அன்னையின் பிறப்புவிழா

### நாள் வழிபாடு

திங்கள் முதல் சனிக்கிழமை வரையில் காலை 6 மணி, முற்பகல் 11.15 மணி, மாலை 5.15 மணி ஆகிய நேரங்களில் பங்குத் தந்தையர்களால் நடத்தப்படும் வழிபாட்டிற்கு நாள் வழிபாடு என்று பெயர். இவை நாள்தோறும் அந்தந்த நேரங்களில் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இதில் பொதுமக்கள் அனைவரும் மத, இன வேறுபாடின்றிக் கலந்து கொள்கின்றனர்.

### வழிபாட்டிற்கு அழைத்தல்

வழிபாடு தொடங்குவதற்கு முன்னர் நேரம் ஒலிப்பெருக்கியின் மூலம் அறிவிக்கப்படுகிறது. பின், வருகைப் பாடல் என அனைவரையும் வருக வருக என்பதுபோல் பாடப்படுகின்றது. இவை இறை மக்களைப் பூசைக்கு அழைக்கும் அழைப்புப் பாடலாகவும் அமைகின்றது. இவ் அழைப்புப் பாடல்களைக் கன்னியர்களும் அங்குக் கல்வி பயிலும் மாணவர்களும் பாடுகின்றனர். இப்பாடலானது

அழைக்கிறார் இயேசு ஆண்டவர்
ஆவலாய் நாம் செல்லுவோம்
அவர் பலியினில் கலந்திட அவர் ஒளியினில் நடந்திட
சாட்சிகளாய் என்றும் வாழ்ந்திட-இந்நாளில்
தேடிய தேவன் வருகிறார்
தன்னையே நாளும் தருகிறார்
....... ........ (தகவலாளர்: மாதவன், 57, பூண்டி)

இப்பாடலைப் பாடுவதன் மூலம் உள்ளூர் மக்கள் பூசை ஆரம்பமாகி விட்டது என்பதைத் தெரிந்துகொள்வதுடன், அன்னையின் ஆலயம் நோக்கி வருவதற்கான அழைப்பு வந்துவிட்டது என்ற ஆனந்தத்துடன் ஆலயம் நோக்கி வருகை தருகின்றனர்.

வழிபாட்டில் மக்கள் வாழ்க்கையோடு ஒட்டியவாறு, ஏதேனும் ஒரு நீதிக் கருத்தினைத் திருவிவிலியத்திலிருந்து எடுத்துக்கூறி மக்களின் மனதில் நல்லெண்ணங்கள், நற்சிந்தனைகளை ஏற்படுத்தும் வகையில் பங்குத் தந்தையர் போதனை செய்கின்றனர். திருவிவிலியம்,

சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த்
திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு எல்லா நீடிய
சந்தத்தோடு உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி
கடிந்து கொண்டு புத்தி சொல்லு (தீமோ. 4-2)

(திருவிவிலியம், புதிய ஏற்பாடு, ப. 293)

என்ற திருவசனத்தைக் கூறி மக்களை நல்வழிப்படுத்த வேண்டும் என்கிறது. கன்னியர்களும் பூசைக்கு வந்துள்ள அனைத்து மக்களும் மண்டியிட்டு இறைவனிடம் வேண்டிக் கொள்கின்றனர்.

**சமாதானம் சொல்லுதல்**

வழிபாடு இறுதிநிலையைக் கடப்பதற்கு முன் பங்குத் தந்தையர், எல்லாம் வல்ல இறைவனாகிய இயேசுவின் பிள்ளைகளாகிய நாம் எண்ணத்தாலும், செயலாலும் இவ்வாலயத்தில் ஒன்றிணைந்துள்ளோம். இன்று போல் எந்நாளும் பிறரிடத்தில் அன்புடன் வாழ்வோம். அதற்காக ஒருவரை ஒருவர் சமாதானம் கூறிக் கொள்வோம் என்று குறிப்பிடுகின்றனர்.

வழிபாட்டின்பொழுது அருகில் உள்ள மக்கள், கிறித்தவர் மட்டுமல்லாது எந்த இன மக்களாக இருந்தாலும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்பதனைச் சமாதானம், சமாதானம் என ஒருவருக்கொருவர் கூறிக்கொள்வதனைக் கண்கூடாகக் காணமுடிகிறது.

மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்பதை இயேசுகிறித்துவின் வாக்காக,

**நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு**
**கிறித்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக**
**(திருவிவிலியம், புதிய ஏற்பாடு, . 207)**

என்ற புதிய ஏற்பாடு விளக்கம் தருகிறது.

மண்ணில் பிறந்த மக்கள் ஒற்றுமையுடன் இருந்தால் எதனையும் சாதிக்கலாம் என்பதனை,

**ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு-நம்மில்**
**ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே (பாரதியார் கவிதைகள், ப. 14)**

என்னும் பாரதியின் பாடல் ஒற்றுமையைப் புலப்படுத்தும் வகையில் அமைகிறது.

கிறித்தவர்களின் திருப்பலி முழுமைபெறுவது என்பது அப்பம் சாப்பிடுதலே ஆகும். இயேசுவின் இரத்தமும் சதையும் கலந்து குடிக் கொண்டிருப்பதால் இறைவன் மீது விசுவாசமாகவும் உண்மையான அன்பாகவும் இருக்கும் கிறித்தவ மக்களுக்கு மட்டுமே அளிக்கப்படுகின்றது. இவ் அப்பம் மற்ற இனத்தவர்க்குத் தரப்படுவதில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

**தீர்த்தம் தெளித்தல்**

வழிபாடு முடிந்த பின் பங்குத் தந்தையர் மக்கள் மேல் மந்திரித்தத் தீர்த்தத்தினைத் தெளிக்கின்றனர். பின்னர் சில செபங்களைச் சொல்லி பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே, ஆமென், ஆண்டவர் உங்களோடு இருப்பாராக சென்று வாருங்கள் திருப்பலி முடிந்தது என்று கூறி வழிபாட்டினை நிறைவுசெய்கிறார். இவை திருப்பலியின்போது நிகழ்த்தப் படுகிறது.

சாதாரண நேரங்களில் பங்குத் தந்தையரிடம் சென்று ஆசிர்வாதம் பெற்று வரலாம். அவர்கள் ஆலயம் வரும் அனைவருக்கும் ஆசிர்வாதம் வழங்கி, தீர்த்தம்

தெளிக்கின்றனர். அனைத்து மக்களின் வேண்டுதல்களையும் ஏற்றுக்கொண்டு, அவர்கள் நலம்பெறவேண்டுமென்று ஆசிர்வாதம் வழங்கி தீர்த்தம் தெளிக்கப்படுகிறது.

## வழிபாடுகள்

மக்கள் தங்கள் இன்னல்கள் அகன்று நன்மைகள் பெறுவதற்காக இறைவனை வணங்குவதே வழிபாடு என்பர். வார இறுதி நாளான ஞாயிற்றுக் கிழமையில் நடத்தப்படும் வழிபாடு வார வழிபாடாகும். நாள்தோறும் மூன்று வழிபாடுகள் நடைபெறும். வார வழிபாடு மட்டும் நான்குமுறை நடைபெறும்.

மக்கள் நலன்கருதி வழிபாட்டு நேரங்களைத் தவிர விரும்பிய நேரத்தில் ஜெபம் சொல்லி நடத்தப்படும் வழிபாட்டிற்குச் சிறப்பு வழிபாடு என்பர். இதனை அன்பிரவு வழிபாடு, நவநாள் திருப்பலி என்று கூறப்படுகின்றது.

## அன்பிரவு வழிபாடு

மாதத்தின் முதல் சனி மற்றும் மூன்றாம் சனிக்கிழமையன்று மக்கள் நலன்பெறவேண்டும் என்பதற்காக அன்பிரவு வழிபாடு மேற்கொள்ளப் படுகின்றது. இத்தினத்தன்று காலை 6 மணிக்கும், 9.30 மணிக்கும், முற்பகல் 11.15 மணிக்கும், பிற்பகல் 12.30 மணிக்கும் இரவு 9 மணி முதல் 12 மணி வரையும் திருப்பலி நடத்தப்படுகிறது. மாலை 5 மணிக்கு கன்னியர்கள், பக்தர்கள் அனைவரும் சேர்ந்து பாடல்கள் பாடியும் செபங்கள் சொல்லிக் கொண்டும் அலங்கரிக்கப்பட்ட தேரில் அன்னையைத் தூக்கிக் கொண்டு வலம் வருவர்.

அன்பிரவு வழிபாடு அன்று சாதி, இனம், மதம் வேறுபாடின்றி அனைவரும் வந்து கலந்துகொள்கின்றனர். இவ்வூர்க்கு அருகில் உள்ள மக்கள் நடைப்பயணமாகவே வருவார்கள். பின் இரவு ஒன்பது மணி முதல் பன்னிரண்டு மணி வரையுள்ள திருப்பலியில் கலந்துகொண்டு கோயிலில் இரவு படுத்துறங்குவர். இவ்வாறு வரும் மக்கள் தங்கள் வேண்டுதலை நிறைவேற்றும் வகையில் வந்திருப்பதாகக் கூறுகின்றனர்.

அன்பிரவு வழிபாடு முடிந்தவுடன் வீட்டிற்குச் செல்ல விரும்புபவர்களுக்கு ஏற்றாற்போல இரவு பன்னிரண்டு மணிக்குப் பூண்டி மாதா கோயிலில் இருந்து தஞ்சாவூர் செல்வதற்குப் பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அன்பிரவு வழிபாடு அன்று காலை 11 மணிக்கு ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்படுகிறது. அன்பிரவு வழிபாட்டில் மக்கள்

மூன்று முறை, ஒன்பது முறை வருவதாக வேண்டிக் கொண்டு வேண்டுதலை வைப்பர். வேண்டுதல் நிறைவேறியவுடன் தனது நேர்த்திக் கடனைச் செலுத்தும் வகையில் அன்பிரவு வழிபாட்டில் கலந்துகொண்டு ஆலயத்தில் அன்றிரவு தங்கியிருந்து தனது வேண்டுதலை நிறைவேற்றிக் கொள்கின்றனர்.

அன்பே இறைவனையும் மனிதனையும் இணைக்கும் பாலம். அந்த அன்பென்னும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு மாத முதல் மற்றும் மூன்றாம் சனிக்கிழமைகளிலும் இரவு 9 முதல் 12 மணி வரை அன்பிரவு செபக்கூட்ட வழிபாடு நடைபெற்று திருப்பலியுடனும், இறையாசியுடனும் நிறைவேற்றப்படுகிறது (பி.தங்கசாமி, பூண்டி மாதா பசிலிக்கா வரலாறு, ப.12) என்று ஆலய வரலாற்று நூலில் குறிப்பிடப்படுகிறது.

**நவநாள் திருப்பலி**

நவநாள் என்பது மக்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளிலிருந்து தங்களை காப்பாற்றிக் கொள்வதற்காக ஒன்பது நாள் பூசை மேற்கொள்வது ஆகும். இதேபோல் மாதாவிடம் தமது வேண்டுதலை நிறைவேற்றினால் ஒன்பது வாரம் வருவதாக வேண்டிக் கொள்வர். வேண்டுதல் நிறைவேறியவுடன் நேர்த்திக் கடனை நிறைவேற்றுவார்கள்.

மக்களை இயற்கைச் சீற்றங்களிலிருந்து காப்பதற்கு ஒன்பது நாட்கள் தொடர்ந்து வழிபாட்டிலும், பிற நேரங்களில் செபங்கள் செய்து இறுதி ஒன்பதாம் நாளில் ஆலயத்தினரால் நடத்தப்படும் வழிபாட்டு முறைக்கு நவநாள் திருப்பலி என்பர்.

"இறைவனாகிய என்னை நோக்கிக் கூப்பிட்டால் அனைத்து காரியங்களையும் செய்வேன்" என்று பைபிள் குறிப்பிடுகிறது. இதனையே,

> **என்னை நோக்கிக் கூப்பிடு, நீ அறியாததும் உனக்கு**
> **எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்**
> **(ஆர்.அருளப்பர், உலகின் உயிர், ப. 42)**

என்ற இறைவாசகம் மூலம் அறியலாம். இவ்வழிபாடானது பல்வேறு கருத்துப் பொருண்மைகளின்கீழ் உலக உயிர்கள் அனைத்தும் நன்மைகள் அடைய வேண்டும் என்பதற்காக வெளி ஆலயங்களில் இருந்து பங்குத் தந்தையர்களை அழைத்து வந்து சிறப்பு வழிபாடாக நடத்தப்பெறுவதைக் களப்பணியின் மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது.

### ஆண்டுப் பெருவிழா

இவ்வாலயத்தில் ஆண்டுதோறும் மே மாதம் நடத்தப்படுகின்ற விழாவே ஆண்டு பெருவிழாவாகும். மே மாதம் 6ஆம் தேதி முதல் 15 ஆம் தேதி வரை பத்து நாட்கள் நடத்தப்பட்டு வருகிறது.

திருவிழா முதல் நாளில் அன்னையின் திருவுருவம் பொறிக்கப்பட்ட கொடியினை எடுத்துக் கொண்டு கோயிலைச் சுற்றிவருவர். பின்பு ஆலயத்தின முன் உள்ள கொடிமரத்தில் பங்குத் தந்தையரால் கொடியேற்றப்படும். பின்பு அங்கு வந்திருக்கும் பிற ஆலய பங்குத் தந்தையருடன் திருப்பலி நடைபெறும்.

இக்கொடியேற்றம் மேளதாளத்துடனும், வானவேடிக்கையுடனும் இசை நிகழ்ச்சிகளுடனும் நிகழ்த்தப்பட்டு கொடியேற்றப்படுகிறது. இந்த ஒன்பது நாளும் சிறப்பு திருப்பலிகள் நிகழ்த்தப்படுகின்றன.

ஒன்பதாவது நாள் அலங்கரிக்கப்பட்ட தேரில் அன்னையின் உருவச் சிலையை வைத்து ஊர்வலமாக எடுத்துச் செல்கின்றனர். தேரினை இழுத்துச் செல்வதற்கு முன்பு தேருக்கு எவ்வித இடையூறும் ஏற்படாவண்ணம் பூசைகள் செய்யப்பட்டு மக்கள் அனைவரும் ஒன்றுகூடி மேள தாளத்துடன் தேரை இழுத்துச் சென்று வீதியுலா கொண்டுசெல்லப்படுகின்றது.

### சமய ஒருமைப்பாடு

மனிதன் பல குழுக்களாக வாழத் தலைப்பட்டக் காலத்திலிருந்து தன் இனத்தின் கலாச்சாரங்களையும் பண்பாடுகளையும் பிறருக்குத் தெரிவிக்கும் வகையில் பல்வேறு புதுமையான நெறிகளை வகுத்துக் கொண்டுள்ளனர். இதனால் அக்குலத்தில் வாழ்க்கை நிலையை முழுமையாக அறிய வழி பிறக்கிறது எனலாம்.

ஆனால் மனிதர்கள் பல்வேறு இனப் பிரிவுகளைச் சார்ந்து வாழ்ந்தாலும் முழுமுதல் ஆற்றலாக விளங்கும் தெய்வங்களை வணங்குதல் என்பது அவர்களின் ஆழ்மன ஆசையாகும்.

ஊர் தெய்வம், குலத் தெய்வம், காவல் தெய்வம் என்று பல்வேறு பெயர்கள் இட்டு தன் விருப்பத்திற்கேற்ப வணங்கினாலும் இறைவன் என்பது பொதுநிலைப்படுத்தப்பட்டதாகும். ஓரிடத்தில் எழுந்தருளும் இறை ஆலயத்திற்குச் சென்று சாதி, மத வேறுபாடின்றி மனிதநேயம் தழைத்தோங்க வழிபடுதல் சமய ஒற்றுமைக்குச் சான்று பகர்வனவாகும். இந்நிலையில் பூண்டி மாதா

பேராலயத்திற்குப் பல இனத்தவர்கள் வருகைபுரிந்து மாதாவின் அருளைப் பெறும் நிலை இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளது.

**எம்மதமும் சம்மதம்**

உலகில் பிறவியெடுத்துள்ள மனிதன் குணத்தாலும் நிறத்தாலும் வேறுபட்டனவாக இருந்தாலும் மனிதப் பிறவியென்பதில் ஒருமைத்தன்மை நிறைந்தவனாகக் காட்சியளிப்பதைக் காணமுடிகின்றது.

மனிதர்கள் சார்ந்துள்ள குலமும், அருள்தரும் இறைவனும் ஒன்றுதான் என திருமூலர் குறிப்பிகின்றார். இதனை,

**ஒன்றே குலம் ஒருவனே தேவன்** **(திருமந். 2066)**

எனும் திருமந்திர வரியால் அறியலாம்.

பிறப்பானது மனிதர்களுக்குப் பொதுத்தன்மை நிறைந்த ஒன்றாகும் என்பதை,

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்**

என்னும் குறளால் வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார்.

மனிதர்களிடத்தில் காணப்படும் சாதி, மத வேறுபாடுகள் நீங்கி அனைவரும் அன்புள்ளத்துடன் வாழவேண்டும் என்று பாரதி,

**நிகரென்று கொட்டு முரசே-இந்த**
**நீணிலம் வாழ்பவ ரெல்லாம்**
**தகரென்று கொட்டு முரசே-பொய்மைச்**
**சாதி வகுப்பினையெல்லாம்**

என்ற வரிகள் மூலம் விளக்கம் தருகின்றார்.

உலக உயிர்கள் அனைத்தின் துன்பங்களை நீக்குவதற்காகவே இயேசுநாதர் பிறப்பெடுத்தார் என்பதை,

**விண்முட்டு மலையில் தோன்றி**
**விளங்கு பல நிலங்கடந்து**
**பண்பட்ட மாந்தர் உன் போல்**
**பணிவுமே தன்னில் தோன்றக்**

கண்பட்ட இடமேயெல்லாங்
களிப்புறச் செய்து நாளும்
அண்டிட்ட உயிர்கள் வாழ
ஆர்த்திடும் சைட்னசு ஆறே

என்று சமயப் பொதுமைத் தோன்ற டி.ஏ.ஞானாபரணம் கூறுகின்றார்.

இந்திய நாடு சமய நெறிகளில் மூழ்கித் திளைத்த நாடு. எத்தனையோ சமயங்களின் பிறப்பிடம் அது. அரசியல், பொருளாதாரம், சமூக முன்னேற்றம், விஞ்ஞான வளர்ச்சி ஆகிய அடிப்படையில் எண்ணற்ற மாற்றங்கள் ஏற்படினும் சமயத்திற்கும் சமயக் கோட்பாடுகளுக்கும் என்றும் வரவேற்பு உண்டு என்பது வெள்ளிடைமலை.

எந்த மதத்தை மனிதன் பின்பற்றினாலும் அதன் மூலம் அவன் முன்னேற்றம் அடையவேண்டும். அந்த பிரபஞ்ச வாழ்க்கை மனிதனுக்கு நித்தியமானதன்று. இதைக் கடந்து அவன் அப்பால் போகவேண்டும் என்னும் கோட்பாடு எல்லா மதங்களுக்கும் பொதுவானதே. செத்தபிறகு சீரும் சிறப்பும் அடைவதைப் பற்றிய நம்பிக்கை ஒவ்வொரு மதவாதியிடத்திலும் இருக்கிறது. மற்றும் இங்கு இவ்வுலகில் இருக்கும்போதே மனிதன் எப்படியெல்லாம் முன்னேற்றம் அடையலாம் என்பதையும் ஒவ்வொரு மதமும் தன் கோட்பாடாகக் கொண்டுள்ளது என்று திருவாசகம் கூறுகிறது.

சமயங்கள் அனைத்தும் பரம்பொருளாகிய இறைவனையே போற்றிப் புகழ்கிறது என்பதை,

வேறுபடுஞ் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்ற
விளங்குபரம் பொருளே நின் விளையாட்டால்லால்
மாறுபடுங் கருத்தில்லை முடிவில் மோன
வாரிதியின் நதித்திரள் போல் வயங்கிற்றம்மா

என்னும் பாடல் வரிகள் விளக்குகின்றன.

உலகில் பிறப்பும் இறப்பும், சாதியும், குலமும், சொர்க்கமும் நரகமுமாக விளங்குபவன் இறைவன் ஒருவன்தான் என்பதை,

சாதியோடு குலமொன்று மோட்சமும் நரகமுந்
தானொன்று சம்பவிக்கும்

சாவொடு பிறப்பொன்று சத்திய மறையொன்று
சன்மார்க்க போதம் ஒன்று

என்ற பாடல் வரிகளின் மூலம் ந.சவுரிமுத்து விளக்கம் தருகின்றார்.

இவற்றினால் சாதி, மதம் மற்றும் உயர்வு தாழ்வு கொள்ளாமல் ஒற்றுமையுடன் செயலாற்றி இறைவனை வணங்கினால் மண்ணில் மனிதநேயம் வளர்ந்து சமத்துவம், சமய ஒருங்கிணைப்பு போன்ற உயர் சிந்தனைகள் தோன்றும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

உலக உயிர்கள் அனைத்தும் குறையின்றி நன்மைகள் அடையவும், மக்கள் வாழ்வில் இன்னல்கள் ஏதுமின்றி நீண்ட ஆயுளால் வாழ்ந்து மகிழவும் அன்றாடம் இறைவனிடம் விண்ணப்பிக்கும் வழியாக வழிபாடு அமைகிறது.

இயேசுவின் திருவுடலாகக் கிறித்தவர்களால் வணங்கப்படும் அப்பம் கொடுத்தல், மக்கள் அறியாது செய்யும் பாவங்களை நீக்கும் பாவமன்னிப்பும், அவ்வப்போது ஏற்படும் இன்னல்கள் விலகவும், நாடு நலம் பெறவும், இறைவனிடம் மனம் உருக வேண்டும் மன்றாட்டு மற்றும் நவநாள் திருப்பலிகள், பூசை எழுதுதல் போன்றவை பிற மத ஆலயங்களில் இல்லாத சிறப்பு வாய்ந்த முறைகளாகும்.

மக்களுக்குத் தீமைகள் ஏற்படாமல் காக்கும் தெய்வத்தை மகிழ்விப்பதற்காகத் திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன என்பது மக்களின் நீங்காத நம்பிக்கையாக உள்ளது. திருவிழாக் கொடியினை ஊர்வலமாக எடுத்துச் சென்று கொடிமரத்தில் ஏற்றுதல் திருவிழா நடைபெறுவதைக் காட்டும் ஒரு குறியீடாக இருப்பதை அறியமுடிகின்றது.

உலக மக்கள் ஓர் குலம் ஓர் இனம் என்று கூறி ஒருங்கிணைதல் என்பது மிகவும் அரிதான செயலாகும். ஆனால் இவ்வாலயத்தில் இறைவன் முன் அனைவரும் ஒன்றுதான் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் அனைத்து மதத்தினரும் ஒன்றிணைந்து வழிபடுகின்றனர் என்பது போற்றுதற்குரியதாகும்.

பிற மதத்தினர் மாதாவினை வழிபடும் முறை, வேண்டிக் கொள்ளும் முறை சற்று வேறுபாடும், விருப்பமும் நிறைந்ததாகவே உள்ளன. தங்கள் குறைகள் புதுமைத்தாயினால் நிறைவடைந்துவிட்டால் அவ்விறைவனுக்கு உகந்த வகையில் காணிக்கைகளை அளித்து மகிழ்கின்றனர் என்பதையும் கண்டுணர முடிகிறது.

ஆலயத்தில் பின்பற்றப்படும் அனைத்து சுபநிகழ்வுகளில் சாதி மத வேறுபாடின்றி மக்கள் அனைவரும் மாதாவின் பிள்ளைகள் என்னும் உயர்ந்த

பேற்றினை மையமாகவும் சகோதர உணர்வுபொங்க சமமாகவும் மதிக்கப்படுகின்றனர். பங்குத் தந்தையர்களும் மத வேறுபாடு காட்டாமல் மக்களின் எண்ணங்களைப் புரிந்துகொண்டு சிறப்பு வழிபாடு, மந்திரித்தல் போன்றவற்றினை மேற்கொள்கின்றனர் என்பது பாராட்டிற்குரியதாகும்.

மாதாவின் புதுமைகள் அனைத்தும் மக்கள் தங்கள் வாழ்வில் கண்டு அனுபவித்து உணர்ந்தவைகள். பிற மதத்தினர்கள் பங்களிப்பும் வருகையும் அதிகமாகக் காணப்பட்டாலும் வழிபாட்டிலும் மதக் கொள்கைகளிலும் எவ்வித வேறுபாடுகளும் ஏற்படுவதில்லை.

கிறித்தவ மக்களைப் போன்று மற்றைய இனத்தவர்களும் பயபக்தியோடு வழிபடுவதால் ஒற்றுமை உணர்வு மிளிர்வதற்குத் துணையாக இவ்வாலயம் விளங்குவதை அறிய முடிகின்றது. மனிதனை மனிதன் தன் வாழ்வில் ஒன்றிணைந்து மனிதநேயம் வளர்வதற்கு வகை செய்ய மறுத்தாலும், மறந்தாலும் இறைசக்தி இயல்பாகவே அவர்கள் அறியாத வண்ணம் ஒரு தாய் மக்களைப் போன்று வழிநடத்தும் சிறப்பும், வளர்ச்சியும் பூண்டி புதுமை மாதாவின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும் என்பதைக் களப்பணி உணர்த்தியது.

குழந்தை இல்லாதவர் முகத்தில் காணும் சோகம் வார்த்தைகளில் சொல்லி விளங்க முடியாது. பல வருடம் தவமிருந்து பிள்ளைவரம் பெற்றபோது அவர்கள் முகத்தில் காணும் கொள்ளை மகழ்ச்சியை எல்லை பிடித்துச் சொல்லமுடியாது. இந்த அனுபவ நிகழ்வுகளைப் பூண்டித் திருத்தலத்தில் அடிக்கடி சந்திக்கின்றனர். பூண்டி அன்னையின் வேண்டுதல் குழந்தைச் செல்வங்கள் வழங்கும் வரத்தை பக்தர்களுக்கு நிறையவே பெற்றுத் தருகிறது. அதுமட்டும் அல்ல. திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் ஆகவேண்டும் என்றும், குடும்ப கஷ்டம் விலகவேண்டும் என்றும், குழந்தைகளுக்குப் படிப்பு நல்லபடியாக வரவேண்டு என்றும், கணவன்-மனைவி பிரச்சினைகள் தீரவேண்டும் என்றும் வேண்டிக் கொள்கின்றனர். அவை அத்தனையும் நல்லபடியாக நிறைவேறுகிறதாம். அதற்குக் காணிக்கையாகத் தென்னம்பிள்ளை, குத்துவிளக்கு, மெழுகுவர்த்தி போன்ற பல பொருள்களைச் செலுத்துகின்றனர். பூண்டி மாதா திருத்தலத்திற்கு அனைத்து மதத்தினரும் வருகின்றனர் என்று அங்குப் பணிபுரியும் தேவராஜ் கூறினார்.

பேரருட்தந்தை எம்.ஏ.செபாஸ்டியன் அதிபர், பங்குத்தந்தை அவர்கள் கூறுவது, நூறு சதவிகித மக்களில் தொண்ணூற்றுஒன்பது சதவிகித மக்கள் கிறித்தவர்

அல்லாதவர்கள்தான் இங்கு வருகின்றனர் என்று கூறினார். இங்கு இசுலாமிய மக்களும் வருகின்றனராம். அவர்கள் பல வேண்டுதலுக்காக வருகிறார்கள். வேண்டுதலும் நிறைவேறுகின்றனவாம். ஆனால் வேண்டுதல்களுக்காக எந்தவிதமான காணிக்கையும் அவர்கள் செலுத்துவது கிடையாது. ஆனால் ஏதோ ஒருவகையில் வேண்டுதலை நிறைவேற்றுகின்றனர்.

முஸ்லீம்கள் பழைய ஏற்பாட்டை ஏற்றுக் கொள்பவர்களாகவும். மரியாவை நம்புகிறவர்களாகளாகவும் உள்ளனர். மரியாவை அவர்களுக்குத் தெரியுமாம். மரியா பெரிய புனிதர் என்பதனை இசுலாமியர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். இசுலாமியர் பூண்டி மாதா ஆலயத்திற்கு வந்துசெல்வதை விற்பனைக்கூட நிர்வாகி ரெஜினாமேரியும் உறுதிப்படுத்துகின்றார்.

இந்துக்கள், முஸ்லீம்கள், கிறித்தவர்கள் என்ற மூன்று மதத்தினருமே பூண்டி மாதாவின் தரிசனம் கிடைக்க தினந்தோறும் வந்து செல்கின்றனர். இம்மூன்று இனத்தவருமே அன்னையின் தரிசனம் கிடைக்க பல கோணங்களில் மன்றாடுகின்றனர். இம்மாதாவை நம்புகின்றனர்.

அம்மா சக்தி வாய்ந்த அம்மா
அம்மாவின் தரிசனம் தேவை
சாமியாரின் ஆசீர்வாதம் தேவை

என்றெல்லாம் தன் கோரிக்கைகளை முன்வைக்க வந்து செல்கின்றனர்.

மக்கள் காணிக்கையை நன்மைகள், அற்புதங்கள், புதுமைகள், ஆசிர்வாதம் என்றெல்லாம் சொல்கின்றனர். மக்கள் மணிக்கணக்கில் உட்கார்ந்து மாதாவைத் தரிசிக்கின்றனர். மணிக்கணக்கில் உட்கார்ந்து தரிசிப்பவர்கள் ஞானப்பார்வையில் உணர்கிறார்களாம். உணர்வுபூர்வமாகக் கடவுளைக் காணலாம் என்று மக்கள் நம்புகின்றனர். இதுபோன்று பல அதிசயங்களும் அற்புதங்களும் சிறப்புகளும் பூண்டி மாதாவின் ஆலயத்தில் நடைபெறுகின்றன.

**பூண்டி மாதா ஆலயம் முன்னேற்றம் அடைய காரணமானவர்**

பூண்டி பசிலிக்காவின் பொன்னான வரலாற்று ஏட்டிலே சிறப்பானதொரு இடம்பெற்றவர் அருட்தந்தை சேவியர் அடிகளார் ஆவார்.

**தகவலாளர்கள்**

1. ரெஜினாமேரி, வயது 62, பணி-ஆசிரியர், ஊர்-பூண்டிமாதா திருக்கோயில்

2. வைகைநாதன், பணி-ஆயரின் ஓட்டுநர் (கள்ளர்).
3. சாலமன்ராஜ், வயது 54, அருங்காட்சியகக் கண்காணிப்பாளர், அடஞ்சூர் திருக்காட்டுப்பள்ளி.
4. தேவராஜ், வயது 60, பூண்டி.
5. பேரருட்திரு எம்.ஏ.செபாஸ்டியன், அதிபர், பங்குத்தந்தை, வயது 60, பூண்டி ஆலய அதிபர்.
6. பி.ஜான்போஸ்கோ, வயது 58, ஊர்-இளங்காடு.

### பூண்டி ஆலயத்தில் அன்னதானம்

பூண்டி ஆலயத்தின் திருத்தலத்தில் மாதத்தின் முதல் மூன்று சனிக் கிழமைகளிலும் அன்னதானம் வழங்கப்படுகிறது. பல நல்ல உள்ளங்கள் அன்னைக்கு நன்றிகூறும்விதமாக அன்னதானத்திற்கு உதவி செய்து வருகின்றனர். பக்தர்கள் பலர் இதில் பங்கேற்று பயன்பெறுகின்றனர். இதுமட்டும் அல்ல. பூண்டி மாதா ஆலயம், திருமண தகவல் மையமும், பல அறக்கட்டளைகளையும் நடத்திவருகிறது. அதில் அதிக மக்கள் பயனடைகின்றனர். இவ்வாறு பூண்டி மாதா திருத்தலம் சாதி, மத, இன வேறுபாடின்றி, வணங்கி அருள்பெறும் புனிதத்தலமாக விளங்குகிறது என்பதில் ஐயமில்லை.

## தென்னிந்திய திருச்சபை

### இந்து மக்கள்-தென்னிந்திய திருச்சபைக்குச் செல்வதற்கான காரணங்கள்

கிறித்தவர்களில் பல பிரிவினர் - சபைகள் உண்டு. அவற்றில் ஒன்றுதான் தென்னிந்திய திருச்சபை. கிறித்தவ மதம் இந்தியாவில் காலூன்றிய காலங்களில் இருந்து ஆன்மீகப் பணிகள் மட்டும் இல்லாமல் கல்வி, மருத்துவம் இதுபோன்ற சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். தென்னிந்திய திருச்சபையினருக்கு நிறைய கல்விக்கூடங்களும் மருத்துவமனைகளும் உள்ளன. இவைகளினால் பயன்பெறுகின்ற மக்கள் ஈர்க்கப்பட்டு கிறித்தவ மதங்களில் ஈடுபடுகின்றனர். தென்னிந்திய திருச்சபையானது சமயப்பணியைக் கருத்தில் கொண்டு நிறைய குணமளிக்கும் நற்செய்தி கூட்டங்களை நடத்தி வருகின்றனர். இதில் கிறித்தவ மக்கள் மட்டுமல்லாமல் பல்வேறு சமயத்தாரும் கலந்து கொள்கின்றனர். இதில் பங்குகொண்டு குணம்பெறும் மக்கள் கிறித்தவர்களாக ஈடுபடுகின்றனர்.

தென்னிந்திய திருச்சபை சமூக மேம்பாடுகளில் அக்கறைக்கொண்டு மக்களுக்கெனச் சுயதொழில் பயிற்சி மையங்கள் மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சிகள் அளிக்கின்றனர். இவைகளில் பங்குபெறும் இந்து மக்கள் காலப்போக்கில் கிறித்தவர்களாக மாறுகின்றனர்.

கிறித்தவர்கள் நடத்தும் கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்கள் அங்கு நடைபெறும் வழிபாடுகளில் பங்கு பெறுகின்றனர். இதனால் ஏற்படும் மனஉந்துதலால் காலப்போக்கில் இவர்கள்கூட கிறித்தவர்களாக மாறி அதன் சிறப்புகளை எடுத்துரைக்கின்றனர்.

நோய்வாய்ப்பட்ட மக்கள் இவ்வாலயத்திற்கு வரும் பொழுது நோய் குணமாகிறது என்ற நம்பிக்கையின் காரணமாக அவர்கள் இவ்வாலயத்திற்கு வருகின்றார்கள் என்றும், வழிபாட்டில் ஏற்படுகின்ற அருள் உரை அவர்களுக்கு ஆறுதல் அளிக்கிறது என்றும், குடும்பத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகளைக் கடவுளிடம் சொல்லி மனம் உருக வேண்டும்போது அதற்குத் தீர்வு கிடைக்கிறது என்பதனாலும் இவ்வாலயத்திற்குத் திரளான மக்கள் வருகின்றனர். குறிப்பாகப் பாதிக்கப்பெற்ற பெண்கள் விடுதலை அடைவதற்கும், மன ஆறுதல் அடைவதற்கும் இவ்வாலயம் செல்கின்றனர். கிறித்தவ கல்வி நிறுவனங்களில் பெற்றுக்கொண்ட ஆன்மீக உணர்வின் காரணங்களினால் தொடர்ந்து ஆலயம் வரும் வழக்கத்தை வைத்துக் கொண்டு மனம் மாற்றம் அடைகின்றனர்.

அதுமட்டுமல்லாமல் அருகில் உள்ள கிறித்தவ குடும்பங்களில் காணப்படும் பக்தி வாழ்வினால் ஈர்க்கப்படுவதினாலும் மக்கள் இவ்வாலயம் வருகின்றனர். இவையே இந்து மதத்தினர் திருச்சபைகளுக்குச் செல்ல காரணங்களாக அமைகின்றது. இம்மக்கள் கிறித்தவ ஆலயங்களில் நடைபெறும் வழிபாடுகளில் யார் வேண்டுமானாலும் கலந்து கொள்ளலாம் என்பதால் இந்து மக்களும் கலந்து கொள்கிறார்கள். இதுபோன்ற வழிபாட்டில் கொடுக்கப்படும் அருள் உரைகள் அவர்களின் வாழ்விற்கும் மனத்திற்கும் அமைதியைத் தருவதால் இவர்களும் கிறித்தவ மதத்தில் ஈடுபடுகின்றனர்.

கிறித்தவ ஆலயங்களில் நடைபெறும் வழிபாடுகளில் இசையுடன் கலந்த பாடல்கள் இசைக்கப்படுவதால் இது போன்ற வழிபாடுகளில் மக்கள் தங்களை முழுமையாக ஈடுபடுத்துவதால் அவர்களின் மனக்கவலைகள், குடும்பச் சுமைகள், கடன் தொல்லைகள் அனைத்தையும் மறந்து முழுமையான மனஅமைதி பெறுகின்றனர்.

இன்னும் பெரும்பாலான மக்கள் கிறித்தவர்களின் சமூகப் பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறைகள் மற்றும் செயல்பாடுகளினால் ஈர்க்கப்பட்டு கிறித்தவர்களாகவே மாறிவிடுகின்றனர்.

தென்னிந்திய திருச்சபை சமூகத்தில் பிற்படுத்தப்பட்ட பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மக்களுக்கும், அவர்களின் குழந்தைகளுக்குக் கல்வியும் அளிப்பதால் மக்கள் தென்னிந்திய திருச்சபை ஆலயத்திற்கு வந்து வழிபடுகின்றனர். மற்றும் சமயப் பணியை மையமாகக் கொண்டு தென்னிந்திய திருச்சபை ஊழியர்கள் மருத்துவமனையில் உள்ள நோயாளிகளைச் சந்தித்து அவர்களுக்கு ஆறுதலும் அவர்களுக்காக இறைவனிடத்தில் வேண்டுதலும் செய்கிறார்கள். மேலும் இவர்கள் சிறையில் உள்ள கைதிகளைச் சந்தித்து அவர்களின் மனக்கசப்பைக் களைவதற்கு ஆறுதலும் வழிக்காட்டுதலும் வேண்டுதலும் செய்கிறார்கள்.

தென்னிந்திய திருச்சபையில் சாதி இன வேறுபாடுகள் இன்றி அனைவரும் சமமாக மதிக்கப்பெறுவதாலும் பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்வதற்கான வழிவகைகள் செய்து கொடுப்பதாலும் பெரும்பாலானோர் கிறித்தவ மதத்தில் ஈடுபடுகின்றனர்.

பூகம்பம், வெள்ளப்பெருக்கு, சுனாமி போன்ற இயற்கைச் சீற்றங்களினால் மக்கள் பாதிக்கப்படும்போது கிறித்தவர்கள் ஆற்றும் பணி பெரும்பாலான மக்களைக் கிறித்தவ மதத்திற்கு ஈர்க்கின்றன.

தென்னிந்திய திருச்சபை ஊழியர்கள் வீடுகள்தோறும் சென்று மக்களைச் சந்தித்து அவர்களின் குடும்பப் பிரச்சனைகள், பொருளாதார நிலைகளைக் கேட்டு அறிந்து அவர்களுக்குத் தேவையான ஆறுதல் அளிக்கிறார்கள். இதனால் ஈர்க்கப்பட்ட மக்கள் காலப்போக்கில் கிறித்தவர்களாக மாறுகின்றனர்.

வாழ்க்கையில் விரக்தி அடைந்தவர்கள் மன உளைச்சலுக்கு உள்ளானோர் தென்னிந்திய திருச்சபையினர் நடத்தும் நற்செய்திகளில் மக்கள் கலந்துகொள்ளும்போது அதில் முழுமையாக ஈர்க்கப்பட்டு கிறித்தவர்களாக மாறுகின்றனர் என்றும், அப்பகுதியில் வாழும் இந்து மக்கள் இவ்வாலயத்திற்கு வருவதற்கான காரணங்களாகக் கூறுகின்றனர்.

சூழல்

ஆலயத்தின் சுற்றுப்புறங்களில் வாழும் மக்கள் இந்து மக்களாகவே உள்ளனர். அவர்கள் தென்னிந்திய திருச்சபையில் நடக்கும் வழிபாட்டு முறைகளையும், அவர்கள் கொண்டாடும் விழாக்களையும் மக்கள் ஒற்றுமையோடு கலந்து உறவாடும் நிகழ்வுகளைப் பார்க்கும்போது இம்மக்கள் மதம் மாறுவதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைகின்றது. இப்பகுதியில் அதிகமாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்றனர். இந்துக் கோயில்களில் கருவறை மற்றும் முக்கிய நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு மறுக்கப்படுகின்ற காரணத்தினாலும் பெரும்பாலான தாழ்த்தப்பட்ட மக்கள் இவ்வாலயம் வருகின்றனர்.

அவர்களுக்கு இவ்வாலயத்தில் அனைத்து உரிமைகளும், ஆலயத்தின் முக்கிய பொறுப்புகளும் கொடுக்கப்படுகின்றன. வாழ்க்கையில் அவர்கள் துன்பப்படும்போது அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அளித்து அவர்களை அன்போடு பாவிக்கும் மனப்பான்மையும் இவர்களிடம் காணப்படுவதால் இப்பகுதியில் வாழும் மக்களில் பெரும்பான்மையோர் இவ்வாலயம் வருவதாகக் கூறுகின்றனர்.

இவர்களில் பலர் கடவுள் ஒருவரே. இவரே இம்மக்களையும் எங்களையும் இரட்சிக்கின்றார். இவர் எங்கள் வாழ்வில் பெரும் பங்கு வகிக்கிறார். இவர்தம் மனதிலும் மக்களின் மனதிலும் வாழ்கின்றார். அனைத்து வகையான சூழ்நிலைகளில் எங்களை நடத்துபவரும் அவரே. இவர் எங்கள் வாழ்வின் கடவுளாக இருந்து வருகிறார். எங்கள் குறைகளைச் சொல்லி மன்றாடினால் உடனே அதற்கான பலனை அளிக்கின்றார். அவரை நினைத்து வேண்டும் எவரையும் அன்போடு ஏற்றுக்கொண்டு பலனளிக்கிற கடவுள் இவரே. ஆகையால் இம்மதத்திற்குப் போவதற்குக் காரணமாக இப்பகுதியில் வாழும் இந்து மக்கள் கிறித்தவ மதத்தைப் பற்றியும், தென்னிந்திய திருச்சபைக்குப் போவதற்கான காரணத்தையும் எடுத்துரைக்கின்றார்கள். இவையே இப்பகுதி மக்கள் கிறித்தவ மதத்திற்குச் செல்வதற்கான காரணங்களாகக் கூறப்படுகின்றன.

சமூகக் காரணம்

இந்து மக்கள் தென்னிந்திய திருச்சபைக்குப் போவதற்குச் சமூகத்தில் ஏற்படும் நிகழ்வுகளே முக்கிய காரணாக அமைகின்றது. சமூகத்தில் கிறித்தவ மக்கள் அவர்களின் சமயங்கள் சார்ந்த கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள்,

மாணவர்கள், பெண்கள் தங்கும் விடுதிகள், அறக்கட்டளைகள் மட்டுமல்லாது அனாதை விடுதிகள், மறுவாழ்வு மையம் போன்று சமூகத்தில் வாழும் மக்கள் நலன் கருதி உருவாக்கப்பட்டுள்ள அமைப்புகளும் இந்து மக்கள் போவதற்கு முக்கிய காரணமாக அமைகின்றது. இவர்கள் வீடுகளுக்கு வந்து ஆறுதல் சொல்லி ஜெபிக்கும் மிசனரிமார்கள் போன்ற சமூக மறுமலர்ச்சி இயக்கங்களின் மூலமாகவும் இவர்கள் மனமாற்றம் அடைந்து கிறித்தவர்களாக மாறுகின்றனர்.

### கல்வி நிறுவனம்

கல்வி நிறுவனங்களில் கிறித்தவ மதத்தைச் சார்ந்தவர்களுக்கு என்று இடம் ஒதுக்கீடு செய்கின்றனர். அந்த நிறுவனத்தில் நாமும் பயனடைய வேண்டும் என்றும், அவர்களைப் போல் கல்விநிலையில் உயரவேண்டும் என்பதற்காகவும், இவர்கள் இதனை ஏற்கின்றனர். இதுமட்டுமல்லாது அனைத்து வசதிகளும் இங்கு அவர்களே செய்து தருகின்றனர். அவர்களுக்குத் தேவையான புத்தக வசதி, படிப்பு உதவித்தொகை மட்டுமல்லாது அவர்கள் வேலைக்குச் செல்வதற்கான வசதிகளையும் திருச்சபையில் உள்ளோர்களே செய்து தருகின்றனர். கிறித்தவ நிறுவனத்தில் படிக்கின்ற மாணவர்கள் காலையில் செய்யும் வழிபாட்டு முறையில் கலந்துகொள்கின்றனர். அதில் அவர்கள் பாடும் பாடல்கள், இறை வார்த்தைகள் இவை அனைத்தும் மாணவர்களின் நெஞ்சில் பசுமரத்தாணி போல் பதிகின்றது. இதில் உந்தப்பட்டு மாணவர்கள் கிறித்துவையும் அவர் போதனைகளையும் ஏற்றுக் கொள்கின்றனர்.

### கிறித்தவ வழிபாட்டு சமய ஒருமைப்பாடு

இந்துசமய மக்களும், கிறித்தவ சமய மக்களும் எவ்வாறு சமய ஒருமைப்பாட்டுடன் திகழ்கிறார்கள் என்பதை வழிபட்டுவரும் இந்து மக்களின் மனநிலை அவர்களின் தாக்கம், அவர்களோடு வழிபடும் கிறித்தவர்களின் மனநிலை, அவர்களை ஏற்கும் மனநிலை, சமயப் பண்பாட்டுக் கலப்பு, அதனால் ஏற்படும் விளைவுகள், விளைவுகளால் ஏற்படும் மாற்றங்கள், வழிபாட்டில் மாற்றம் அடைந்தபிறகு இந்து மக்களுடைய நிலைப்பாடு பலியிடலில் மாற்றம், இந்து மக்கள் மீது கிறித்தவர்கள் கொண்ட நிலைப்பாடு, மதம் மாறிய இந்து மக்கள் மீது கிறித்தவர்கள் கொண்டுள்ள தாக்கம் மற்றும் நிலைப்பாடுகள் ஆகியன பற்றிய செய்திகள் இவ்வியலின் வாயிலாக அறியலாம்.

## வழிபடவரும் இந்து மக்களின் மனநிலை

இந்து மக்கள், பிற இந்து சமய கோவிலுக்குச் செல்வதைப் போல் மக்கள் ஆடை மற்றும் வேல் குத்தல் போன்ற முறைகள் எல்லாம் இல்லை. கிறித்தவர்கள் எவ்வாறு ஆலயத்திற்கு வருகிறார்களோ அதைப் போலவே இவர்களும் வருகின்றனர். பெரும்பாலும் கோவிலுக்கு வரும் மக்கள் உறுதியான நம்பிக்கையுடன் வருகின்றனர். இடையில் கோவிலுக்குச் செல்கிறோமோ இல்லையோ ஞாயிற்றுக்கிழமைகளில் திருப்பலிக்குத் தவறாமல் கலந்து கொள்ளுவோம். திருப்பலியில் கலந்துவிட்டு வெளியே வரும்போது எங்கள் மனதில் ஏதோவொரு திருப்தி நிறைந்திருக்கும் என்று கூறுகின்றனர்.

பெரும்பாலும் மக்களின் வசதிக்கேற்ப அங்குத் திருப்பலியும், நவநாளும் மாலைவேளையில் மக்களுக்கு வேலைகள் முடிந்திருக்கும் நேரங்களில் நிறைவேற்றப்படுகின்றன. இதன் காரணத்தினால்கூட மக்கள் கிடைக்கும் நேரத்தில் கோவிலுக்குச் சென்று வரலாம் என்று எண்ணும் இந்து மக்கள் கோவிலுக்கு வருகின்றனர்.

## மன நிம்மதி

தன்னுடைய மனக்குறைகள் எல்லாம் இறைவனிடம் எடுத்துக் கூற ஏற்ற இடம் இது. துன்பங்களையெல்லாம் குருவிடம் கூறிவிட்டால் அவர் நமக்காகத் திருப்பலியில் பரிந்து பேசுகிறார். எனவே நம் எண்ண ஏக்கங்களைக் கடவுளிடம் நேரடியாகக் கூறி வெளியில் செல்லும்போது மன நிம்மதியுடன் திருப்தியுடன் செல்ல வழிவகுக்கிறது என்று ஒருவர் கூறுகிறார். தம் மனக்குறைகளைப் போக்கி, மனநிறைவு பெற்று நம்பிக்கையுடன் வருகின்றனர்.

## வெளிப்படையாகப் பேசி ஆறுதல் பெறுதல்

வீட்டுப்பிரச்சனைகள், மருத்துவப் பிரச்சனைகள், கல்வியின் பொருட்டு வரும் பிரச்சனைகள் ஆகியன பற்றிப் பங்குப் பேரவை மற்றும் அருட் சகோதரிகள், குருக்கள் ஆகியோரிடம் எடுத்துக் கூறுகிறார்கள். இதன் வாயிலாக அவர்களுக்கு இவர்கள் ஆறுதல் கூறுகின்றனர். அதோடு வழிகாட்டுதல்களையும் வழங்குவதன் வாயிலாக, இந்து சமயத்தவர்கள் உள்ளக்கிடக்கினை வெளிக்கொணர ஏதுவான இடமாக அமைகின்றன.

### ஒற்றுமையுணர்வு

இந்து, முஸ்லீம், கிறித்தவ வேறுபாடின்றிச் செயல்பட்டால்தான் எந்தச் செயலிலும் வெற்றிபெற முடியும் என்ற சிந்தனையுடனும் கோவிலுக்குச் செல்கின்றனர். மூன்று சமயத்தவர்களும் இணைந்து மக்கள் பிரச்சனைகளை எடுத்தாண்டு வெற்றியும் பெற்றுள்ளனர். பேருந்து, தண்ணீர், உணவு ஆகியவற்றில் இணைந்து செயலாற்றி வெற்றிபெற்றுள்ளனர். இதன் காரணமாக ஒற்றுமையுடன் செயலாற்ற வேண்டும் என்ற மனநிலையிலும் கோவிலுக்கு இந்து சமயத்தவர்கள் வருகின்றனர்.

### மரியாதையின் நிமித்தம்

ஊரின் முக்கிய பொறுப்பில் உள்ளவர்கள் இந்து சமயத்தைச் சார்ந்தவர்களாக இருக்கின்றவர்கள் தங்களுடைய வீட்டிற்கு அல்லது பொது விழாவிற்குக் கிறித்தவ சமய மக்களும் முக்கிய பொறுப்பில் உள்ளவர்கள் வந்ததையும் எண்ணி அவர்களுக்கு மரியாதை செய்ய வேண்டும், அவர்களைப் போலவே நாமும் நடந்துகொள்ள வேண்டும் என்ற மனநிலையிலும் சில இந்து சமயத்தவர்கள் வருகின்றனர்.

### காரணம்

எந்தவொரு செயல் நடப்பதற்கும் ஏதாவது ஒரு காரணம் இருக்க வேண்டும். காரணம் இருந்தால்தான் காரியம் நடக்கும். அதேபோல் இந்து சமயத்தவர்கள், கிறித்தவ ஆலயம் வருதலுக்கும் பல்வேறு காரணங்கள் உள்ளன. நமக்கு எங்கு உகந்த மரியாதையும் பயனும் கிடைக்கிறதோ அங்கு செல்வதில் எந்தத் தவறும் இல்லை என்று இந்து சமயத்தவர் ஒருவர் கூறுகிறார். எனவே இந்து சமய மக்கள் கிறித்தவ ஆலயத்திற்கு வருவதற்குப் பக்தி, மரியாதை, சமூக அந்தஸ்து ஆகியவை காரணங்களாக அமைகின்றன.

### கல்வியின் பொருட்டு வருதல்

இந்து சமய மக்கள் தங்களின் பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினர்கள் கல்வி கற்க, கிறித்தவ கல்விநிலையங்கள் நல்ல பெயருடன் விளங்கி வருகின்றன என்னும் காரணத்தினால் கிறித்தவ சமய முதன்மையான நபர்களின் பரிந்துரை வேண்டலின் காரணமாகவும் சிலர் ஆலயத்திற்கு வந்து அங்கிருக்கும் நபர்களோடு உறவு கொள்கின்றனர்.

### மருத்துவமனைகள்

கிறித்தவ நிறுவனங்களில் மருத்துவமனைகள் இன்றியமையாத ஒன்றாகச் செயல்படுகிறது. சில பகுதியில் அருட்கன்னியர்கள் மருத்துவ மனைகள் நிர்வகித்து வருகின்றனர். இதன் காரணமாக இந்து சமய மக்கள் கிறித்தவ ஆலயம் வருகின்றனர்.

### பிரச்சனைகளை எதிர்கொள்ளுதல்

மக்கள் பிரச்சனைகள் ஏதேனும் இருப்பின் அதற்குக் குருவின் தலைமையிலேயே போராட்டங்கள், கண்டன ஆர்ப்பாட்டங்கள், கோரிக்கைகள் கொடுப்பது போன்றவை நடைபெறுகின்றன. இதன் காரணமாக அனைத்து மக்களின் பிரச்சனைகளையும் எடுத்து தீர்வு மேற்கொள்வதால் இந்து சமய மக்களும் கிறித்தவ சய மக்களும் ஒருமைப்பாட்டோடு செயல்படுகின்றனர். ஊரில் ஏதேனும் திருட்டு அல்லது தீ பிடித்தல் போன்று தீங்கு ஏற்பட்டால் உடனே கிறித்தவ ஆலயத்தின் மணியினை ஒலிப்பர். ஒலியைக் கேட்ட மக்கள் ஒன்றிணைந்து வரும்போது பிரச்சனைகளை அறிந்து அதனை எதிர்கொள்கின்றனர். இதன் காரணமாக ஒற்றுமையும் சமய ஒருமைப்பாடும் திகழ்கின்றது.

### பொது நிகழ்வுகள்

கலைநிகழ்வுகள், அதிகாரிகளின் வருகை, கல்வி நிகழ்வு ஆகிய அனைத்தும் கிறித்தவ ஆலயத்தில் நடைபெறுவதைக் காணலாம். இதன் மூலம் மக்கள் அனைவரும் ஒன்றாகவே கலந்து நிகழ்வினைக் கண்டுகளித்து ஒருமைப்பாட்டோடு செல்வதையும் காணலாம்.

### திருமணங்கள்

இந்து சமய மக்களும் கிறித்தவ சமய மக்களும் ஒருவர் வீட்டிற்கு மற்றொருவர் சென்று விழாக்களைக் கொண்டாடி வருகின்ற ஒருமைப் பாட்டையும் தாண்டிப் பெண் எடுத்தல், மாப்பிள்ளை எடுத்தல் நிகழ்வும் வழக்கத்தில் உள்ளதை அறியலாம். தெரிந்தவர்கள் என்ற வேறுபாடு மாறி, உறவினர்கள் என்ற அளவில் இந்து கிறித்தவ சமய ஒருமைப்பாடு விளங்குவதைக் காணலாம்.

### இந்து மக்களோடு வழிபடுகின்ற கிறித்தவர்களின் மனநிலை

ஏசுவின் ஆலயங்களில் யாவரும் ஒன்றே. இங்கு நாங்கள் கிறித்தவர்கள், அவர்கள் இந்துக்கள் இவர்கள் இசுலாமியர்கள் என்ற பார்வை ஏற்படுவதில்லை என்பதை உணரலாம்.

### பூசை எடுத்தல்

இந்து சமய மக்கள் தங்கள் குடும்ப துன்பங்களுக்காகவோ நன்றி தெரிவிக்கும் வண்ணமாகவோ அவர்களின் பெயரையும் பூசை எடுக்கும் காரணத்தையும் எழுதிக் கொடுக்கின்றனர். குரு திருப்பலி நிறைவேற்றுகின்ற பொழுது அந்த இந்துசமய மக்களின் பெயரைக் கூறி, அவர்களின் வேண்டல்களை இறைமகன் இயேசுவிடமும் அன்னை மரியாளிடமும் வேண்டுகின்றனர். இது இந்து சமய மக்களுக்கு மிகவும் மகிழ்வைக் கொடுக்கின்றது. இதனால் கிறித்து, இந்து சமய ஒருமைப்பாடு மக்களின் மத்தியில் அதிகமாக ஏற்பட வாய்ப்புள்ளது.

### மோட்ச விளக்கு எடுத்தல்

மோட்ச விளக்கு என்பது இறந்தவர்களுக்காகப் பூசை எடுப்பது ஆகும். ஆண்டுக்கு ஒருமுறை மோட்சவிளக்குத் திருவிழா நடைபெறும். அன்றைய தினம் இறந்தவர்களின் குடும்பங்களில் இருந்து கோவிலுக்குச் செல்ல குருவிடம் பெயரை எழுதிக் கொடுத்துவிட்டு வருகின்றனர். பங்குத் தந்தையர் திருப்பலி நிறைவேற்றும்போது இறந்தவர்களின் பெயரைச் சொல்லி இவர்கள் இறைவனோடு மோட்ச பாக்கியத்தை அடையவேண்டும் என அனைவரும் இணைந்து செபிப்பர்.

இந்நிகழ்வில் இந்து சமயத்தவர்களும் தம் குடும்பங்களில் இறந்தவர்களின் பெயர்களைக் கோவிலுக்கு வந்து குருவிடம் எழுதிவிட்டுச் செல்கின்றனர். கிறித்தவ மக்கள் தமக்கு நெருங்கிய இந்து சய குடும்பங்களில் யாரேனும் இறந்திருப்பின் அவர்கள் பெயரையும் தம் குடும்பத்தில் இறந்தவர்கள் பெயரோடு அவர்கள் பெயரையும் இணைத்து மோட்ச விளக்கு எடுக்கின்றனர். இவ்வாறு கோவிலுக்கு வரும் இந்து சமய மக்களைத் தங்கள் குடும்ப உறுப்பினர்களாகவே ஏற்கும் மனநிலையுடன் கிறித்தவ மக்கள் விளங்குவதால் இந்து, கிறித்தவ பேதமின்றி நட்பும் புரிதலும் உண்டாகி ஒற்றுமையுடன் வாழ்கின்றனர்.

### கல்லறைத் திருவிழா

ஆண்டுக்கு ஒருமுறை இறந்தவர்களை நினைவுகூரும் வகையில் இவ்விழா நடைபெறுகிறது. இறந்தவர்களின் கல்லறைக்கு அவர்தம் சொந்த பந்தங்கள் அனைவரும் சென்று இறந்தவர்களுக்குப் பிடித்த தின்பண்டங்களை வைத்து மாலையிட்டு வணங்கி வருவர். இந்து சமய மக்கள் இதன் பொருட்டும் கோவிலுக்கு வருகின்றனர். அவ்வாறு வரும் மக்களை முழுமனதோடு ஏற்றுக் கொள்ளும் மனநிலை கொண்டவர்களாகக் கிறித்தவர்கள் விளங்குகின்றனர்.

### சமயப் பண்பாட்டுக் கலப்பு

இந்து மக்கள் தங்கள் வீடுகளில் சிலுவை, மாதா படம் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றினைச் சுவரில் தொங்கவிட்டுள்ளனர். தீயசக்திகள் வீட்டிற்குள் நெருங்கவிடாமல் இத்தெய்வங்கள் பார்த்துக் கொள்கின்றன என்றும், இரவில் தூங்கப்போகும்போது இப்படங்கள் முன்பு நின்று செபம் செய்துவிட்டுதான் தூங்குவோம் என்றும் இந்து சமய மக்களில் ஒருவர் கூறுகிறார்.

### நடைமுறைகளில் மாற்றம்

இந்துமக்கள் கழுத்தில் சிலுவை ரூபத்தினை அணிந்துகொள்வதைக் காணலாம். இன்னும் சிலர் செபமாலையினைக் கழுத்தில் அணிந்து கொள்கின்றனர். கிறித்தவ மக்கள், இந்து மக்களின் வருகை மற்றும் பழக்க வழக்கங்களின் தாக்கத்தால் அவர்களோடு இணைந்து இந்துசமய கோவில்களுக்குச் சென்று சாமி கும்பிட்டு வருகின்றனர்.

### பலியிடல் சடங்கு முறை

கிறித்தவர்களில் பலர் இந்து சமய கோவில்களுக்குச் சென்று ஆடு, கோழி பலியிட்டு அங்கேயே உணவு சமைத்து மக்களுக்கு அன்னதானம் செய்து வருகின்றனர். கிறித்தவ மக்கள் இந்து கோவில்களில் தன் வேண்டுதல்களை வைத்து அதை நிறைவேற்றியும் வருகின்றனர்.

அம்மைநோய் வந்த கிறித்தவக் குடும்பங்களில் அம்மன் விளையாடுவதாகவே எண்ணுகின்றனர். இவ்வாறு கிறித்தவ குடும்பங்கள் இந்து சமய மக்களின் தொடர்பாலும் பழக்க வழக்கங்களாலும் அவர்களோடு இணைந்து வாழும் ஒன்றுபட்ட வாழ்க்கை முறையினை அறியமுடிகிறது. பொங்கல் வைத்தல், திருநீறு பூசுதல், குங்குமம் வைத்தல் ஆகிய செயல்பாடுகளினாலும் இந்து சமய மக்களின் தொடர்பாலும் இணைந்து செயலாற்றும்போது சமயப் பண்பாட்டுக் கலப்பு உள்ளதை அறியலாம்.

### பாத யாத்திரை

இந்து, கிறித்தவ மக்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து செபமாலை அணிந்து, விரதம் இருந்து நடைபயணமாகச் செல்கின்றனர். இதன் வாயிலாக இந்து கிறித்தவ சமயப் பண்பாட்டுக் கலப்புகள் ஏற்படுகின்றன. மாலை போடுபவர்கள் கிறித்தவராக இருந்தாலும் இந்துவாக இருந்தாலும் குரு என்பவர் மந்திரித்து செபமாலையை அவர்கள் கழுத்தில் அணிவிக்கின்றார்.

**ஏற்படும் விளைவுகளும் மாற்றங்களும்**

இந்து கிறித்தவ சமயத்தவர்களும் தங்களுக்குரிய விழாக்களை மட்டுமே கொண்டாடாமல் சில விழாக்களை இரண்டு சமய மக்களும் இணைந்தே கொண்டாடுகின்றனர். தமிழ் வருடப்பிறப்பு, கிறித்துவப் பிறப்பு, ஆங்கில வருடப் பிறப்பு, பொங்கல், தீபாவளி, கார்த்திகை போன்ற விழாக்கள் சமய வேற்றுமை இல்லாமல் இந்து-கிறித்தவ சமய மக்கள் ஒற்றுமையுடன் கொண்டாடுகின்றனர்.

**மாற்றங்கள்**

சமயப் பண்பாடு காரணமாகப் பெயர்களில் மாற்றம், கோவில்களுக்குச் செல்வதில் மாற்றம், வழிபாடுகளில் மாற்றம், உச்சநிலையில் மதமாற்றம் ஆகிய பல்வேறு வகையான மாற்றங்கள் நிகழ்கின்றன.

**பெயர் மாற்றம்**

கிறித்தவக் கோயில்களுக்கு இந்து மக்கள் வருவதன் மூலம் பெயர் மாற்றங்கள் நிகழ்கின்றன. பெண் குழந்தையாக இருந்தால் அக்குழந்தையின் பெயருக்கு முன் அல்லது பின் மேரி என்று சேர்த்துக் கொள்கின்றனர். ஆண் குழந்தைகளுக்கும் இம்முறையினைப் பின்பற்றுகின்றனர்.

**வழிபாட்டு மாற்றம் (முளைப்பாரி)**

இந்து கிறித்தவக் கலப்பின் காரணாக வழிபாடுகளிலும் மாற்றங்கள் நிகழ்கின்றன. எடுத்துக்காட்டாகத்0 திருவிழாவின்போது குடும்பங்களில் கரகம் சோடித்தும் கும்மியாட்டமும் நிகழ்த்துவர்.

**தட்டுங்கடி கை தட்டுங்கடி**
**தரணியாளும் ஆண்டவர்க்கு**
**தந்தன தந்தன தட்டுங்கடி**
**கொட்டங்கடி கும்மி கொட்டுங்கடி**
**கொடுஞ்செயல் விரட்டும் புனிதர்க்கு**
**பூங்கையால் கும்மி கொட்டுங்கடி**

என்று கும்மிப்பாடல் பாடுகின்றனர்.

**முளைப்பாரி**

முளைப்பாரி எடுத்து ஊர்வலம் செல்வது இந்து கோவில்களில் உள்ள பண்பாடாகும். ஆனால் கிறித்துப் பிறப்பு விழாவிற்கு முளைப்பாரி வைத்து குடிலை

அலங்கரிப்பர். இந்த முறையானது இந்து சமய மக்களின் பண்பாட்டுக் கலப்பின் காரணமாகப் புதுவடிவம் பெற்று வழிபாட்டு நிகழ்ச்சிகளில் மாற்றம் அடைந்துள்ளது.

### ஆடை அணிவதில் மாற்றம்

இந்து மக்கள் கோவில்களுக்குச் செல்லும்போது சாதாரண முறைகளில் சென்று வழிபடுகின்றனர். ஆனால் கிறித்தவ கோவில்களுக்கு வரும்போது சேலையால் தலையில் முக்காடு போட்டு மண்டியிட்டு செபிக்கின்றனர். இது அவர்களுடைய வழிபாட்டில் மாற்றம் அடைவதற்குச் சமய பண்பாட்டுக் கலப்பு காரணமாக அமைகிறது.

### மத மாற்றம்

இந்து கிறித்தவ சமய ஒருமைப்பாட்டின் உச்சமாக மதம் மாறும் நிகழ்வு ஏற்படுகின்றது. மதமாற்றம் என்று இங்கு நிகழ்வது இல்லை. இந்து சமயத்தில் இருக்கும் மக்கள் தங்களாகவே மனம் மாறிக் கிறித்தவ சயத்தில் இணைகின்றனர். அவர்கள் கிறித்தவ மதத்தில் இணைவதற்குப் பல காரணங்கள் உள்ளன. இதில் வற்புறுத்தலுக்கோ பயமுறுத்தலுக்கோ இடம் இல்லை. அவர்களின் ஏதாவதொரு வேண்டுதல் நிறைவேறி இருக்கும். அல்லது உறவால் சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டவர்களாக இருப்பர். அவற்றின் காரணமாகவே மதம் மாறுகின்றனர் என்று பங்கு குரு ஒருவர் கூறுகின்றார்.

கிறித்தவ சமயத்தில் இணைந்த இந்து சமய மக்கள் கிறித்தவ முறைகள்படி திருப்பலிக்கு வருதல், பாவ சங்கீர்த்தனம் செய்தல், உறுதி பூசுதல், எடுத்தல், கிறித்தவ சமயச் சடங்குகளின்படி திருமணங்கள் முடித்தல், குழந்தைகளுக்குப் பெயர் சூட்டல் போன்ற நிகழ்வுகளில் தொடர்ந்து செயல்படுகின்றனர். இதில் முக்கியமாக மதமாற்றம் என்பதை மனமாற்றம் என்று குறிப்பிடுவதை அறியலாம்

மதம் மாறிய குடும்பங்களில் பெரும்பாலானோர் தாழ்த்தப்பட்ட குடும்பங்களைச் சார்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர். இவர்கள் மத மாற்றம் அடைந்ததற்கு முதல் காரணமாகத் திகழ்வது சமுதாயத்தில் அவர்களுக்குக் கிடைக்கின்ற சம மரியாதையே காரணம் என்று கூறுகின்றனர்.

கிறித்தவ சமயத்தில் இணைந்த குடும்பங்கள் சாதியினைக் கொண்டு குறிப்பிடாமல் கிறித்தவர்கள் என்றே பொதுப் பெயரிட்டு அழைக்கப் படுகின்றனர்.

அவர்களின் பெயர்களை விருப்பத்திற்கேற்ப மாற்றம் செய்து கொள்கின்றனர்.

முருகன் - இன்னாசி

செந்தில் - ரிச்சர்ட்

கண்ணன் - நெப்போலியன்

மாரியம்மாள் - மேரி ஜாக்லின்

## இந்து கிறித்தவ மக்களின் சமூக நிலைப்பாடு

எந்தவொரு மாற்றத்திற்குப் பிறகு அச்செயல்பாடுகளில் மாற்றம் இருக்கும். அதனடிப்படையில் மதம் மாறிய பின்பு இந்து கிறித்தவ மக்களின் சமூக நிலைப்பாடுகளில் மாற்றம் நிகழ்கின்றன.

### திருமணம்

தாழ்ந்த சாதி, உயர்ந்த சாதி என்றில்லாமல் கிறித்தவர்கள் என்ற நிலையில் பெண் எடுத்தல், பெண் கொடுத்தல் போன்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றன. வெளியூர்களில் வரன்தேடும்போதும், கிறித்தவ சமயம் என்ற பெயரிலேயே வரன் தேடுகின்றனர். அதன் வழியே திருமணமும் செய்கின்றனர். எனவே சமுதாயத்தில் சமத்துவப்பார்வை இரு சாரார் பக்கம் உள்ளதை அறிய முடிகின்றது.

### கல்வி நிலையங்கள்

மதம் மாறிய இந்து மக்களுக்கு கிறித்தவ கல்வி நிறுவனங்களில் முக்கியத்துவம் தரப்படுகிறது. குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த கிறித்தவர்களுக்குச் சிறப்புச் சலுகை வழங்கப்படுகிறது.

கல்விக்கட்டணம் குறைப்பு, கால அவகாசம் நீடிப்பு, கட்டணம் இல்லாத விண்ணப்பப் படிவம் என்று பல்வேறு விதிமுறைகளைக் கொண்டு செயல்படுகிறது. குறிப்பாக சேசு சபையினரை, அவர்களால் நிர்ணயிக்கப்படும் கல்லூரிகள், தாழ்த்தப்பட்ட கிறித்தவ மாணவர்களுக்கு இட ஒதுக்கீடுகள் தருகின்றன. கல்வி உதவித்தொகை எனும் சிறப்பு சலுகைகளும் வழங்குகின்றன. இவ்வாறு அனைத்து மக்களுக்கும் சம இடமாக கிறித்தவ சமய மக்களுக்கும் இந்து சமயத்தில் இருந்து கிறித்தவ சமயத்திற்கு மாறியவர்களுக்கும் சமுதாயத்தில் சமநிலை சமூக நிலைப்பாடு கிடைக்கின்றது. இவ்வாறு மதம் மாறிய இந்து கிறித்தவ உறவுகள் சமூகத்தில் சமநிலை பெற்றுள்ளதை அறியலாம்.

நிறைவுரை

இந்து கிறித்தவ சமய ஒருமைப்பாட்டில் அவர்களுக்கு இடையே நிகழும் ஒற்றுமையினைப் பல்வேறு உட்தலைப்புகளின் வாயிலாகவும், களஆய்வில் தகவலாளர்களின் நேரடி மேற்கோள் கருத்துக்களுடனும் இந்து சமய மக்கள் வழிபடல், சமய மாற்றம், அதன் தாக்கம், சமூக நிலைப்பாடுகள், மற்றும் கிறித்தவ இந்து மக்களின் சமூக சமய ஒருமைப்பாடுகள் ஆகியன பற்றிய செய்திகள் ஆராய்ந்து அறிந்து கொள்ள முடிந்தன.

## இயல் - 3




# இசுலாமியர்கள் வழிபாட்டு மரபில் சமய ஒருமைப்பாடு

இயல் - 3

# இசுலாமியர்கள் வழிபாட்டு மரபில் சமய ஒருமைப்பாடு

## முன்னுரை

முசுலீம்கள் என்று அழைக்கப்படும் இசுலாமியர்கள் பிற சமயத்தவர்களிடமிருந்து தனித்து நிற்பவர்கள் என்ற கூற்று மக்கள் மத்தியில் இருந்து வருகிறது. ஆனால் இக்கூற்றினைப் பொய்யாக்கும் வகையில் இசுலாமிய மக்கள் பிற சமயத்தவர்களிடம் இரண்டறக் கலந்து ஒற்றுமையுடன் வாழ்வதை அறியலாம்.

இசுலாமியர்கள் நிகழ்வுகளில் மிகவும் இன்றியமையாதது வழிபாட்டு முறையாகும். ஒவ்வொரு சமயத்தவரும் தங்கள் இனங்களில் மிகவும் முக்கியமானதாகக் கருதுவது வழிபாட்டு முறையே. இந்நிலையில் இசுலாமியர்கள் தங்கள் வழிபாட்டு முறையில் பிற சமயத்தவருடன் இரண்டறக் கலந்து ஒற்றுமையுடன் திகழ்வதை இவ்வியலின் மூலம் அறியலாம்.

சாதி, மதம், இனம் ஆகிய பேதமின்றி அனைத்துச் சமயத்தவரும் தர்காவிற்கு வந்து தரிசித்து அருள்பெற்றுச் செல்கின்றனர். தனது நேர்மையான நாட்டங்களை நிறைவேற்றிக் கொள்ளும் ஒரே நோக்குடன் தர்காவை நோக்கிச் செல்கின்றனர். சகலமும் பங்குபெறும் பொதுமையான நிகழ்வாகத் தர்காவில் இசுலாமிய வழிபாடு இடம்பெறுகிறது.

## இரட்டை மஸ்தான்

### ஷாமியான் தைக்கால் வஃப் அலல் அவ்லாத்

இரட்டை மஸ்தான் எனும் இத்தர்க்காவனது தஞ்சையில் காந்திஜி சாலையில் அமைந்துள்ளது. 1676 ஆம் ஆண்டு தஞ்சை மன்னராகப் பொறுப்பேற்ற ஏகோஜி என்னும் மராட்டிய அரசரின் தளபதியாக இருந்தவரின் மைந்தனே இரட்டை மஸ்தான்களில் ஒருவராவார் என்று கூறப்படுகிறது.

இரட்டை மஸ்தான் தர்கா உருவானதற்கு ஒரு புராண வரலாறு உள்ளது. 1900 ஆண்டு தஞ்சையில் புது ஆறு வெட்டப்பட்டு அதன் மேல் பாலம் அமைக்க சாலைப் பணியினைத் துவங்க சுற்றியும் உள்ள காட்டினைச் சீராக்கும் பணியில்

ஈடுபட்டபோது ஓரிடத்தில் கடப்பாறை பட்டு இரத்தம் பீறிட்டதாகவும் இதையறிந்த மன்னன் இவ்விடம் மகான்கள் அடக்கம் பெற்ற இடம் என்பதை அறிந்து மகான்களின் புனித சமாதிக்கு இடம் ஒதுக்கித் தந்ததாகவும் ஒரு வரலாறு உள்ளது.

இம்மகான்களின் சமாதிகளை நிர்வகிக்கும் பொறுப்பு சக்காப் என்னும் பரம்பரையினரால் மேற்கொள்ளப்பட்டது என்ற செய்தியும் வாய்மொழிச் செய்தியாகப் பெறப்பட்டது.

சாதி, மத பேதமின்றிச் சகல சமயத்தவரும் தர்காவுக்கு வந்து தரிசித்துச் செல்கின்றனர். நோயுற்றோர், துன்பத்தில் உழல்வோர், பிள்ளைப்பேறு இல்லாதோர், திருமணம் ஆகாதவர், மனக்குழப்பம், மனக்கஷ்டங்களை உடையோர் தர்காவுக்கு வந்து மனக்குழப்பத்தைக் கூறி அருள்பெற்றுச் செல்கின்றனர். மேலும் இம்மகான்களின் மகத்துவத்தால் பல அற்புதங்கள் நிகழ்வதாகவும் கூறுகின்றனர்.

இரட்டை மஸ்தான் என்று கூறப்படுவதற்கு ஒரு காரணம் உண்டு. ஏனெனில் அம்மகான்கள் இருவரும் நபிகள் பெருமானின் பரம்பரையில் தோன்றியவர்கள் என்றும், தந்தையும் மகனுமாகிய இவ்விருவரையும் மக்கள் அன்பின் மிகுதியால் இரட்டை மஸ்தான் என்று அழைத்தனர் என்றும் இதன் காரணமாகவே இத்தர்க்காவுக்கு இரட்டை மஸ்தான் தர்கா என்னு பெயர் ஏற்பட்டதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

**அலிஷா சிஷ்தி தைக்கால்**

இந்தத் தர்காவானது தஞ்சை மாவட்டம் நாஞ்சிக்கோட்டை பகுதியில் அமைந்துள்ளது. இவ்விடத்தே இரு மகான்களின் புனிதசமாதியும் அமைந்துள்ளது. இந்த இரு சமாதிகள் புனித தர்காவாகக் கொண்டு மக்கள் வழிபட்டுச் செல்ல முக்கிய காரணம் ஒன்று கூறப்படுகிறது. சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் தஞ்சையை ஆண்டுவந்த மன்னன் ஒருவன் தம் குழுவுடன் வேட்டைக்குச் சென்றதாகவும், அங்குச் செல்லும்போது வழியில் புகை மண்டலத்தைக் கண்டதாகவும், அதைக் கண்டு விபரம் தெரிந்துவர தன் வீரர்களை அனுப்பியதாகவும் வரலாறு உண்டு.

மன்னனின் ஆணையை ஏற்ற வீரர்கள் புகைமண்டலம் உருவாகிய இடத்தில் 15 பேர் கொண்ட பக்கீர்களின் கூட்டம் அதாவது அலிஷா சிஷ்தி என்ற மகானும், அவரது சீடர்களும் என்று அறிந்து மன்னரிடம் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது. இந்நிலையில் அரண்மனை யானைக்கு மதம் பிடித்து தொல்லை கொடுக்க அதைக்

கட்டுப்படுத்த முயற்சிகள் மேற்கொண்ட அரசனால் முடியாமல் போகவே காட்டுப் பகுதியில் கண்ட மகானை உதவும்படி வீரர்களின்வழி வேண்டினார்.

மகான் தம் சீடர்களில் ஒருவரை அழைத்து ஒரு பூவினை ஓதி சீடனின் கையில் கொடுத்து அதை யானையின் காதில் ஓதும்படி கூற, அவ்வாறே செயல்படுத்தப்பட்டதால் யானை மதம் நீங்கி தெளிவுற்றதாகக் கூறப்படுகிறது.

மன்னன் மகானின் மகத்துவத்தை அறிந்து காணிக்கையாக நிலத்தினை வழங்கியதாகவும், மேலும் அங்கு ஒரு மண்டபம் கட்டப்பட்டு மன்னனால் சிறப்பு செய்யப்பட்டதாகவும் ஒரு புனித வரலாறு கூறப்படுவதை அறியலாம்.

### பட்டாணி இராவுத்தர் வழிபாடு

தஞ்சையின் வடமேற்குப் பகுதியில் அமைந்திருப்பதே நடுக்காவேரி. திருக்காட்டுப்பள்ளி, திருவையாறு எனும் இரு ஊர்களுக்கு இடையில் இருப்பதால் இவ்வூர் இப்பெயர் பெற்றது என கல்வெட்டுச் செய்தி கூறுகின்றது.

### மக்கள்

இவ்வூரில் வசிக்கும் சனவராயர் என்னும் பட்டப்பெயர் கொண்ட மக்கள் பெரும்பான்மையோராகவும் ஆயுதப்பிரியர் எனும் பட்டப்பெயர் கொண்ட மக்கள் சிறுபான்மையினராகவும் இசுலாமியர்கள், கிறித்தவர்கள் சமயம் சார்ந்த மக்களும் வாழ்ந்து வருகின்றனர்.

### வழிபடப்படும் தெய்வங்கள்

இந்த ஊரில் செல்லியம்மனும் (அரமணைச்சி) பிடாரி அம்மனும் கிராமத் தெய்வங்களாக வணங்கப்படுகின்றன. இவற்றோடு சிவன், முருகன், கணபதி, மதுரைவீரன், கருப்பசாமி, முத்துமாரியம்மன் போன்ற தெய்வங்களையும் இவ்வூர் மக்கள் வணங்குகின்றனர்.

கள்ளரின் ஒரு பிரிவினராகிய நாட்டார் எனும் பெயர் கொண்ட வகையறாக்களில் வீட்டுத் தெய்வமாகப் 'பட்டாணி இராவுத்தர்' எனும் தெய்வ வழிபாட்டினை மேற்கொள்கின்றனர்.

### பட்டாணி இராவுத்தர் வரலாறு

முன்பு ஒரு காலத்தில் வடநாட்டிலிருந்து தெலுங்கு பேசுகின்ற பட்டாணி இனத்தைச் சேர்ந்த 'இராவுத்தர் அகிதப்பா' என்பவரும் அவர் மனைவியும்

நடுக்காவேரிக்கு வந்து தங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது. பட்டாணி இராவுத்தர்க்கு வேட்டைக்குச் செல்லும் பழக்கம் இருந்ததாகவும் அவ்வாறு அவர் வேட்டைக்குச் சென்று திரும்பியபொழுது தனது மனைவியிடம் மூன்று பேர் தகாத முறையில் நடந்து கொள்ள முயல்வதைக் கண்டு உயிரைவிட மானமே பெரியது என்று எண்ணி தன் மனைவியைக் கொன்று தானும் தற்கொலை செய்து கொண்டதாகவும் ஒரு வரலாறு கூறப்படுகிறது.

இந்தக் கொலை, பாவச்செயலுக்குக் காரணமானவர்களின் வீட்டில் ஆடு மாடுகள் இறப்பதும், உடல்நிலை சரியில்லாமல் போவதுமான அசம்பாவிதங்கள் ஏற்பட்டதாகவும் தான் செய்த கொடுஞ் செயலாலே தனக்கு இத்தண்டனைகள் கிடைக்கின்றன என்று உண்மையை உணர்ந்ததாகவும் இது தெய்வக் குற்றமாகக் கருதி உடுக்கு அடித்து அருள்வாக்கு கேட்டதாகவும் அதற்கு சிவராத்திரி நன்னாளில் மண்ணெடுத்து சுத்த பூசை செய்து வணங்க வேண்டும் என்ற பதில் வந்ததாகவும் வாய்மொழிச் செய்திகள் பெறப்படுகின்றன. அது முதற்கொண்டே 'பட்டாணி இராவுத்தர்' வழிபாடு அவரது வகையறாக்களில் உள்ளோரால் 21 தலைமுறைகளாகக் கொண்டாடப் படுகிறது எனும் செய்தியும் உள்ளது.

### சுத்த பூசை

'பட்டாணி இராவுத்தர்' வழிபாட்டிற்கு ஒருவாரத்திற்கு முன்பே சில கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிப்பர். துக்க காரியத்திற்குச் செல்ல மாட்டார்கள். எண்ணெய் தேய்த்துக் குளிக்க மாட்டார்கள். புலால் உணவு, அகத்திக்கீரை முதலியவற்றை உணவில் சேர்த்துக் கொள்வதில்லை. இதில் அனைத்து வேலைகளும் ஆண்களே செய்ய வேண்டும் என்ற விதிமுறையும் உண்டு.

### வழிபடும் நாள்

பட்டாணி இராவுத்தர் வழிபாடு மாசி மாதம் சிவன் ராத்திரி அன்று செய்யப்படுகிறது. ஆனால் அவ்வகையறாவில் துக்கக் காரியம் ஏதேனும் நிகழ்ந்துவிட்டால் அந்த ஆண்டு வழிபாடு நடைபெறாது என்ற செய்தியும் நமக்குக் கிடைக்கின்றது.

### வழிபடும் இடம், முறை

பட்டாணி இராவுத்தரை வழிபடுவதற்கென்று தனி இடமோ, கோவிலோ, உருவ அமைப்போ கிடையாது. பட்டாணி இராவுத்தர் வகையறாக்களின் இல்லங்களில் இராவுத்தர் வழிபாடு தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது. மேலும்

தவற்றிற்காகத் தற்கொலை செய்து கொண்டவர்களைச் சாந்தப்படுத்தும் நோக்கில் இவ்வழிபாடு மேற்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

### வழிபாட்டிற்குரிய பொருள்கள்

இந்த வழிபாட்டிற்குரிய பூசைப் பொருள்களாக மஞ்சள், குங்குமம், எலுமிச்சை, வளையல், வெற்றிலை பாக்கு, தேங்காய், சாதிக்காய், பழ வகைகள், புடவை, மது, சுருட்டு, நறுமணப் பொருள்கள், மாவிளக்கு போன்றவைகளாகும். வழிபாடு நிகழும் தினத்தன்று தரையினைப் பசுவின் சாணம் கொண்டு மெழுகி நீர்தெளித்து தென்னம்பாளை ஒன்றைக் கொண்டு வந்து அதற்குக் கருகமணி, வளையல்கள் மாட்டி, புடவையால் முக்காடு இட்டு மஞ்சள், குங்குமம் வைத்து வழிபடுவர்.

### நம்பிக்கை

சிவராத்திரி அன்று அனைத்து மக்களும் கொழுக்கட்டை செய்வது வழக்கம். ஆனால் குறிப்பிட்ட அவ்வகையறாக்காளில் மட்டும் செய்வதில்லை. ஏனெனில் கொழுக்கட்டை செய்வது தெய்வக்குற்றம் என்றும் வாரிசு இருக்காது என்றும் நம்புகின்றனர். மேலும் வழிபாடு நடக்கும்போது இராவுத்தர் வெள்ளைக் குதிரையில் வந்து வழிபாட்டினை ஏற்றுக்கொள்வார் எனும் நம்பிக்கை இருபது தலைமுறைகளைக் கடந்து இன்றளவும் தொடரப்பட்டு வருகின்றது.

### தொகுப்புரை

இசுலாமியப் பெண்களைப் போல முக்காடிட்டு கருகமணியைத் தென்னம்பாளைக்கு அணிவித்து இந்துமத முறைப்படி மஞ்சள் குங்குமம் இடப்படுகிறது. இசுலாமியர்கள் இரவில் மூன்று நேரமும் தொழுவதைப் போலவே இவர்கள் இத்தெய்வத்திற்கு இரவில் மூன்று கால பூசையை இந்துமத முறைப்படி மேற்கொள்வது குறிப்பிடத்தக்கதாகும்.

### ஓதுகான் அவுலியா

இப்பெயர் கொண்ட தர்காவானது தஞ்சையில் உள்ள துலுக்கன்பட்டி எனும் கிராத்தில் உள்ளது. இவ்வூரில் இசுலாமியக் குடும்பங்கள் இல்லை என்பது வியப்பான செய்தியாகும். இவ்வூரில் சுமார் 150 இந்து நாடார் குடும்பங்கள் உள்ளதாகவும், பல காலமாக இந்தத் தர்காவானது இந்துக்களின் பராமரிப்பில் சிறப்பாகச் செயல்பட்டு வருவதாகவும் களப்பணியின் மூலம் அறியப்பட்டது. இதற்குக் காரணம் அங்குள்ள

மக்கள் சில செய்திகளை வாய்மொழியாகக் கூறுகின்றனர். சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் துலுக்கன்பட்டி கிராமத்தில் பல இசுலாமியக் குடும்பங்கள் வாழ்ந்து வந்ததாகவும் பின்னர் காலப்போக்கில் இசுலாமியர்கள் இவ்வூரைவிட்டு பிழைப்பைத் தேடி இடம்பெயர்ந்ததாகவும் கவனிப்பாரற்று இருந்த தர்காவினை அங்குள்ள இந்து மக்களே பொறுப்பேற்று கவனிப்பதாகவும் வாய்மொழிச் செய்தி கிடைக்கின்றது.

மேலும் இவ்வூர் சென்று ஆராய்கையில் ஊரின் பிரமுகரும், தர்காவின் பராமரிப்பாளருமான கணபதி பூசாரி என்பவரின் குடும்பம் கடந்த மூன்று தலைமுறைகளாக இவ்வூரில் இருப்பதாகவும், அவர்களின் குலதெய்வத்திற்கு விழாவெடுக்கும்போதும், ஊர் தெய்வத்திற்கு விழா எடுக்கும்போதும் முதலில் தர்காவில் பாத்திஹா ஓதி விளக்கு ஏற்றி வான வேடிக்கையுடன் முதல் மரியாதை செய்துவிட்டுதான் அம்மனுக்குத் திருவிழா எடுப்பதாகக் கூறினார்.

அதுமட்டுமன்றித் தர்காவில் கொடி ஏற்றப்பட்டுள்ளதால் ஊரில் கட்சிக் கொடி உட்பட வேறு எந்தக் கொடியும் ஏற்றக்கூடாது என்ற கட்டுப்பாடும் உள்ளதாகக் கூறினார். கண்பார்வை குறைபாடு உள்ளவர்கள் இத்தர்காவில் ஏழுவாரம் வியாழக்கிழமை விளக்கு ஏற்றி பாத்திஹா ஓதிவந்தால் கண்பார்வை கிடைக்கும் என்பது அம்மக்களின் நம்பிக்கையாக உள்ளது.

இதன்படி கண்ணுக்கு ஒளி கிடைக்கின்ற அற்புதத்தால் இந்த மகானை அவ்லியா அல்லது ஒளியா என்று கூறுகின்றனர். இதனாலேயே இந்த தர்காவிற்கு 'ஓதுகான் அவ்லியா' எனப் பெயர் உள்ளதாகக் கூறுகின்றனர்.

இந்த நிலையினை நாம் உற்று நோக்கும்போது மனிதநேயம், நல்லிணக்கம், சகோதரத்துவம் ஆகியன நிறைந்து அனைவரும் சமம் என்ற உயர்ந்த நோக்கினை அறியலாம். இங்குத் தர்காவை உரிய சடங்குகளுடன் பராமரித்து வரும் நற்செயலால் மக்கள் அனைவரும் பிறப்பால் ஒன்றுபட்டவர்கள் என்பதைத் தெளிவாக அறியலாம்.

**குண்டு தைக்கால்**

தஞ்சையில் இருந்து பட்டுக்கோட்டை செல்லும் வழியில் புதுப்பட்டினம் என்னும் கிராத்தில் 'குண்டு தைக்கால்' என்னும் இடம் உள்ளது. இந்த இடத்தில் அமைந்துள்ள இசுலாமிய கோவில்களில் இறை தூதர்கள் நால்வரின் சமாதிகள் அமைந்துள்ளன. இங்குக் கோவில் அமைந்த வரலாற்றிற்கும் சமாதிகள் அமைத்திருப்பதற்கும் பழமையான வரலாறு ஒன்று மக்களால் கூறப்படுகிறது.

தஞ்சையை ஆண்ட ஒரு அரசனுக்கு ஆண் குழந்தை பிறந்தது. அந்த மகிழ்ச்சியினைத் தெரிவிக்கக் குண்டு முழக்கும் வழக்கத்தை மேற்கொண்டனர். அரசனின் ஆணையின்படி வீரர்கள் அரண்மனையைச் சுற்றி நான்கு புறமும் குண்டு முழங்கச்செய்தபோது மூன்று திசையில் மட்டும் குண்டு வெடித்ததாகவும் ஒரு திசையில் குண்டின் வெடியோசை கேட்கவில்லை என்றும் கூறினர்.

குண்டு முழங்காத காரணத்தை அறியவேண்டி வீரர்கள் அத்திசையினை நோக்கிச் செல்லும்போது எதிர்பாராதவண்ணம் புலியின் உறுமலைக் கேட்டு அதிர்ச்சியுற்றதாகவும் கூறுகின்றனர். மேலும் அங்கு இறைத் தூதர்கள் இருப்பதைப் பற்றியும் அவர்கள் மேல் அன்புகொண்ட புலி ஒன்று உள்ளதையும் அறிந்த வீரர்கள் தஞ்சை மன்னனிடம் செய்தியினைத் தெரிவித்தார்கள்.

மன்னர் இதனைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு தனது படை வீரர்களுடன் குண்டு வெடிக்காத இடத்திற்குச் சென்று பார்க்கும்போது மகான்களால் வரவேற்கப்பட்டார் எனவும், இதனை எதிர்பாராத மன்னன் அதிர்ச்சியுற்று பின் மகிழ்ந்து மகான்களை அரண்மனைக்கு வரவேற்றார் எனவும் செய்தியுள்ளது.

அவ்வாறு அரசனால் வரவேற்கப்பட்ட மகான்கள், அவர்கள் தங்கியுள்ள இடத்தினை அவர்களுக்கே அளித்துவிடும்படி மன்னனை வேண்ட, மன்னனும் மகான்களின் விருப்பத்திற்கு இணங்கி 49 ஏக்கர் நிலத்தினை அவர்களுக்குக் காணிக்கையாக அளித்து உதவிபுரிந்தான் என்றும் கூறப்படுகிறது.

குண்டு விழுந்த இடமே மகான்கள் வசித்த இடம். அந்த இடமே 'குண்டு தைக்கால்' என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் அவ்விடத்தே விழுந்த குண்டு தனது சக்தியினை இழந்து மகான்களைத் துன்புறுத்துதல் தகாது என்று செயலிழந்து விட்டதாக மக்கள் கூறுகின்றனர். மேலும் மகான்களின் அருளால் அற்புதங்கள் பல நிகழ்ந்ததாக மக்கள் கூறுகின்றனர். எண்ணெய்க்குப் பதிலாக தண்ணீரிலேயே நாற்பது நாட்கள் விளக்கு தானாகவே எரிந்ததாக இக்கிராம மக்கள் கூறுகின்றனர்.

அங்கு வாழ்ந்த மகான்கள் நால்வரும் இறைவனின் அருள்பெற்று அவ்விடத்திலேயே சமாதி அடைந்ததாகக் கூறுகின்றனர். மேலும் மகான்கள் மேல் அன்புகொண்ட புலியும் அவர்களின் அருகிலேயே சமாதி அடையும் தன்மை பெற்றதாகவும் கூறப்படுகிறது. இவையனைத்தும் மக்களிடையே இருந்து பெறப்பட்ட வாய்மொழிச் செய்தியாகும். 'உரூஸ்' என்னும் பெரிய உற்சவ விழா ஒன்று ஒவ்வொரு ஆண்டும் ஜில்காயிதா மாதம் 21ஆம் தேதி கொண்டாடப்படுகிறது.

## புகழ் குலிச்சப்பட்டு தர்கா

நாகூரை நோக்கிச் செல்லும் புறவழியின் 7வது கி.மீ. தொலைவில் உள்ள உட்சாலையில் அமைதியான சூழலில் ஓரமாக அமைந்த திடப்பரப்பு 50 அடி தூரத்தில் சுற்றுவேலி கொண்ட ஒரு திடலின் மையத்தில் நான்கு கலச தூண்களைக் கொண்ட செவ்வக வடிவ கட்டிட அமைப்பு உள்ளது. கட்டிடத்தின் உட்பகுதியில் நான்கடி உயரத்திற்கும் மஜார் ஷரீபுகள் உள்ளன.

இங்குக் குடிகொண்டுள்ள மகான் மற்றும் அவரது சீடர்கள் நால்வருடன் காட்சி தருவதுதான் குலிச்சப்பட்டு தர்கா. தரிசிக்கப்படும் பெருமை கொண்டு விளங்குகிறது.

சோழ மன்னர்கள் தஞ்சையைச் செங்கோலாட்சி ஆண்ட காலத்தில் இம்மகான் உயர்ந்ததாகக் கூறப்படுகிறது. பாபநாசம் வலங்கைமான் தாலுகாவில் இந்தத் தர்கா உள்ளது. நபிவழித் தோன்றலாய் உதித்த குத்புல் அக்தாப் அதாயே ரஸீல் ஹஜ்ரத் காஜா மொய்னுதீன் சிஷ்தி சஞ்சதி அஜ்மீரி ரஹ்மத்துல் லாஹி அலைஹி அவர்களின் கலீபாவும், குல்பர்கா ஷெரீப் என்ற நகரில் குடி கொண்டுள்ள கடுந்தவத்தின் பயனாக இந்த இடம் தரிசிக்க தக்க பெருமை எய்தி மக்களின் இன்னல் நீக்கும் ஒரு உறைவிடமாகத் திகழ்கின்றது. இவர்களின் 4 சீடர்கள் இங்கு மக்களுக்குச் சேவைசெய்து சமாதி பெற்றுள்ளனர். இவர்களுடைய தர்கா இங்குத் தரிசிக்கப்படுகின்றது. யானையின் கால் தட பதிப்பும் இந்த மஜார்களுக்கு அருகில் உள்ளது.

மகான் அவர்களின் புகழால் குலிச்சப்பட்டு கிராமத்துள் உறை கொண்டுள்ள சீடர்களுடைய மகத்துவம் கொண்டு இன்னும் குலிச்சப்பட்டு தர்கா என்ற பெயர் கொண்டு மக்களின் உடற்பிணிகளையும், உள்ளப் பிணிகளையும் தீர்த்து வைக்கும் ஒரு வழிபாட்டிடமாக உள்ளது. இங்குள்ள மகிமை பற்றி ரஷியா பேகம் என்ற பெண்மணியின் மூலம் அறியப்பட்டது. திருமணம் ஆகாதவர்கள் தர்காவின் அருகில் உள்ள கிணற்று நீரை இறைத்துக் குளிப்பதால் திருமணமாகிறது. மக்கள்பேறு இல்லாதவர்கள் தர்காவின் அருகில் உள்ள மரத்தின் பட்டையை எடுத்து பொடித்துப் பாலுடன் கலந்து பருகிவந்தால் குழந்தைப் பாக்கியம் அடைகிறார்கள். உடல் உபாதைகளால் அவதியுறுபவர்கள் யானையின் கால் பதிந்துள்ள இடத்தைத் தொட்டு தடவினால் வலி நிவாரணம் பெறுகின்றனர். இங்கு வந்து தங்கி தங்களது வேண்டுதல்களை அளித்து தொல்லைகளிலிருந்து பூரண நலமடைவது கண்கூடான உண்மையாகும்.

சோழ மன்னர்களால் வழங்கப்பட்ட மான்யமாக சுமார் 25 ஏக்கர் நிலம் இந்தத் தர்காவிற்குச் சொந்தமானதாகும். இந்த மகான் இவர்களின் வழித்தோன்றல்களில் 18வது தலைமுறையினர் தற்சமயம் இதனைப் பராமரித்து வருகின்றனர். பாதிக்கப்பட்ட மக்கள் சாதி, மத, இன, நிற வேறுபாடின்றி இங்கு வந்து மகானின் தர்காவைத் தரிசித்து பயன்பெறுவதுடன் அனைத்து சமூக மக்களும் இங்குக் குழுமி இறைநேசர்களின் ஆசியைப் பெற்று மகிழ்ச்சியுடன் செல்வதை இன்றும் காணமுடிகிறது. குளிச்சப்பட்டு தர்காவின் கந்தூர் உற்சவம் துல்காயிதா மாதம் கொண்டாடப்படுகிறது.

**பஞ்சா என்னும் அல்லா பண்டிகை**

பஞ்சா என்னும் சின்னத்தை இசுலாமிய மற்றும் இதர சமயத்தாரும் கண்ணியப்படுத்தி அல்லா பண்டிகை என்ற பெயருடன் முகரம் மாதத்தில் கொண்டாடி வருவது பழங்காலத்திலிருந்து வருகின்ற வழக்காகும்.

**அலாவா (நேர்த்திக்கடன்)**

அலாவா என்பதற்கு அகழ் என்று பொருள். எதிரிகளால் சூழப்பட்டு போர் தொடங்கிய நேரத்தில் பெண்களையும் குழந்தைகளையும் பாதுகாப்பதற்கென தங்கியுள்ள கூடாரங்களைச் சுற்றி அவசர அவசரமாக அகழ் தோண்டி எடுக்கப்பட்டு அதிலிருந்து நெருப்பு வார்க்கப்பட்டது. இமாம் ஹீசைன் அவர்கள் தமது கூட்டத்தாரின் பாதுகாப்பினைப் பலப்படுத்தும் பொருட்டு இறைவனிடம் தூது கேட்டார்கள். எல்லாம் வல்ல இறைவன் எங்களது நன்மையை நாடி இந்த எல்லையில் நுழைபவர்களை இந்த நெருப்பு சுடாதவாறும் தீய எண்ணத்துடன் வருபவர்களுக்கு இந்த நெருப்பு வேதனை அளிக்கக்கூடியதாகவும் செய்வாயாக என்று முறையிட்டார்கள்.

யஜீது கூட்டத்தைச் சார்ந்த ப்னு ஜெஸனா என்ற தீய செயல்களைச் செய்பவன் கூடாரத்தினை நெருங்கி தன் குதிரையில் ஏறி நின்று ஹீசைன் என உரக்கக் கத்தினான். இமாம் அவர்கள் இவன் யார் என விசாரித்து பின்பு நீயே தீயினுள் வீழ்ந்து அழிவாய் எனக் கூறினார்கள். எதிர்பாராத விதமாக இப்னுஜெஸனாவின் குதிரை விரைந்து ஓடத்தொடங்கியது. குதிரையின் சேனை வளையத்தில் அவனின் ஒரு கால் மாட்டிக் கொண்டது. தொங்கிய நிலையில் அவன் அடிபட்டு தலை துண்டிக்க குதிரை மேலும் ஓடி நெருப்புக் குழியில் அவனைத் தள்ளிவிட்டது. இப்னுஜெஸனா அந்நெருப்புக் குழியில் வீழ்ந்து எரிந்தான்.

இவ்வரலாற்றுச் சம்பவத்தை இஸ்திகாமம் என்ற புகழ்மிக்க அஹ்லெ சுன்னத் வல் ஜாஅத் 1983 ஆம் ஆண்டு வெளியிட்ட ஷாமே கர்பலா என்னும் இமாம் ஹீசைன் குறித்த சிறப்பிதழில் வெளியிட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட வரலாற்றுச் சம்பவத்தை நினைவுகூரும் முஹரம் பத்தாவது நாள் இரவு அதேபோல் அகழி என்னும் குழி தோண்டி அதில் விறகுகளைக் கொண்டு தீ மூட்டுகின்றனர். இமாம் ஹீசைனார் கர்பலா போர்க்களத்திற்குப் புறப்படும் முன் ஒருமுறை அகழியைச் சுற்றிப் பார்த்த பின் போருக்குச் சென்றார்கள். இதேபோன்று அலம் என்னும் சின்னத்தை எடுத்துச் செல்பவர்கள் புறப்படும் முன்பு அலவா என்னும் தீமிதி குழியை ஓர் சுற்று சுற்றிய பின்பு இறங்கி ஹீசைனாரை மனதில் நினைத்து துதியை மிதித்துச் செல்வது பரம்பரை பரம்பரையாக இருந்து வருகின்றது.

இமாம் மீது முழுமையான ஈடுபாட்டைக் கொண்டவர்கள் தீயினால் தீண்டப்படுவதில்லை என்ற உண்மையை இத்தீமிதி விழா உறுதிப்படுத்துகிறது. முஹரம் மாதத்தில் கொண்டாடப்படும் இத்தீமிதி விழாக்கள் பிரசித்திப் பெற்றவை அல்ல. சத்தியத்தையும் நேர்மையையும் நிலைநாட்ட தாமும் தம்மைச் சார்ந்த 72 பேர்களையும் இறைவழியில் மனம் ஒன்றுபட்டு செய்து ஒரு புனிதப்போரை நிகழ்த்திய இமாம் ஹீசைனின் வீரத்தையும் அஞ்சா நெஞ்சத்தையும் தெளிவுபடுத்தவே இமாம் அவர்களின் நினைவாக தீமிதி விழாக்களை மக்கள் நல்லெண்ணத்துடன் செய்து வருகின்றனர்.

### பஞ்சா என்ற பதத்தின் விளக்கம்

ஐந்து விரல்களைக் கொண்ட உள்ளங்கை சின்னத்திற்கு பஞ்சா என்று பெயர். பொருள்களைப் பற்றிப் பிடிக்கும் தத்துவம் உள்ளங்கைக்கே உண்டு. ஆதலால் கொள்கையில் வெற்றியை அடையும்போது உள்ளங்கையை உயர்த்தி தமது உறுதியையும் வலிமையையும் காட்டுவது உலகத்து இயற்கை.

இமாம் அவர்கள் தமது நேர்மையான கொள்கையில் இருந்து இறுதி வரை விட்டுக் கொடுக்காமல் எதிராக தமது கையை உயர்த்தி நின்றார். எனவே அவரது செயலே பஞ்சா என்னும் சின்னத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கியது.

இமாம் அவர்கள் சத்தியத்தின் பால் உறுதிகொண்டு தர்மத்தினைக் கடைபிடித்துத் தனியாக நின்று கூட்டத்தினரை வெட்டி வீழ்த்தினார்கள். இறுதியில் இறைவன் நாட்டப்படி ஷஹீது என்னும் வீரமரணம் பெற்றார்கள். இப்போரில் தனது

புனிதத்தினைக் கொடுத்தார்களே தவிர தீய குணங்களைக் கொண்டவனாகிய யஜீதியிடம் பஞ்சா என்னும் உள்ளங்கையைக் கொண்டு பைஅத் செய்ய ஒருபோதும் மனம் ஒப்பவில்லை என்பதே உண்மை.

இதன்மூலம் ஹஜ்ரத் ஹீசைன் அவர்கள் நேர்மையான கொள்கையின் மீது கொண்டிருந்த உறுதியைப் பஞ்சா என்னும் உள்ளங்கைச் சின்னம் இதனைத் தெளிவுபடுத்துகிறது. ஆகவே தியாக அரசர் என்று கூறக்கூடிய இமாம் ஹீசைன் மற்றும் அவற்லெபத்து வீரர்கள் கர்பலா போர்க்களத்தில் காட்டிய பொறுமை, சகிப்புத்தன்மை, கடவுள் விருப்பத்தை ஏற்றுக் கொண்டு இவை உலகம் உள்ளவரை போற்றிப் பாராட்டத்தக்கவையாக இருக்கின்றது என்பது முற்றும் உண்மை.

### பாத்தியா முறை

அஹ்லெ சன்னத் வல்ஜமாத் என்னும் நன்னெறிக் கொள்கையை கொண்ட மக்கள் சமுதாயம் முஹர்ரம் மாதம் ஆஷீரா தினத்தன்று நடத்திவரும் சகலவித சடங்குகளில் எல்லோரும் கலந்துகொண்டு சிறப்பித்தல் வழக்கமாக இருந்து வருகின்றது. இதில் பிற சமூகத்தாரும் ஒற்றுமையுடன் கலந்து கொள்வதால் பரஸ்பரத் தன்மை நிலவுவதைக் காணமுடிகிறது.

பஞ்சா என்னும் ஐந்து விரல்களும் மேல்நோக்கி இருக்கும் கை போன்ற உருவங்கள் நன்கு அலங்கரிக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டு ஒன்பதாம் நாள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். பஞ்சா எடுத்து ஆஷீரா தினத்தன்று ஊர்வலமாகச் செல்லும் இதர சடங்குகளை நிறைவேற்றுவதில் இனமொழி வேறுபாடின்றி எல்லோரும் கலந்து கொள்வதே தனிச்சிறப்பாகும். இந்நிகழ்வின் மூலம் மக்கள் வேற்றுமையை மறந்து ஒற்றுமையுடன் வாழத் தலைப்பட்டிருப்பதை அறியலாம்.

சாதி, மத, நிற, இன, மொழி வேறுபாடின்றிச் சகலரும் பக்தியுடன், தனது நேர்மையான நாட்டங்களை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்குடன் அல்லா கோவிலில் ஒன்றுகூடுகின்றனர். இந்த நிகழ்வே மக்களிடம் வேற்றுமையற்ற நிலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

### பிற சமூகத்தினரின் பங்களிப்பு

முஹர்ரம் மாதத்தில் ஆஷீரா தினத்தன்று மேற்படி தூய பஞ்சாக்களை அனைத்து சமயத்தாரும் தரிசிக்கும்படி வைத்திருப்பர். இதில் இசுலாமிய

சமூகத்தாரின் வசம் இன்றி பிற சமூகத்ினர் வசம் புனித பஞ்சாக்கள் பராமரிக்கப்பட்டு கண்ணியப்படுத்தப்பட்டு வருவதை நோக்கும்போது மக்களிடையே எந்தவித மதவேறுபாடோ தன்னலமோ இல்லை. சமத்துவம் ஒன்றே மேலோங்கி நிற்பதையும் அறியமுடிகிறது.

**குண்டல்லா**

குண்டல்லா என்பதற்கு பஹர் உசேனி அல்லா கோயில் என்பதே பொருளாகும். கோவிலில் விழா நடைபெறும்போது கல்விக்காகவோ மருத்துவத்திற்காகவோ குடும்ப பிரச்சனைகளிலிருந்தே மக்கள் முழு ஈடுபாட்டோடு தம்மை அர்ப்பணித்துக் கொள்வதாகவும் அவர்களின் மனக் குறையினைப்போக்கி அல்லா நிறைவு செய்வதாகவும் அல்லா கோயிலுக்கு வரும் இந்து மக்கள் தெரிவிக்கின்றனர்.

மனச்சுமையுடன் பிரார்த்தனை செய்யும் அனைவருக்கும் மத, இன, நிற பேதமின்றிச் சுகம் கிடைப்பதாகக் கூறுகின்றனர். மேலும் இங்குக் காணப்படும் மத ஒற்றுமை, மத நல்லிணக்கம், சகிப்புத் தன்மை, மனித நேயம் போன்றவை போற்றுதலுக்குரியவை ஆகும்.

**கந்தூரி உற்சவம்**

துல்காயிதா மாதம் கொண்டாடப்படும் கந்தூரி உற்சவம் என்பது மகான்களும் அவர்களுடைய சீடர்களும் காட்சியளிப்பதே ஆகும் என்கின்றனர் மக்கள். மணமாகாத பெண்கள் தர்காவில் மாந்திரீகம் செய்து தரப்படும் நீரை உட்கொண்டால் திருமணம் விரைவில் நடைபெறுவதாகவும் உடல் உபாதைகளால் அவதியுறுபவர்கள், பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் கோவிலில் வழிபாடு நடைபெறும்போது குருமார்களிடம் தனது நிலையினைக் கூறி நிவாரணம் பெறவேண்டுகின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் சாதி, மதம், இனம் நிறம் வேறுபாடின்றித் தர்காவிற்கு வந்து தரிசித்து பயன்பெறுவதுடன் அனைத்து சமூக மக்களும் இங்கு குழுமி இறைநேசர்களின் ஆசியைப் பெற்று மகிழ்ச்சியுடன் செல்வது இன்றளவும் காணக்கூடிய உண்மை நிலையாகும்.

## சில்லா (கடுந்தவம்)

மக்கள் தங்கள் மனக்குமுறல்களை மறந்து இறைதியானத்தில் மூழ்கியிருக்கும்போது அவர்கள் கேட்காமலேயே இறைவன் ஆசியினை வழங்குவார் என்பது அனைத்து சமய மக்களின் நம்பிக்கையாக உள்ளது. மேலும் இத்தகைய கடுந்தவத்தினையே இசுலாமிய மக்கள் சில்லா என்று குறிப்பிடுகின்றனர். இந்த நிலையானது இறைவனின் அருளைப் பெற மதமும் இனமும் தேவையில்லை. மனம் ஒன்றுபட்டால் போதுமானது என்று ஒற்றுமையினை மறைமுகமாகக் காட்டுவதை உணரலாம்.

## சூஃபி ஸர்மஸ்த் தர்கா என்கிற குயவன் தைக்கால்

சூஃபி என்னும் சொல்லிற்குத் தூய்மைப்படுத்துதல் என்று பொருள். அதாவது ஆத்மாவினைத் தூய்மைப்படுத்துதல் என்பதாகும். மனத் தூய்மையானது உள்ளத்தைப் பொறுத்து ஆன்மீக வழியில் நடைபயில காரணமாதலால் இப்பாதையைத் தேர்ந்தெடுத்தவர்கள் சூஃபி என்றழைக்கப்பட்டனர்.

சூஃபி ஸர்மஸ்த் தர்கா எனும் பெயர் கொண்ட இந்த இசுலாமியக் கோயில் தஞ்சையில் உள்ள கீழவாசல் எனும் பகுதியில் உள்ளது. இப்பெயர் வரக் காரணம் என்னவெனில் சுமார் 350 வருடங்களுக்கு முன்பு சூஃபி சர்மஸ்த் என்ற மகான் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

அன்றைய காலத்தில் தஞ்சையை ஆண்ட மன்னர் பிரதாப் சிங் ஆவார். இவருக்குக் குழந்தையில்லை என்ற காரணத்தால் மிகவும் கவலையுற்று இருந்தார். மன்னர் சூஃபியின் மேன்மையைப் பற்றி கேள்வியுற்று அவரை அரசவைக்கு வருமாறு வேண்டியதாகக் கூறப்படுகிறது. அரசனின் வேண்டுதலுக்கு இணங்கி அரசவைக்கு வந்த மகான் இறந்த நாயின் தோலினை மன்னன் மீது வீச அது மலராகப் பொழிந்ததாகவும், உடனே அவர் மங்களம் உண்டாகட்டும் என்று ஆசி வழங்கியதாகவும் கூறப்படுகிறது.

அவரின் ஆசிபெற்ற பின்பே மன்னனுக்கு புத்திரபாக்கியம் ஏற்பட்டதாகவும் அதனால் மகிழ்ந்த மன்னன் மகான் கைகளில் ஒரு இரும்பு வளையத்தைக் கொடுத்து விரும்பும் இடத்தில் எறியும்படி வேண்டி மகானும் அவ்வாறு செய்ததாகக் கூறப்படுகிறது. மகான் எறிந்த இரும்பு வளையம் உத்திரகாளியம்மன் கோவிலில் விழுந்ததாகவும், திகைப்புற்ற மன்னனின் கனவில் காளியம்மன் தோன்றித் தனது கோயில் உள்ள இடத்தை மகானுக்கு வழங்கும்படி கூறியதாகவும் செய்தி உள்ளது.

அதனால் மனம் மகிழ்ந்த மன்னன் அதனை ஏற்று தனது சார்பாக ஏறத்தாழ 18 ஏக்கர் நிலத்தினை மகானுக்கு இனாமாக வழங்கினார் என்றும், இதன் காரணமாகவே காளியம்மனை மகானின் சகோதரி என்ற உறவுநிலையில் அக்காலம் தொட்டே மக்கள் அழைத்து வருவதாகவும் கூறப்படுகிறது.

இதன் மூலம் மக்கள் வேறுபாடின்றி இதர சமூகத்தினருடன் பரஸ்பரமாக நடந்து கொள்வதும், அனைவரும் சமம் என்று வெளிப்படையாக அறியலாம். இதனை உண்மைப்படுத்தும் வகையில் இன்றும் காளியம்மன் உற்சவ விசேசம் நடக்கும்போது மகானின் சார்பாக தர்காவில் இருந்து உபயமானது கோவிலுக்கு வழங்கப்படுவது பரஸ்பர சகோதரத் தன்மையை உணர்த்துவதாக அமைகின்றது.

வருடா வருடம் மகானின் நினைவாக உரூஸ் கந்தூரி உற்சவமானது ஆகிர் மாதம் பிறை 26 இல் நடைபெறுவதாக அறியமுடிகிறது.

### வழிபாட்டில் ஏற்படும் ஒருமைப்பாட்டுணர்வு

பாமர மக்களும் பொதுவான கடவுள் நம்பிக்கையுள்ளவர்களும் மத வேறுபாடு பார்ப்பதில்லை. அவர்கள் விரும்புவது அவர்களின் உடல்நலமும் பொருளாதார வளமும் பெற்று அமைதியான முறையில் வாழ்வதற்கு எந்த நம்பிக்கை (தெய்வம் கடவுள்) உதவி செய்வதா (சக்தியுள்ளதாக) மக்கள் நம்புகின்றார்களோ அந்தத் தெய்வத்தை மதவேறுபாடு பார்க்காமல் அனைவரும் வணங்கவும் நம்பிக்கை வைக்கவும் தயாராக உள்ளனர். தாங்கள் வேண்டியதைக் கொடுக்கும் கடவுளையே மக்கள் வணங்க விருப்பம் காட்டுகின்றனர். கடவுள் வழிபாட்டின் அடிப்படையில் மக்களின் நோக்கமும் இதுதான். இவ்வாறு மக்கள் கடவுளை வணங்குவதுதான் முறையான கடவுள் வழிபாடு எனக் கட்டாயப்படுத்தி இந்தக் கடவுளைத்தான் வணங்கவேண்டும், அந்தக் கடவுளை வணங்கக்கூடாது என்று கூறுவது முற்றிலும் அரசியல் நோக்கம் கொண்டதாக மக்கள் கருதுகின்றனர்.

இவ்வாறு மக்கள் வழிபடும் தெய்வத்தில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. அனைத்து மக்களும் தங்களுக்கு ஏற்றாற் போன்று இறைவனைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

சாதி, சமயம், உயர்ந்தவர், தாழ்ந்தவர், ஏழை, பணக்காரன் போன்ற ஏற்ற தாழ்வுகளில் மக்கள் விரோதமாக நடந்து கொண்டாலும் வழிபாடு என்று வரும்போது மக்கள் அனைவரும் ஒன்றோடு ஒன்று கலந்து கொண்டு ஏற்றதாழ்வு பார்க்காமல் பழகுகின்றனர். அவ்வாறு பழகிவரும் மக்கள் வழிபடும் தெய்வத்தை

விட்டுக் கொடுக்கின்ற மனப்பான்மை இல்லாமல் உறவுமுறைகள் வைத்து பழகுகின்றனர். அவ்வாறு வரும் மக்கள் காணுகின்ற அறிஞர்களின் ஆன்மீகச் செம்மல் சுவாமி விவேகானந்தர் குறிப்பிடும்போது மத அடக்குமுறையற்ற ஒரே நாடு இந்தியாதான். ஒருவரின் மத நம்பிக்கையின் அடிப்படையில் அவன் பாதிக்கப்பட்டதாக இங்கு இல்லை. கடவுள் உண்டென கொள்கை கொண்டவர்கள் கடவுள் இல்லை என்ற கொள்கை உடையவர்கள் இருபொருள் வாதம் கொண்ட அனைவரும் எத்தகைய தொல்லையுமின்றி இருக்கின்றனர் என்கிறார் விவேகானந்தர்.

இந்தியர்கள் அனைவரும் தாங்கள் வழிபடுகின்ற தெய்வத்திற்கு ஏற்றாற் போன்று ஒற்றுமையோடு வாழ்கின்றனர். வழிபடும் தெய்வம் தாங்கள் அறியப்படும் முறை, பழக்கவழக்கம் இவை அனைத்துமே பாரம்பரியமான வழக்கில் இவர்கள் இப்படித்தான் வழிபடுகின்றனர். தாமும் அப்படித்தான் வழிபடவேண்டும் என்ற ஒரு கட்டாயம் இல்லாமல் அனைவரும் ஒன்றே என்ற மாதிரி தெய்வங்களை இப்படித்தான் வணங்கவேண்டும் என்ற ஒரு வேறுபாடு இன்றி அவர் அவர்களுக்கு எப்படி வழிபட வேண்டும் என்று எண்ணுகின்றாரோ அவை போன்று தாம் எண்ணுகின்ற கருத்துக்களை, துயரங்களை இறைவனிடம் சொல்லி வழிபடுகின்றனர். அவ்வாறு வழிபடுகின்ற மக்கள் கடவுளைப் பிரித்துப் பார்ப்பதில்லை. எல்லாக் கடவுளும் ஒன்றுதான் என்று எண்ணி இதில் மட்டும் வேறுபாடுகள் இன்றி தாங்களே மனத்தளவில் ஏற்றுக் கொள்கின்றனர்.

இதனைத்தான் ஆசிரியர் மு.பெரியகருப்பு பண்டைய தமிழர்கள் கடவுள் நம்பிக்கை உள்ளவர்களாக வாழ்ந்திருக்கின்றனர். ஆனால் அவர்களின் கடவுள் நம்பிக்கைகள் தமிழர்கள் அனைவரும் பொதுவான தன்மையைக் கொண்டதாக இல்லை. பண்டைய காலத்தில் கிரேக்க அரசுகளிலும் எகிப்து போன்ற நாடுகளிலும் கடைப்பிடிக்கப்பட்ட ஒருவகையான வழிபாட்டு முறைகளும் தமிழர்களிடம் இல்லை. பண்டைய தமிழர்கள் தாங்கள் வாழ்கின்ற சில வகைகளுக்கும், அப்பகுதிகளில் செய்யும் தொழிலுக்கும் ஏற்ப கடவுள்களை வழிபடுகின்றனர். என்றாலும் இங்கு வாழ்கின்ற மக்கள் தமக்கென்று எதுவும் எடுத்துக் கொள்ளாமல் நமக்கு நன்மை செய்கின்ற கடவுள் என்ற எந்தவொரு வேறுபாடும் இன்றி மக்கள் அனைவரும் அவர்கள் கொண்டாடும் கிறிஸ்துமஸ், புத்தாண்டு, ஈஸ்டர் போன்ற திருவிழாக்களில் கலந்து கொள்கின்றனர். இதுமட்டுமின்றி அனைத்து வகையான சிறப்புக் கூறுகளையும் கொண்டு காணப்படும் அளவிற்கு இப்பகுதியில் வாழும் மக்களை மதத்தின் அளவில் எடுத்துக் கொள்வோமாயின் அனைவரும் ஒன்று என்று நினைக்கின்றனர்.

இதனை இந்தியர்கள் மதசகிப்புத் தன்மை கொண்டவர்கள் மட்டுமல்லர். மற்ற மதங்களையும் ஏற்றுக் கொள்பவர்கள் என்று சுவாமி விவேகானந்தர் குறிப்பிடுகின்றார். அவ்வாறு இருந்த மக்கள் பழகும்போது எந்தவொரு வேற்றுமையும் இன்றிப் பழகுகின்றனர். அவர்களின் தன்மைக்கேற்றாற் போன்று அனைத்து மதத்தினரும் ஒன்றுகூடுகின்றனர். இவை வழிபாட்டு முறையில் மட்டுமே நிகழ்கிறது. அவ்வாறு நடக்கும் விழாக்களில் அனைவரும் இனம், மொழி பாராமல் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடுகள் இன்றி அனைவரும் சமம் என்ற ஒருமைப்பாட்டு உணர்வுகளை வெளிக்கொணரும் வகையில் அனைவரும் ஒன்றுசேர்ந்து வழிபடுகின்றனர்.

இந்து மதத்திலிருந்து ஏசு கிறித்துவை முழுமையாக ஏற்றுக் கொண்டவர்கள் அவர்களின் நன்மைக்காகவும் உறவுறைகளை விட்டுப் பிரிந்து மதம் மாறியிருந்தாலும் தங்களுக்கென்று கருத்துகளில் வேறுபட்டு காணப்பட்டாலும் இவர்கள் விழாக்களில் சடங்கு முறைகளில் கலந்து கொள்கின்றனர். அவர்களோடு ஒன்றாகக் கலந்து விருந்து உபசரித்தல், நட்பு பாராட்டுதல் போன்ற உணர்வுகளைப் பகிர்ந்துகொண்டு வருகின்றனர். அவ்வாறு மக்களிடையே ஏற்படுகின்ற அனைத்து சிறப்பு தன்மைகளுக்கு ஏற்ற மனதினை ஒழுங்குபடுத்துகின்றனர். இவர்களின் அனைத்து வகையான விழாக்களிலும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ்கின்ற மனப்பான்மையை வளர்த்துக் கொள்கின்றனர். இவற்றினையே முனைவர் பெரியகருப்பு அவர்கள் குறிப்பிடும்போது உலக மக்களைச் சமயத்தின் அடிப்படையில் பட்டியலில் குறிப்பிட்டது போலப் பதினேழு வகைகளாகப் பிரிக்கலாம். இந்தச் சமயங்களில் உலக அளவில் அதிக மக்களால் பின்பற்றப்படும் மதங்கள் கிறித்தவம், இசுலாம், இந்து, பௌத்தம் ஆகிய நான்கு மதங்கள் ஆகும்.

இந்த நான்கு மதங்களைச் சார்ந்த மக்களும் மதத் தலைவர்களும் ஒன்றுபட்டு மதத்தின் பேரில் கலவரம் பூசல்கள் வன்முறைகள் போன்றவைகள் உலக அளவில் மத நல்லிணக்கம் தேவை. அத்தகைய தேவையை அடைய வேண்டுமானால் உலக மக்கள் குறிப்பாக ஒவ்வொரு நாட்டுமக்களும் உலக மத நல்லிணக்கத்தைப் பற்றி அதிக அக்கறை கொள்ள வேண்டும். தன்னால் இயன்ற அளவிற்கு முயற்சிகளை மேற்கொண்டு தம் நாட்டு எல்லைகளைப் பொது எல்லைகளாகக் கொண்டவர்களிடம் மத நல்லிணக்கம் உணர்வைப் புகட்ட முயற்சிக்க வேண்டும்.

இவ்வாறு செய்வதன் மூலமாக இப்பகுதியில் இந்தியாவில் வாழும் மக்கள் அனைவரும் ஒற்றுமையோடு மத நல்லிணக்கத்தோடு அனைவரும் ஒரே குலம், ஒரே

இனம், ஒருதாய் மக்கள் என்ற எண்ணம் வரவேண்டும். இங்கு இவை நடைபெறுகின்றன.

எத்தகைய கருத்துக்களில் வேறுபட்டு இருந்தாலும் வழிபாடு என்று வரும்போது அனைவரும் ஒன்றுகூடி வழிபடுகின்றனர். இதனையே ஆ.ஞானம் அவர்கள் குறிப்பிடும்போது, ஓடுகின்ற பேருந்து. அந்தப் பேருந்தை ஓட்டுகின்ற ஓட்டுநர்களுக்கு முகப்பிலே மூன்று வேறுபாடுகள் இருக்கின்றன. பள்ளிவாசல் இருக்கின்றது. ஏசுகிறித்து, முருகன் படம் இருக்கின்றன. இந்த மூன்று வகையைச் சார்ந்தவர்களும் அந்தப் பேருந்தில் பயணம் செய்கிறார்கள். மூன்று பேரும் விரும்பிய கடவுளை வணங்கிக் கொள்ளலாம். எனவே இப்போது எதிரிகளிடம் இருக்கக்கூடிய ஒற்றுமைக் கூறுகளை அறிந்து உறவு கொண்டாட வரும் காலத்தை அறிகிறோம்.

இவ்வாறு ஒரு பேருந்துகளில்கூட அனைத்து மதங்களும் ஒன்றாக வழிபடத் துவங்கிவிட்டன. அவர்களின் தன்மைகளுக்கு ஏற்றாற்போன்று காணப்படும் சிறப்புமுறைகளையும் பெற்று விளங்கக்கூடியனவாகச் சிறப்புப் பெற்று காணப்படுகின்றனர். இவற்றில் காணப்படுகின்ற அமைப்பு முறைகளையும் செயல்களையும் வைத்துப் பார்க்கும்போது இவ்வாலயத்தின் மூலம் அனைத்து வகையான மக்களும் சமமாகக் கருதப்படுகின்றன. இவர்களில் அனைவரும் தெய்வ நம்பிக்கையோடும் முழுமனத்தோடும் வழிபடத் துவங்குகின்றனர். வழிபாடு அனைவரின் நம்பிக்கைகளாகும். இந்த நம்பிக்கைகளின் மூலம் அனைத்து வகையான மக்களையும் சந்திக்கின்ற வாய்ப்பினைப் பெறுகின்றோர் இவர்களிடையே காணப்படுகின்ற சிறப்பு முறைகளைக் கொண்டு வழிபாடு அமைய ஒருமைப்பாடு ஏற்படுவதற்கு முக்கியக் காரணமாக அமைகின்றது என்று இப்பகுதி மக்கள் அனைவரும் இதன் அடிப்படையில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் சிறப்புக் கூறுகளைப் பெற்றும் காணப்படுகின்றனர். இவற்றின் இயல்பு தன்மைகள் கொண்டு விளங்கப்படுகின்றன. இவ்வாறு இப்பகுதி மக்கள் வழிபாட்டு முறைகளின் மூலம் ஏற்படும் சமய ஒற்றுமையை எடுத்துரைக்கின்றனர்.

**சமயக் கலப்பு**

இந்து மதத்தில் இருந்து அவர்கள் எவ்வாறு இயேசு கிறித்துவை ஏற்றுக் கொண்டு வழிபட்டு வந்தாலும் அவர்கள் முன்னோர்கள் வழிவழியாகப் பழகிவந்த அடுத்த பாரம்பரியம் முற்றிலும் அறியவில்லை. அவர்களுக்குத் தொடர்ந்து இந்து மதத்தின் பாரம்பரியத்தையே இன்றளவும் பயன்படுத்தி வருகின்றனர். அவற்றில் பாரம்பரியமாக இருந்து வருகின்ற பழக்கங்களில் காணப்படுகின்ற பொட்டு வைத்துக்

கொள்ளுதல், தாலி கட்டிக் கொள்ளுதல், நாள் பார்த்தல், சாதகம் பார்த்தல் போன்ற அவர்கள் நிகழ்வுகளில் இருக்கின்ற நிலைக்கும் இடத்திற்கும் ஏற்றாற்போன்று அனைவரின் தன்மைகளுக்கும் இணங்க அவர்கள் கொண்டுள்ள கலப்பு முறைகள் அமைகின்றன. வழிபடுவது கிறித்தவமாக இருந்தாலும் அவர்கள் பழக்கத்தில் உள்ளவைகளாக இன்றளவும் பயன்படுத்தி வருகின்றனர்.

சிலர் சிலுவையை வணங்குதல், இயேசுநாதர் படத்தை வைத்துக் கொண்டு அதற்குச் சந்தனப்பொட்டு வைத்தல், பத்தி கொளுத்துதல், சாம்பிராணி இடுதல், அன்னை மேரியை வணங்குதல் போன்ற இந்துமத பழக்க வழக்கங்களைப் பயன்படுத்துதல் போன்றவற்றால் சமயங்களில் கலப்பு காணப்படுகிறது.

இவை மட்டுமல்லாமல் வருடம் ஒருமுறை நடந்து வேளாங்கண்ணி செல்வதாக வேண்டிக்கொண்டு செல்லுதல், அங்கு நேர்த்திக்கடனாக மொட்டையிடுதல், காது குத்துதல், அதற்குச் சாதகம் பார்த்தல், மாலை மாற்றும் சடங்கு முறைகள் இவற்றிலும் கலப்புகள் காணப்படுகின்றன. இவ்வாறாக செய்வதன் மூலம் கலப்பு ஏற்படுகின்றது. புதுமனை புகுவிழாக்கள் போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்பவர்களுக்குச் சிலுவை அடையாளம் இடுதல், கதவுகளில் சந்தனத்தால் சிலுவை அடையாளம் போட்டு நடுவில் குங்குமத்தால் பொட்டு வைத்தல், இயேசு கிறித்துவின் படத்திற்கு மாலை இடுவது போன்ற சமயக் கலப்புகள் காணப்படுகின்றன. இதன் மூலம் இந்துசமயப் பாரம்பரியம் பயன்படுத்தப்படுகிறது.

கிறித்தவ ஆயர்கள் பெயர்மாற்றம் செய்து இந்துக்களின் குருக்களை எவ்வாறு அய்யர் என்பார்களோ அதுபோன்று அவரையும் ஆயர் என்ற சொல்லைப் பயன்படுத்தி அழைத்து வருகின்றனர். இவற்றில் வேதம் ஓதுதல், சடங்கு செய்தல் ஆகியவைகளும் இந்துக்களின் பாரம்பரியத்தில் ஒன்றாகவும் இதன் மூலம் சமயக் கலப்புகள் காணப்படுகின்றன.

இதேபோன்று இந்துசமய அர்ச்சகர்கள் எவ்வாறு காவி உடையை அணிகின்றாரோ அதுபோன்று கிறித்தவ இனத்தவரும் அவர்களுக்கென்று ஒருவகை உடைகளை அணிகின்றனர். அதில் வெள்ளைநிற அங்கியும், இடுப்பில் கருப்பு கயிறும் கட்டுகின்றனர். இவைகளும் சமயங்களுக்கு இடையில் காணப்படுகின்ற சமயக் கலப்புகளாகும்.

கிறித்தவர்கள் நெற்றியில் சிலுவை இட்டு குருவானவர் பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே ஆசீர்வதிக்கின்றேன் என்று ஓதுவார். அதன்படி இந்து மக்களும் சாலையில் நடந்து செல்லும்போது சிலுவையைப் போட்டு கையெடுத்துக்

கும்பிட்டு காசுகளைத் தெருவில் போட்டுச் செல்கின்றனர். இதுவே சமயக் கலப்பிற்கு ஒரு காரணமாக அமைகின்றது.

## பண்பாட்டுக் கலப்பு

தனிமனிதனின் சிறந்த செயல்களே பண்பாடுகளாக மாறுகின்றன. அச்செயலில் ஒருவரின் தனித்த பண்புநலன்களும் அவற்றைக் கற்றறிந்து உணர்ந்த கூறுகளும் உட்பொதிந்திருக்கும். அப்பண்புகள் பல மனிதரின் ஏற்பினைப் பகிர்ந்துகொள்ளும் தகைமையைப் பெற்றிருக்கும். அது சமுதாயத்தில் பரவலாகப் பெற்று பலராலும் பின்பற்றப்பெறும். அப்போது அப்பண்பாடு ஒரு நிலைக்களன்களாக அமையும்.

உலகத்து மக்கள் இனத்தவர் பலர் அவர்களுடைய வடிவம், பண்பும் வாழ்வியல் நெறிகளும் ஒரு நாட்டின் பண்பாட்டில் சூழ்ந்துள்ள வாழ்வியல் வளங்கள் முதலியவற்றைப் பொறுத்தே அமையும். ஒவ்வொருவரும் அதன் நிலைக்கேற்பத் தனிமைப் பண்பும் நிலவியல் அமைப்பும் வரலாற்றுச் சிறப்பும் அடிப்படையாகக் கொண்டு மிளிர்கின்றன. அவர்தம் பண்பில் ஒவ்வொரு கூறும் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத தன்மை உடையதாக விளங்குகிறது. அவை ஒன்றின் மீது ஒன்று மிஞ்சி நின்று அந்நாட்டின் சிறப்பை உணர்த்தியும் உயர்த்தியும் காட்டுகின்றன.

பண்பாடு, நிலப்பரப்பு அல்லது நாடு சார்ந்ததாகவும், மக்கள் சார்ந்ததாகவும், இடம் சார்ந்ததாகவும் பல பகுதிகளாகப் பிரித்துக் கூறலாம். அவை அனைத்தையும் நெறிப்படுத்தி நோக்கும்போது பண்பாடு என்பது அனைவராலும் பகிர்ந்து கொள்ளக்கூடிய தன்மை உடையது என்ற பொதுமைக் கருத்தை எட்டமுடிகிறது.

பண்பாடு என்பது மக்களின் நடத்தை முறைகளைக் கட்டுக்கோப்பான நிலையில் செயல்படுத்தும் ஒரு மிகப் பெரிய அமைப்பாகும். அவ்வமைப்பில் ஆயிரமாயிரம் கூறுகள் இடம்பெற்றுள்ளன. அவை பல வடிவங்களிலும் அமைந்துள்ளன. இயந்திரங்களின் செயல்பாட்டை ஆயிரமாயிரம் உறவுகளை இணைத்துச் சிறப்பாக வடிவமைத்து இயக்குகின்றனர். அவ்வாறே ஒவ்வொரு பண்பாட்டிலும் ஆயிரமாயிரம் கூறுகள் உள்ளன. அக்கூறுகள் மக்களால் தெரிவு செய்யப்பட்டவை. நெறிப்படுத்தப்பட்டவை. வாழ்வியலுடன் இணைக்கப்பெற்றுள்ளன. இயந்திரத்தின் உறுப்புகளைக் கண்ணால் கண்டறிய இயலும். பண்பாடு மக்களின் உணர்வுகளில் பொதிந்து கிடப்பதால் அதனை செயல்களின் வெளிப்பாட்டின் வாயிலாக மட்டுமே உயர்த்த இயலும். அவ்வாறு பண்பாடுகளைப் பொறுத்தவரை அன்றைய நிலையில் இருந்து இன்றைய நிலை

வரைக்கும் அவர்களின் பயன்பாட்டைப் பொறுத்தே அவர்கள் வகுத்து வந்த நெறிமுறைகளை தொடர்ந்து அதில் இன்பம், துன்பம் ஒழுக்கம், பாரம்பரியம், வழிபாட்டு முறை, வாழ்க்கை முறை இவைகளை வரையறுத்து வாழ்ந்து வந்தனர். அவற்றில் குறிப்பாக மதத்தின் அடிப்படையில் இருவருக்கும் நிறைய மாறுதல்கள் காணப்படுகின்றன. அவற்றில் மாற்றம் ஏற்படும்போது இவர்கள் அதைப் பின்பற்றும்போது அவர்களில் பலவகையான மாற்றங்கள் கலப்புகள் தோன்றுகின்றன. அவற்றில் பிறப்பு முறைகளாகப் பெயர் சூட்டு விழாவில் குழந்தைகளுக்குத் திருச்சபையில் சேர்க்கப்பட்டார் என்பதற்கு ஞானஸ்தானம் கொடுத்து இக்குழந்தை இத்திருச்சபையில் சேர்க்கப்பட்டார் என்றும் இதனை ஆயர் வழங்குவார். அக்குழந்தை 14 வயது பூர்த்தி அடைந்த பின்பு கிறித்தவக் கோட்பாடுகளைக் கற்றுத் தேர்ந்தபின்பு திடப்படுத்தல் அவருக்கு அளிக்கப்படுகிறது. அதனைப் பேராயரே (பிசப்) அளிக்கின்றார். சில இந்துக்களிடம் பூநூல் மாற்றும் நிகழ்வு உள்ளது. இதனையே கிறித்தவர்கள் திடப்படுத்துதல் என்கின்றனர்

**திருமணம்**

இதுபோன்று முகூர்த்தம் பார்த்தல், மாமன்சீர், தாலிகட்டுதல் போன்ற நிகழ்வின்போது முதலில் ஆயர் அவர்கள் செபம் செய்வார். மாப்பிள்ளை அழைப்பு நிகழ்வு மண்டபத்தில் நடைபெறும். அப்போது பெண்வீட்டார் அனைவரும் ஒரு குவளையில் சீர்கொடுத்து அழைப்பர். அதனை அவர்கள் செய்த பின்பு படித்தட்டுகளுடன் மாமன் மாலைபோட்டு அவர்களிடத்தில் கொடுப்பர். பின்பு கிறித்தவர்களுக்கான உடையில் மாப்பிள்ளை, பெண் அலங்கரிக்கப்பட்டு ஆலயத்தின் முன்பு நிற்பர். ஆயர் செபம் செய்து இருவருக்கும் பைபிளைக் கொடுப்பார். பின்பு மோதிரம் மாற்றிக் கொள்வர். பின்பு காலையில் அவர்களின் இந்து முறைப்படி செயின் போடுபவர்கள் போடலாம். தாலி கட்டுபவர்கள் கட்டலாம். அவ்வாறு செய்யும்போது பதிவு செய்பவர். இந்த முறை அரசாங்கப் பதிவேடாகும். இவை இம்மத குருமார்கள் மட்டும் செய்யும்போது அரசு ஏற்கும். இவை அவர்களின் சாதிப் பழக்கத்திற்கு ஏற்றாற்போன்று சடங்கு முறைகளை பயன்படுத்துகின்றனர். தமிழர் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படுகின்றது. இதற்கென்று ஒரு வரன்முறை இல்லை. எவர் வேண்டுமானாலும் அவர்களின் வசதிக்கேற்றாற் போன்று சடங்குகளைச் செய்து வருகின்றனர். இவ்வாறு பலதரப்பட்ட நிகழ்வுகளின் மூலம் அனைத்து மக்களும் அவர்களின் பண்பாடுகளில் உறுதியாக உள்ளனர். இவ்வாறு பண்பாட்டில் கலப்புகள் காணப்படுகின்றன. இவ்வாறு கலப்பு ஏற்படுவதன் மூலம் வளர்ந்துவரும்

நாகரிகத்தை மக்கள் ஏற்கும்போது பின்னானவைகளை விட்டு முன்னானவைகளை நோக்கி நம் பண்பாடு மாற்றம் பெறுகின்றனர். இக்கலப்பின் மூலம் எந்தவொரு ஏற்றத் தாழ்வுகளும் காணப்படுவதில்லை.

சமயப் பூசல்கள் மறைக்கப்படுகின்றன. சுமூகமான வாழ்க்கையை மக்கள் வாழ்கின்ற தன்மைக்கேற்ப பயன்படுத்தப்படுகின்ற அமைப்புக் கூறுகளாகும். இவையே பண்பாட்டுக் கலப்பின் மூலம் ஏற்படும் நிகழ்வுகளாக இப்பகுதியில் வாழும் மக்களிடையே காணப்படும் சிறப்பு முறைகளாகும்; பயன்பாட்டு முறைகளாகும் எனக் கூறப்படுகின்றது.

## ஏற்படும் மாற்றம்

இவ்வாறு சமயங்களிலும் பண்பாடுகளிலும் ஏற்படும் கலப்பு புனிதக் குழப்பத்தில் பெருமளவு மாற்றத்தைத் தந்துள்ளது. இதன் மூலம் சமயங்களிடையே காணப்படும் வேறுபாடுகள் ஏற்படுகின்றன. மக்களிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் மறைக்கப்படுகின்றன. அனைத்து வகையான உரிமைகளும் அனைவருக்கும் சமமாகப் பிரித்து பங்கிட்டுத் தருகின்ற வாய்ப்புகளை இதன் மூலம் பெறமுடிகின்றது. இவற்றின் தன்மைகளுக்கு ஏற்றாற் போன்று மக்களிடையே எந்தவொரு வேற்றுமையும் இன்றி ஒற்றுமையோடு வாழ்வதற்கு இக்கலப்பு ஒருகாரணமாக அமைந்துள்ளது. அனைவரும் ஒரு மொழிபேசும் நிலை தோன்றுகின்றது. இதனால் சடங்கு முறைகள் நிகழ்காலத்திற்கு ஏற்றாற்போன்று தன் வசதிமுறைகளை மாற்றுகின்றனர். இவற்றின் மூலம் எந்தவிதமான அழிவும் ஏற்படவில்லை. இதன் மூலம் சுமூகமான வாழ்க்கை நிகழ்கின்றது. இதில் அனைவரும் சமமாகக் கருதப்படுகின்றனர். இதன் கலப்பு முறையால் புதுப்பழக்கத்தை ஏற்கின்ற மனநிலையை அடைகின்றனர். இவ்வாறாக அவற்றின் சிறப்புத் தன்மைகளாக இப்பகுதியில் வாழும் மக்கள் அவர்களைப் பார்த்து தங்கள் நிலைகளை வளர்த்துக் கொள்கின்றனர். இவையே சமூகப் பண்பாட்டுக் கலப்பினால் ஏற்படும் மாற்றங்களாகும்.

## வழிபாட்டு விழாக்களில் பங்களிப்பு

வழிபாட்டு விழாக்களில் இந்து மக்கள் அனைவரும் சமமாகப் பங்களிக்கின்றனர். அவர்கள் அதில் நடக்கின்ற நிகழ்வுகளைப் பார்வையாளர்களாகச் சிலர் கலந்து கொள்கின்றனர். சிலரின் பங்களிப்பு அம்மதத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் அமைந்துள்ளது. இவ்வாறு பலதரப்பட்ட மக்களின் தன்மைக்கு ஏற்றாற் போன்று அனைத்து இணைப்புகளையும்

உருவாக்குகின்ற விழாக்கள் அமைந்துள்ளன. அதில் அவர்கள் அனைத்து வகையான செயல்களையும் அவர்கள் முன்னின்று செய்கின்ற வாய்ப்பினைப் பெறுகின்றனர். இவர்கள் விழாவின்போது குருத்தோலை தூக்குவது, இனிப்புகள் வழங்குவது மட்டும் அல்லாது பலவகையான செயல்பாட்டு முறைகளும் அவர்களின் பண்பாட்டுத் தன்மைக்கேற்ப அமைந்துள்ளன.

கிறித்துமஸ் விழாவின்போது இந்துக்களும் இவையும் நம்முடைய திருவிழா என்று ஆலயத்திற்குச் செல்வது, புத்தாண்டு அன்று அவர்களும் தேவாலயம் சென்று வழிபடுகின்றனர். அனைவரும் ஒன்றுகூடி எந்தவொரு வேறுபாடும் இன்றிப் பழகுகின்றனர். கிறித்தவ விழாக்களில் வேண்டுதல் பேரில் விரதம் இருப்பர். உபவாசம் இருக்கும்போது இவர்களும் அம்மக்களோடு ஒன்றோடு ஒன்றாக உபவாசம் இருந்து விழாவின்போது இறைவனை நோக்கி வேண்டிக் கொள்வர். இவ்வாறு செய்வதன் மூலம் அவர்கள் வழிபாட்டு விழாக்களில் வாரந்தோறும் கலந்து கொள்வது மட்டுல்லாது இந்துக்களும் கிறித்தவர்களும் ஒருவருக்கொருவர் சமத்துவம் கொண்டு வாழ்வதை உணர முடிகின்றது. இவற்றின் மூலம் அம்மக்களின் ஒருமைப்பாட்டுணர்வினை அறிந்துகொள்ள முடிகின்றது.

**வாழ்க்கை வட்டச் சடங்கில் ஏற்படும் மாற்றங்கள்**

இந்து மக்கள் கிறித்துவத்தை ஏற்றுக்கொண்டது அவர்களுக்கு என்று உள்ள சடங்குமுறைகளை அவர்களால் மாற்ற முடியவில்லை. அவர்கள் மனத்தளவில் இயேசுகிறித்து என்று சொன்னாலும் திருமணம், இறப்பு போன்ற வாழ்க்கை வட்டச் சடங்கில் ஏற்படுகின்ற இறப்பு நிகழ்வுகளைப் பார்ப்பேரமேயானால் அவர்களின் தன்மை இதில் மேளம் அடித்தல் கிடையாது. அமைதி காப்பது வயது முதிர்ந்தவருக்கு வெள்ளைப் பெட்டியும், இளையவர்களுக்குக் கருப்புப் பெட்டியும் செய்து அவர்களை அதில் வைத்து தூக்கிச் செல்வர். ஆயர்கள் குருமார்கள் வெண்ணிறப் பட்டியும் சிவப்பு நிற நாடாக்களும் அணிவர். அவர்கள் அணிந்த ஆடையிலே அவர்களை அடக்கம் செய்வர். அவர்களுடைய சவப்பெட்டியை ஆயர்கள் மட்டுமே தூக்குவர். இதை வேறுயாரும் தூக்கிவர மாட்டார்கள். இறந்ததிலிருந்து காலை 6 மணி முதல் இரவு 6 மணிக்குள் அடக்கம் செய்ய வேண்டும். இதில் எரிக்கின்ற பழக்கமும் நீரில் விடுகின்ற வழக்கமும் இருந்துவருகின்றது. இவ்வாறு மத மாற்றம் அடையும்போது இதுபோன்ற அவர்கள் சடங்கு முறைகளில் மாற்றம் ஏற்படுகின்றது. இவற்றின் மூலம் அனைத்து வகையான சடங்குகளுக்கும் அமைப்பு முறைகளையும் கொண்டு விளக்கப்படுகின்றது.

இவற்றின் மூலம் வாழ்க்கை வட்டச் சடங்கில் ஏற்படும் மாற்றங்களாகவும் அம்மாற்றம் மக்களின் நிலைகளில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது என்றும், இவற்றின் மூலம் அனைத்து நிலைகளிலும் சமூகமாக வாழ்க்கை முறைகள் காணப்படுகின்றன என்றும், அவற்றில் வாழும் மக்கள் தங்கள் நிலைகளாகப் பெற்றுக் காணப்படும் அமைப்பு முறைகளை இவற்றின் மூலமாக எடுத்துக் கூறுகின்றனர். இவையே வழிபாட்டு விழாக்களில் இந்து மக்களின் பங்களிப்புகளும், வாழ்க்கை வட்டச் சடங்கில் ஏற்படும் மாற்றத்தினையும் நன்கு அறியமுடிகின்றது. இவையே இம்மக்களிடையே காணப்படும் நிகழ்வுகளாகும்.

## நேர்த்திக்கடன்

இவர்கள் நேர்த்திக்கடனாக காணிக்கைகள் செலுத்துகின்றனர். அதில் அவர்கள் வேண்டிக்கொண்டதற்கிணங்க தோத்திர காணிக்கை, தேர்வில் வெற்றிபெற வேண்டுமென்ற காணிக்கை ஆகியவற்றைச் செலுத்துவர். நோய்வாயில் இருந்து விடுபடவேண்டும் என்று பொருள் வாங்கி வைப்பதாக வேண்டிக் கொள்வர். அப்பொருள் இருக்குமாயின் அதற்குப் பதிலாகப் பணமாகக் கொடுத்துவிடுவர். காணிக்கைகளைப் பெட்டியில் போட்டுவிடுவர். அவ்வாறு சேருகின்ற காணிக்கைகள் ஏழை எளியோருக்குப் பயன்படுத்தப் படுகிறது. அவ்வாறு செய்வதன் மூலம் இறைவனிடம் வேண்டிக் கொண்ட நிகழ்ச்சிகள் அனைத்தும் நமக்கென்று நடக்குமாயின் காணிக்கை செய்கின்றனர்.

இதில் ஆண்டுக்கு ஒருமுறை காணிக்கைத்திருவிழா ஒன்று நடத்தப் படுகிறது. அதில் அனைத்து வகையான மக்களும் கலந்து கொள்கின்றனர். அதில் அவர்களின் வேண்டுதல் நினைவாகச் சிலர் பலகாரம் போன்றவற்றை அங்கு வந்து விற்பனை செய்வர். அதில் வரும் காணிக்கைகளை அப்படியே கொடுத்துவிடுவர். அவர்களின் தோட்டத்தில் விளையும் தேங்காய், மாங்காய், காய்கறி போன்ற அனைத்து விளைபொருள்களையும் கொண்டுவந்து கொடுப்பர். ஆடு, மாடு, கோழி போன்ற உயிரினங்களையும் இங்குக் காணிக்கையாகக் கொடுயப்பர். அவற்றைத் திருச்சபை வாசலில் ஏலம்விட்டு சபையில் உள்ள அனைவரும் அதனை அவர்களின் வசதிக்கேற்ப எடுத்துக் கொள்வர். அதில் வரும் காணிக்கைகள் ஆலயத்தின் கணக்காளரிடம் ஒப்படைக்கப்பட்டு ஆலயப் பராமரிப்புக்காகவும், அவற்றில் உள்ள பொருள்களை மாற்றவும் பிறருக்கு உதவுவதற்கும் இப்பணத்தைப் பயன்படுத்துகின்றனர்.

**எதிர்மறை விளைவுகள்**

இச்சமயக் கலப்புகளினால் வழிபாட்டு முறை மாறுபடும்போது அவ்வப்போது சிறுசிறு பூசல்களும் மோதல்களும் ஏற்படவே செய்கின்றன. அப்போது சமயப் பெரியோர்களால் சமாதானம் செய்துவைக்கப்படுகிறது. பெரும்பாலும் இவ்விழாக்களில் மக்கள் அனைவரும் ஒன்றாகக் கூடி ஒற்றுமையுடனும் ஒருமைப்பாட்டுணர்வோடும் கொண்டாடி வருகின்றனர் என்பதை அறியமுடிகிறது.

# துணை நூற்பட்டியல்

## துணைநூற்பட்டியல்

கிருட்டிணப்பிள்ளை, எச்.ஏ. **இரட்சணிய யாத்திரிகம்**
கிறித்தவ இலக்கியச் சங்கம்,
சென்னை.
*1971*

கிருட்டிணப்பிள்ளை, எச்.ஏ. **இரட்சணிய சரிதம்**
சரசுவதிமகால் நூல்நிலையம்,
தஞ்சாவூர்.
*1980*

குருசாமி, மா.ரா.போ. (ப.ஆ.) **பாரதி பாடல்கள் (ஆய்வுப் பதிப்பு)**
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.
*2001*

சண்முகசெல்வகணபதி, செ.கற்பகம் **அருள்மிகு புன்னை நல்லூர் முத்து மாரியம்மன் திருத்தலப் பெருமைகள்**
கற்பகம் பதிப்பகம்,
தஞ்சாவூர்.
*2012*

சுந்தரமூர்த்தி, இ. (ப.ஆ.) **பாரதியார் கவிதைகள்**
பாவை பப்ளிகேசன்ஸ்,
சென்னை.
*2000*

செல்வநாதன், க.அ. **மதங்களும் மனித ஒற்றுமையும்**
கவின் பதிப்பகம்,
சென்னை.

பெரியகருப்பு **மதநல்லிணக்கம்**
ரேக்னிக்கோ வெளியீடு,
சென்னை.

*வீரமாமுனிவர்* **திருக்காவலூர்க் கலம்பகம்**
*பூண்டி மாதா பிரிண்டர்ஸ்,*
*திருக்காட்டுப்பள்ளி.*
*1997*

*ஸையத் முபாரக், அ. மற்றும் பலர் (தொ.ஆர்.)* **தஞ்சை தர்காக்களும் கர்பலா சின்னங்களும்**
*சாஹெப் வெளியீட்டகம்*
*13பி தாமரைத் தெரு*
*தங்கம் நகர்*
*தஞ்சாவூர்.*

**பழைய ஏற்பாடு (திருவிவிலியம்)**
*இந்திய வேதாகமச் சங்கம்,*
*பெங்களூர்.*
1997

**புதிய ஏற்பாடு (திருவிவிலியம்)**
*இந்திய வேதாகமச் சங்கம்,*
*பெங்களூர்.*
1997

**பூண்டித் திருத்தலப் பங்கு பொன்விழா மலர்**
*பூண்டி மாதாத் திருத்தலம்,*
*திருக்காட்டுப்பள்ளி.*

**பூண்டி மாதா பசலிக்கா வரலாறு**
*பூண்டி மாதா பசலிக்கா*
*பூண்டி, திருக்காட்டுப்பள்ளி*

# வினாநிரல்

## வினாநிரல்

1. பூண்டி புதுமை மாதா பெயர்க்காரணம் என்ன?
2. அடியார்களின் பங்களிப்பு அவர்களால் ஏற்பட்ட மாற்றங்களும் பற்றி பட்டியலிடுக.
3. ஆரம்பத்தில் பூண்டி எந்த ஆலயத்தின் பங்காக விளங்கியது?
4. பசிலிக்கா என்பதன் பொருள் என்ன?
5. ஆலய வழிபாடுகள் முதன்முதலில் யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது?
6. ஒரு நாளில் எத்தனை முறை வழிபாடுகள் நடத்தப்படுகின்றன?
7. விழா நாட்களில் சாதாரண வழிபாடுகள் போன்றே நடைபெறுமா அல்லது சிறப்பாக நடத்தப்படுமா?
8. ஆண்டு விழா நாட்களில் எந்தெந்த விழாக்கள் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன? அவற்றைப் பட்டியலிடுக.
9. வழிபாடுகளில் பிற மதத்தினர் கலந்துகொள்ள அனுமதி உண்டா?
10. வழிபாட்டு நேரங்கள் எவ்வாறு கடைப்பிடிக்கப்படுகின்றன?
11. அன்பிரவு வழிபாடு என்றால் என்ன? அதன் சிறப்புகள் யாவை?
12. நவநாள் திருப்பலி என்றால் என்ன?
13. வழிபாடுகள் யாரால் நடத்தப்படுகின்றன? ஏன்?
14. வழிபாட்டில் கலந்துகொள்ளும் மற்ற மத மக்கள் தாங்கள் வழிபடுவது போலவே வழிபாடு நடத்துகின்றரா? இல்லை கிறித்தவ மக்களைப் போல வழிபாடு நடத்துகின்றனரா?
15. மற்ற இன மக்கள் இத்தெய்வ வழிபாட்டில் கலந்துகொள்ளும் முறை பற்றி விளக்குக.
16. கிறித்தவ இன மக்கள் வழிபடு நேரத்திலேயே மற்ற மத மக்களும் வழிபடுகின்றனரா?
17. மன்றாட்டு என்றால் என்ன?

18. பாவ மன்னிப்பு என்றால் என்ன? எதற்காக யாரால் யாருக்காக அளிக்கப்படுகிறது?

19. ஆண்டுதோறும் திருவிழா எப்பொழுது ஆரம்பமாகும்?

20. கொடியேற்றிய எத்தனையாவது நாள் திருவிழா தொடங்கும்?


21. மாதாவின் ஆசியினால் பலன்பெற்றவர்களில் கிறித்தவர்கள் அதிகமா? அல்லது பிற இனத்தவர் அதிகமா?

22. இத்தெய்வத்திற்கு மற்ற மதத்தினர் அளிக்கும் காணிக்கைகள் படையல்கள் யாவை?


23. வெளிநாடுகளிலிருந்து வருகை புரிபவர்களில் எந்த இன மக்கள் அதிகம் வந்து வழிபடுகின்றனர்?

24. ஆலயத்தில் பூங்கா அமைப்புகள் இருக்கின்றனவா? அதில் என்னென்ன இடம்பெற்றுள்ளன?

# நிழற்படங்கள்



புன்னைநல்லூர் மாரியம்மன் கோயில் கோபுரம்




மாரியம்மன் கோயில் நுழைவாயில்




பக்தர்கள் திருவிளக்கேற்றுதல்




தங்கப் பாவாடை அலங்காரத்தில் அம்பாளின் எழில்மிகு தோற்றம்




மாரியம்மன்கோயில் தெப்பக்குளம்




தெப்பத் திருவிழா




பக்தர்கள் பால்குடம் எடுத்தல்



அம்பாள் பக்தர்களுக்கு சப்பரத்தில் அருள்பாலித்தல்




மாரியம்மன் கோயில் தேர்த் திருவிழா



திருவோணம் மாரிம்மன் கோயில்





திருவோணம் மாரியம்மன் கோயில் சுற்றுப் பிரகாரம்




திருவோணம் மாரியம்மன் கோயில் பூசாரியுடன் நேர்காணல்



பூண்டி மாதாக்கோயில் நுழைவு வாயில்




பூண்டி மாதாக்கோயில்




இந்து பக்தர்கள் காணிக்கையாக வழங்கிய தங்கத் தொட்டில்




இந்து பக்தர்களின் பவுன் உருண்டை காணிக்கை




தேர்வில் வெற்றிபெற்றதற்கு மாதாவுக்குக் காணிக்கை



மாதாவின் சப்பரப் பவனி



தற்போது உள்ள மாதாக்கோயிலை வடிவமைத்தவர்






களப்பணியில் ஆய்வாளர் தமது மாணாக்கர்களுடன்



தென்னிந்திய திருச்சபை நகர ஆலயம்



ஆராதனை ஆரம்ப பவனி



அருட்தந்தை அருளுரைத்தல்



திருவருட் சாதன பவனி



திருவருட் சாதனை ஆசிர்வதித்தல்



திருவிருந்து பரிமாறுதல்




இரட்டை மஸ்தான் தர்கா, தஞ்சாவூர்




ஹஜ்ரத் ஒதுகான் அவ்லியா, துலுக்கன்பட்டி